# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 18 வெள்ளிக்கிழமை (03.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 281


# அரசமைப்புத் திருத்தம் மக்களுக்காக; எனது பதவிக்காலத்தை நீடிக்கவல்ல

## சுதந்திரக்கட்சியின் 59 ஆவது மாநாட்டில் ஜனாதிபதி



கொழும்பு, செப்டெம்பர் 03

**உத்தேச அரசமைப்புத் திட்டம் மக்களுக்கான அரசமைப்பாகும். எனது பதவிக்காலத்தை இரு தடவைகளுக்கு மேல் அதிகரித்துக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டதல்ல. அப்படி நினைப்பது தவறு. மீண்டும் ஒருமுறை தேர்தலில் போட்டியிடுவதற்கே அது வழி செய்கிறது.**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 59ஆவது மாநாட்டில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்த மாநாட்டில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், ஆரம்பகால உறுப்பினர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். ஜனாதிபதி இங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உலகிலேயே கொடூரமான பயங்கரவாத இயக்கத்தை எமது அரசு ஒழித்துக் கட்டியது உலகமே ஆச்சரியப்படக்கூடியது எனப் பலர் கூறுகின்றனர். இருந்தும் தற்போதுள்ள அரசமைப்பின் படி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற முடியாது என அரசி யல் ஆய்வாளர்கள் தெரிவித்தபோதும் அரசு இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆசியாவிலேயே பலமுள்ள அரசாக அமைத்துக்கொள்ளுமளவுக்கு (24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விஜயம் குறித்து நிருபமா மன்மோகனிடம் இன்று அறிக்கை

சென்னை, செப். 03

இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் நேற்று டில்லி திரும்பினார்.

இந்தியா திரும்பிய நிருபமா ராவ், ஈழத் தமிழர்களின் நிலை குறித்தும் வடக்கில் நடைபெறும் மறுவாழ்வுப்பணிகள் குறித்தும் தான் தயாரித்த அறிக்கையை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இன்று கையளிக்கிறார்.

அகதி முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களின் மீள்குடியேற்றப்பணிகள் மற்றும் இந்தியாவின் நிவாரணப் பணிகளை (24 ஆம் பக்கம் பார்க்க)

# நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக

## ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்

கொழும்பு, செப்.03

அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசால் வரையப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்த யோசனைகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் மாத்திரமல்ல, இந்த நாட்டின் மீதும் இந்த நாட்டின் எதிர்காலத்தின் மீதும் அக்கறையுள்ள எவரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை இந்த நாட்டுக்கு ஒத்துவராது. அது ஜனநாயகத்தை இல்லாதொழிக்கும் ஆயுதமாகும். அதனால்தான், இந்த ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறக்கூடிய நிறைவேற்று அதிகாரமிக்க பிரதமர் முறைமை பற்றி அரசுடன் நாம் பேசினோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க பிரதமர் முறைமையைக் கொண்டு வருவது தொடர்பில் அரசு சாதகமான பதிலை முதலில் தெரிவித்தது. அதுபற்றி எம்முடன் விரிவாகப் பேசியது. இறுதியில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை மேலும் நீடிக்கும் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியில் ரணில்!

கொழும்பு, செப். 03

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று டில்லி விரைந்தார்.

கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட அவர், டில்லி செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு மீது குற்றச்சாட்டுகளை அள்ளி வீசினார்.

இதேவேளை, இலங்கையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் (24 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கில் 89,000 விதவைகள்; இதற்கு முக்கிய காரணம் இராணுவமே!

## மட்டக்களப்பு எம்.பி. செல்வராஜா குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 03

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 89 ஆயிரம் பெண்கள் கணவனை இழந்துள்ளனர் எனவும், அவர்களில் 25 ஆயிரம் பேர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சபையின் கூட்டத்தில் பேசும் போது அவர் மேலும் கூறியவை வருமாறு:

இயற்கை அழிவுகளை விட போரினாலே அதிகளவான பெண்கள் பாதிக்கப்பட்டுள் (24 ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவ காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....
www.uthayan.com


## தமிழ்க் கட்சிகளின் அரங்கம் நிருபமாவுடன் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, செப். 03

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவை நேற்றுக் காலை சந்தித்துப் பேசியது.

இந்த அரங்கம் நிருபமா ராவிடம் 12 முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து அவை தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரியது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. இந்து ஆலயத்தில் பொன்சேகாவின் புதல்விகள் தேங்காய் அடித்து வழிபாடு

கொழும்பு, செப். 03

தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் புதல்விகள் உட்பட சிங்கள மக்கள் பலர் (24 ஆம் பக்கம் பார்க்க)


புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



நீலாம்பரி உணவகம் இல. 744, கே.கே.எஸ்.வீதி (தட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம்.

காலம்: இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை

காலை 7.50 மணி முதல் 9.00 மணிவரையுள்ள சுபநேரத்தில் திறந்து வைக்கப்படும்.

சுவையான சைவ, அசைவ உணவு வகைகள்
குளிர்பான வகைகள் மற்றும்
சிற்றுண்டி வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(102856) - வை.சுதாகரன் (உரிமையாளர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# லக்ஷமன் ஜெயக்கொடியின் மறைவால் பேரிழப்பு இரங்கல் செய்தியில் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, செப் 03

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான லக்ஷமன் ஜெயக்கொடியின் மறைவு கட்சிக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்- இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தனகலப் பிரதேசத்தில் பிறந்த லக்ஷமன் ஜெயக்கொடி 1950களிலேயே அரசியல் நுழைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினராகத் திகழ்ந்தார். முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் நாடாளுமன்றச் செயலராக இருந்து அவருக்கு வழிகாட்டியாகவும் விளங்கியவர். திவுலுபிட்டிய தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட லக்ஸ்மன் ஜெயக்கொடி தனது கடும் உழைப்பால் கலாசார மற்றும் சமய விவகார அமைச்சர், வெளிவிவகாரப் பிரதியமைச்சர், பாதுகாப்புப் பிரதியமைச்சர் என்னும் உயர் பதவிகளை வகித்தார்.

புற்றுநோய் காரணமாக கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த லக்ஸ்மன் ஜெயக்கொடி கடந்த 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## விண்ணக வாழ்வின் இரண்டு ஆண்டுகள்



அருட்சகோதரி

**மேரி லுசிலா** [தி.கு]

பிறப்பு
22.12.1919

இறப்பு
05.09.2008

*"உயிரும் உயிர்ப்பும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"*



துறவற வாழ்விலும், சமூக வாழ்விலும்
மாணவர்களின் கல்வி வாழ்விலும்
நீங்காத நினைவுகளை ஏற்படுத்தி,
எளிமையான வாழ்வை வாழ்ந்து,
எமக்கு எல்லாம் மாதிரி காட்டிச் சென்ற
அருட்சகோதரியே; என்றும் மறவோம்
உம் அன்பினை, பணியினை
எம் உயிர் உள்ளவரை உங்கள் ஆன்மா
இறைசந்நிதியில் இளைப்பாற
இறைவனை வேண்டுகின்றோம்.

*இவரின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலிகள் நாளை [04.09.2010] சனிக்கிழமை காலை யாழ்/புனித அடைக்கல அன்னை ஆலயம் - 6மணி, பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் -6 மணி, யா/புனித மரியன்னை பேராலயம் -6 மணி, யா/அருள் ஆச்சிரமம் 6மணி ஆகியவற்றில் இடம்பெறும்.*

(சி/570550) குடும்பத்தினர்.

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

எழுதுமட்டுவாழ், கிளாலி என்னும் முகவரியைச் சேர்ந்த சிவனேஸ்வரன் தினேஸ்காந் என்பவருடைய பேர்ஸுடன் தேசிய அடையாள அட்டை (902431152V) கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 0779281417

## கணனி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணனிகள் பழுதடைந்துவிட்டனவா? உடனடியாக உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித்தருகின்றோம். புதிய கணனிகள் நியாய விலையில் விற்பனைக்கும் உண்டு. அழையுங்கள்: 0777483840

## வெறும் காணி விற்பனைக்கு | வெறும்காணி விற்பனைக்கு

இராச வீதி, கோப்பாய், லைடன் பாரிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் 13 பரப்பு வெறும் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0789148913

## இதய அஞ்சலி



**முருகையா முருகதாசன்**
(தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க மூத்த உறுப்பினர்)

தெல்லிப்பழை துர்க்கையம்பாள் தேவஸ்தான வளர்ச்சிக்கு அயராது உழைத்த தொண்டர் முருகதாசன் அவர்கள் கொழும்பில் திடீரென மரணமடைந்த செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். துர்க்கை அம்பாளின் திருவடிகளில் அன்னாரது ஆத்மா ஆறுதல் பெறப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

**ENGLISH CLASS**

INTEGRATED ENGLISH COURSE
எழுத, பேச, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
ஆசிரியர்: S.JAISAN
ஆரம்பம்: நாளை (04.09.2010-சனி)
பிரிவு I: 10-11 a.m
பிரிவு II: 12-01p.m
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கிட்டிணன் கந்தசாமி**
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யா/வரணி மகாவித்தியாலயம்)

பிறப்பு
03.07.1943

இறப்பு
06.08.2010

06.08.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறி, 05.09.2010 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகாத்மா வீதி,
மணி மஹால்,
நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

## மெய்கண்டான் ம.வி மலர் வெளியீடு

சுழிபுரம், செப் 03

பண்ணாகம், மெய்கண்டான் மகா வித்தியாலய "மெய்கண்டான் மலர்" வெளியீட்டு விழாவும் பரிசு தினம் மற்றும் நிறுவுநர் நாளும் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார்.

நினைவுப் பேருரையை பழைய மாணவரான ஆசிரியர் தி.முத்தரசன் நிகழ்த்துவார். (ஒ-28)

## வடமராட்சியில் தேங்காய் விலை அதிகரிப்பு

வடமராட்சியில் தேங்காயின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது. ஒரு தேங்காயின் உச்சவிலை ரூபா 40 தொடக்கம் ரூபா 45 வரை காணப்படுகின்றது.

ஏ9 பாதை திறக்கப்பட்ட பின்னர் கடந்த காலங்களில் யாழ்.குடாநாட்டில் தேங்காயின் விலை வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. தற்போது தென்னிலங்கையிலிருந்து தேங் ... குறைவடைந்துள்ளது. (த-190)

## சிங்கள வகுப்புகள்

2010 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேட சிங்கள வகுப்புகள் ஆரம்பம் 04.09.2010

★ சிங்களத்தில் சரளமாக எழுத, வாசிக்க, பேச ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படுகிறது.
ஆரம்பம்: 04.09.2010 சனிக்கிழமை
காலை 7-8, 8-9 மணி மாலை 3-4, 4-5 மணி
★ சம்பாஷணை மூலம் சிங்களம்
ஆரம்பம்: 11.09.2010 சனிக்கிழமை
மாலை 5.30-6.30 (சனி,ஞாயிறு)

இன்றே எம்முடன் இணைந்து உங்கள் எதிர்காலம் நோக்கிச் செல்லுங்கள்.

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவனம்
41, Racca Lane,
Chudikuli, Jaffna.
T.P: 077703729

ஆசிரியர்: ஸ்ரீ மாஸ்டர்

## உயர்வினால் உவகையுற்றோம்



**ப.விக்னேஸ்வரன்**

அறமுண்டு நெஞ்சத்தில்
ஆய்ந்து நோக்கும் திறமுண்டு
செயவல்ல உளமுண்டு
மறமுண்டு மதியுண்டு
கலையுண்டு அதில் நல்ல கருத்துண்டு
ஆகையினால் உயர்வுண்டு
உயர் கண்டார்
வடக்கு மாகாண கல்விப்
பணிப்பாளராய் ஆற்றல்மிகு
திரு.ப.விக்னேஸ்வரன்
வடக்கு இனி கல்வியிலே
மேன்மையுறும் காண்!

உவகை கொள்வோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

## துயர் பகிர்கின்றோம்

அமரர்

**நல்லையா தனபாலசிங்கம்**
(வேலணை தென்கிழக்கு, கிராம அலுவலர்)



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சத்தியபாமா தனபாலசிங்கம் அவர்களின் அன்புத் துணைவரின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

பாடசாலைச் சமூகம்,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா தியாகராஜா



சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகராஜா நேற்று (02.09.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் மணிமேகலையின் (கனடா) அன்புக் கணவரும் குமாரசாமி, இராசம்மா, காலஞ்சென்ற துரைமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலகவதி (இந்தியா), காலஞ்சென்றவர்களான சிவானந்தன், செல்லையா ஆகியோரின் மைத்துனரும் சத்தியபாமா (இந்தியா), சத்தியசங்கர், அனுசா (கொழும்பு), தயாளன் (அவுஸ்திரேலியா), ரவிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நா.சண்முகரத்தினம்,
பழைய தபாற்கந்தோர் வீதி,
கொக்குவில். (102857)

தகவல்:
சகோதரர்கள்,
மருமக்கள்.

### முருகையா முருகதாசன்



தெல்லிப்பழையைச் சேர்ந்த முருகையா முருகதாசன் நேற்றுக் கொழும்பில் காலமானார்.

அன்னார் முருகையா-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மைந்தனும் அனுசியா தேவியின் அன்புக் கணவரும் பிறேமிதர்சினி, ஹரிவர்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமதி, தேவதாசன், காலஞ்சென்ற குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கருணாவதி, நித்தியானந்தன் ஆகியோரின் பிரிய மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் கல்கிசை மகிந்த பால மலர்ச்சாலையில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 5 மணியளவில் கல்கிசை இந்து மயனத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/91, பரகும்பா பிளேஸ்,
வெள்ளவத்தை.
தொ.பே: 0112553548

தகவல்:
சு.முருகையா (தந்தை)
பாணவடைப்பு, தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கரிசனை கொள்ளுமா இந்தியா?

இந்தியாவின் வெளியுறவு செயலாளர் நிருபமாராவ் அம்மையார் இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு திரும்பியிருக்கிறார்.

வடக்குக்கு மட்டுமன்றி கிழக்குக்கும் அவர் சென்றார். வன்னிப் பகுதியில் மீள்குடியேற்றம் நடைபெறுவதை நேரில் பார்த்து மதிப்பீடு செய்வதற்கு அரசாங்க அதிகாரிகளுடன் 'ஒழுங்கு செய்யப்பட்ட' விஜயங்களை மேற்கொண்டார். அவர் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களை நேரில் சந்தித்து அவர்களின் நிலையை கேட்டறியவில்லை என்ற ஆதங் கமும் குற்றச்சாட்டும் எழுந்துள்ளன. தமிழ்ப் பகுதிகளின் நிலை குறித்த அவரது அறிக்கை எவ்வாறு அமையும் என் பது இனித்தான் தெரியும். அவருடைய விஜயத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழர்களின் அடிமட்டத்துக்கு தேய்ந்து போயுள்ள வாழ்வாதார நிலையை, மீள்குடியேற்றம் என்று கூட்டிச் செல்லப்பட்ட மக்கள் அவர்களது சொந்த வாழ் விடங்களுக்குச் செல்ல முடியாது தூரத்தே 'தடுத்து' வைக் கப்பட்டிருப்பதைப் பார்த்தாரா, அது குறித்து இலங்கை அரச அதிகாரிகளிடம் விளக்கம், வியாக்கியானம் எதுவும் கேட்டாரா என்பது குறித்த தகவல் இல்லை.

இலங்கைத் தமிழ் மக்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக இந்தியா திறந்த மனதுடன் உதவத் தயாராக உள்ளதாக,- எல்லா வழிகளிலும் பங்காற்றத் தயாராக உள்ளதாக - யாழ்ப்பாணத்தில் மக்களைச் சந்தித்து உரையாற்றிய போது தாராண்மையுடன் தெரிவித்தார், அவ்வளவுதான்.

வடக்கு, கிழக்கு மக்கள் கடந்த காலங்களில் கசப்பான அனுபவங்களை அனுபவித்தார்கள். அவற்றை மறந்து எதிர்கால நல்வாழ்வுக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். அவரின் விஜயமும், இனிப்பூட்டும் பேச்சும் இந்திய அரசு ஆற்றிய கண்துடைப்பு என்று பளிச் எனத் தெரிகின்றது. சென்றேன், பார்த்தேன், அறிக்கை சமர்ப்பித்தேன் என்ற வழக்கமான முறையில் இவரது விஜயம் அமையக் கூடாது என்பதே தமிழர்களின் விருப்பம். ஆனால் அது அந்தக் கட்டமைப்புக்குள்ளேயே அமையும் என்றே எதிர்பார்க்கலாம்.

குடாநாட்டு மக்களின் நாடியைத் தொட்டுப் பார்ப்பதற்கு நிருபமா யாழ்ப்பாணத்தில் நடத்திய கலந்துரையாடலில், பேராசிரியரும் தமிழரசுக் கட்சியின் மூத்த பிரமுகருமான சி.க.சிற்றம்பலம் வெளிப்படையாகவும் இறுக்கமாகவும் எடுத்துக் கூறிய கருத்துக்கள் அவரது மனதை குறுகுறுக்கச் செய்திருக்கும்.

நிருபமா தென்னிந்தியாவில் கேரளாவைச் சேர்ந்தவர். இந்தியாவின் 'சவுத் புளொக்' எனப்படும் முக்கிய அரச பீடக் கிளையை கேரளாவின் புத்திஜீவிகளே அலங்கரிப்பது உண்டு. மத்திய அரசின் கொள்கை வகுப்பின் பலமான செல்வாக்குச் செலுத்துவதில் இவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

இத்தகைய ஒரு பின்புலத்தில் - நிருபமா ராவிடம் இந்திய அரசின் வேடத்தைக் கலைக்கும் விதத்தில், பேராசிரியர் நெற்றி அடி போல உறைக்கும் விதத்தில் பல உண்மைகளை எடுத்துரைத்தார்.

* இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத் தாததால் தீர்வு முயற்சி அப்போது தோல்வியடைந்தது. இந்த நடவடிக்கை எமது மக்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியது.

* ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தத்தை உரிய முறையில் அமுலாக்குவதற்கு இலங்கை அரசுக்கு இதுவரை வேண்டிய அழுத் தத்தை இந்தியா கொடுக்கவில்லை.

* பல அப்பாவித் தமிழ் மக்கள் பலி யாவதற்குக் காரணமாக இருந்த இறுதி யுத்தத்துக்கு ஆதரவாக இந்தியா பல நவீனரக ஆயு தங்களை வழங்கி கிளி நொச்சி, மாங்குளம் போன்ற இடங்களில் ஏராளமானோர் உயிரிழக்கக் காரணமாக இருந்தது என்று எமது மக்கள் இன்னமும் கருதுகிறார்கள்.

* இறுதிப் போர் முடிவடைந்து பல மாதங்கள் ஆகிவிட்ட நிலையில் இன்னமும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எட்டப்படவில்லை. இது குறித்து இந்திய அரசும் எதுவித அழுத்த மும் கொடுக்கவில்லை.

* தமிழர் பிரதேசமான வடக்கு - கிழக்குப் பகுதியில் யுத்தம் முடிவுற்ற பின்னரும் இராணுவத்தினரை அதிக எண்ணிக்கையில் வைத் திருப்பதுடன் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்படும் குடியேற்றங்களை இந்தியா தடுக்கவில்லை.

* போர் முடிவுற்ற பின்னர் இனியாவது இந்தியா எமது அரசியல் பிரச்சினையைத் தீர்க்க உதவும் என்று தமிழ்மக்கள் நம்பினார்கள். ஆனால் இந்தியா அதனைச் செய்யத் தவறிவிட்டது.

* தமிழருக்குரிய பிரச்சினைகளை கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக நீடித்து இந்நாட்டு அரசுகள் அவர்களைச் சீரழித்து வருகிறது. ஆனால், இந்தியா கண்களை மூடிக்கொண்டிருக்கிறது.

* போரின் பின்னர் எமது மக்களின் வாழ்க்கை சீரழிந்துள்ளது. அவர்கள் இருக்க வீடுகள் இல்லை. வெட்டவெளியில் வசிக்கிறார்கள். மொத்தத்தில் பிச்சைக்காரர்கள் ஆகிவிட்டார்கள். இந்த நிலையை நீக்க இந்திய அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார் பேராசிரியர்.

* இது விடயத்தில் இந்தியா உணர்வுபூர்வமாகப் பற்றுறுதி யுடன் செயற்பட்டு உரிய தீர்வு ஒன்றை விரைந்து ஏற்ப டுத்த வேண்டும் என்பதே எமது மக்களின் கோரிக்கையும் நிலைப்பாடும் ஆகும்.

பேராசிரியர் தெரிவித்த மேற்படி கருத்துக்கள் அத்தனையும், ஈழத்தமிழர்களின் ஒட்டுமொத்த மனநிலை என்பதே உண்மை. எமது மக்களின் மன உளைச்சல்களையும் உணர்வுகளையும் அஞ்சாது அடித்துக் கூறிய பேராசிரியரின் கருத்துக்கள்; நிலைப்பாடுகள் இந்திய அரசாங்கத் தலைவர்களுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ தெரியாதவை அல்ல.

தங்களது நலன்களை முன்னிறுத்தி, மற்றவர்கள் மீது கரிசனை கொள்வதாக வேடம் போடுவதை விட, தமது தலைமைப் பீடத்தை இலங்கைத் தமிழர்களின் அரசியல் விடிவுக்கு மனம் வைத்துச் செயற்பட தூண்டும் சக்தியும் அதிகாரமும் நிருபமாவுக்கு உண்டா? பொறுத்திருந்து பார்ப்போமே!

இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுத்து, தமிழர்கள் தமக்குரிய உரிமைகளைப் பெறுவதற்கு இந்தியா, இரட்டை வேடம் போடாமல் மனப்பூர்வமாகத் தனது செல்வாக்கைச் செலுத்துமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரை ஏ-9 வீதி அதிவேகப் பெருந்தெருவாக மாற்றப்படும்

## கிளிநொச்சியில் இடம்பெற்ற வைபவத்தில் பிரதி அமைச்சர்

கொழும்பு, செப்.3

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஏ-9 வீதி ஓமந்தையில் இருந்து யாழ்ப்பாணம் வரை அதிவேகப் பெருந்தெருவாக மாற்றப்படவுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

அண்மையில் 8 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைப் பொறியியல் அலுவலகத்தையும் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகமொன்றையும் திறந்து வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார்.

கனகராயன் மற்றும் மாங்குளம் பிரதேசங்களில் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்கள் இரண்டை அமைச்சர் திறந்து வைத்தார். இந்த இரு அலுவலகங்கள் 5.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வடக்கின் ஏ-9 வீதியும் ஏனைய மார்க்கங்களும் உள்ளடங்கும் ஆயிரத்து 200 கிலோ மீற்றர்கள் தூரம் வரையில் இவ்விதம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் இந்த வீதிகள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்னர் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடுவதற்கே இந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இவற்றை திறந்து வைக்கும் விழாவில் பாரம்பாரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர். டபிள்யூ ஆர். பிரேமசிறி, கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பொறுப்பான படை அதிகாரி பிரிகேடியர் விக்கிரமசூரிய ஆகியோரும் மீளக்குடியமர்ந்த மக்களும் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில் வைத்து பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் வசதி கருதி அவர்களுக்கு 80 சைக்கிள்களும் மீளக் குடியேறியுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களும் அமைச்சரால் வழங்கப்பட்டன. (த)

# நிலத்தடி குழாய்களைப் பொருத்தும் பணியில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நிலத்தடிக் குழாய் மூலம் கேபிள்களை இணைக்கும் பணிகளை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

கம்பங்கள் மூலம் முன்னர் வழங்கப்பட்டு வந்த தொலைபேசி இணைப்புக்களால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை தவிர்க்கும் நோக்கில் தற்போது நிலத்தடி கேபிள் இணைப்பை சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் அனைத்துப் பிரதேசங்களிலும் மேற்கொண்டு வருகின்றது.

அனைத்துப் பகுதிகளிலும் நிலத்தடிக் குழாய்கள் புதைக்கப்பட்டு அவற்றுக்கூடாகக் கேபிள்கள் இணைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (த-26)

# மாகாணப் பாடசாலை ஆசிரியர்களுக்கு தேசியப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் இல்லை

## சுற்று நிருபம் மூலம் கல்வியமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப்.3

மாகாணப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் தேசியப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படும் நடைமுறையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

மறு அறிவித்தல் வரை இத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படும் எனவும் கல்வியமைச்சின் செயலாளரால் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பாடசாலைகளில் ஆசிரிய சமநிலையை ஏற்படுத்துவது தொடர்பாக இத்தினங்களில் பரிசிலனைகள் இடம்பெற்று வருவதால் அவை முடிவுறும் வகையிலும் ஆசிரிய இடமாற்றங்கள் இடைநிறுத்தப்படுவதாகவும் மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கு கல்வியமைச்சு தெரியப்படுத்தியுள்ளது.

மேலும், மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் தேசியப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்குமாறு கடந்த ஏப்ரல் மாதத்தில் கல்வியமைச்சினால் சுற்று நிருபமொன்று வெளியிடப்பட்டிருந்தது.

அந்த சுற்று நிருபத்துக்கு அமைய தேசியப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பெருமளவில் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். இப் புதிய தீர்மானம் காரணமாக அவர்களுக்கு அந்த வாய்ப்பு இழக்கப்படுவதாகவும் கல்வியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றனர். (த)

# காலாவதியான உணவுப் பொருள் சோதனையில் இனிமேல் பொலிஸாரும்

## சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். நகரில் காலாவதியான உணவுப் பொருள்களின் விற்பனையைத் தடுக்கும் வகையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து பொலிஸார் நேற்று அதிரடிச் சோதனை நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நடவடிக்கையில் முற்கட்டமாக நேற்று 15 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் சுமார் 55 பொலிஸாரும் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

முதற்கட்டமாக 13 வியாபார நிலையங்கள் இச் சோதனையின் போது சிக்கியுள்ளன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ தெரிவிக்கையில்:-

குடாநாட்டில் டெங்கு நோய் பரவி வருவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருப்பது யாவரும் அறிந்த விடயம். இது போல மேலும் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுத்து யாழ். குடா நாட்டில் சுகாதாரத்தைப் பேணுவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதன் ஒருகட்டமாகவே உணவகங்களில் காலாவதியான உணவுப் பொருள்களின் விற்பனையைத் தடுக்கும் பொருட்டும், உணவுப் பொருள்கள் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகின்றமை மற்றும் சமையல் அறைகளுக்கு அருகில் மலசல கூடங்கள் அமைந்திருத்தல் தொடர்பாக கிடைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாகவும் இன்று பொலிஸார் அதிரடிகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ந்து இது போன்ற சோதனை நடவடிக்கைகள் மூலம் யாழ். நகரில் சுகாதாரம் பேணப்படுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இதற்கு அனைத்துப் பொது மக்கள் மற்றும் வியாபாரிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -என்றார். (த-16)

# உலக அஞ்சல் தின நிகழ்வு நாளை வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், செப்.3

உலக அஞ்சல் தின நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தபால் மா அதிபர் எம்.கே.பி. திஸநாயக்க கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பிரதி தபால் மா அதிபர் ஆர்.டி.பி. காமினி ஆகியோரும் விசேட விருந்தினர்களாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். கல்வியியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும். (த-23-26)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 19 | : 04.09.2010 |
| | : சனிக்கிழமை |
| திதி | : ஏகாதசி |
| | பி.இ. 01.47 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | மு.ப. 09.04 வரை |
| சுபநேரம் | : 03.05 - 04.35 |
| ராகுகாலம் | : 09.05 - 10.35 |

# மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தும் கூட்டம் பச்சிலைப்பள்ளியில்

தென்மராட்சி, செப்.3

பச்சிளப்பள்ளி பிரதேசத்தில் இதுவரை மீள்குடியமர்த்தப்படாத பகுதிகளில் மீள்குடியமர்வை துரிதப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பச்சிளப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கலந்துரையாடலில் இதுவரை மீள்குடியமர்வு இடம்பெறாத பிரிவுகளைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஆலய நிர்வாகிகள் உட்பட பொது அமைப்புகளின் பிரதி நிதிகளையும் ஏனைய முக்கியஸ்தர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இயக்கச்சி, முகாவில், கோவில் வயல், சங்கத்தார்வயல், கிளாலி, முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி, இந்திராபுரம், அரசர்கேணி, கச்சார்வெளி, அல்லிப்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களை கலந்துகொள்ளுமாறு ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார்.

இப் பிரதேசங்களில் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு தூரிதமாக மீள்குடியமர்வை மேற்கொள்ள வலியுறுத்தி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு மக ஜர் தயாரிக்க ஆலோசனைகளை வழங்குமாறும் கோரியுள்ளார். (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

சுன்னாகம் மேற்கு, சுன்னாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த கீர்த்தனா காலச்சந்திரன் என்பவரது தேசிய அ.அட்டை [888172939V], பல்கலைக்கழக அ.அட்டை என்பன 25.08.2010 அன்று யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் பஸ்சில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 0772372535

# பல தடவைகள் தடைப்பட்டுப்போன அரச அதிபர்கள் மாநாடு கைகூடியுள்ளது

## அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி என்கிறார் இமெல்டா

அரச அதிபர்களின் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முன்னர் பல தட வைகள் முயற்சி செய்த போதும் யுத்த சூழ்நிலை அதற்கு இடம்கொடுக்கவில்லை.

இம்முறைதான் அது கைகூடியுள்ளது என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச அதிபர்களின் மாநாடு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. மாதாந்தம் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுழற்சி முறையில் நடத்தப் படுகின்ற மாநாடு யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு பலதடவை முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அது இம்முறை தான் கைகூடியுள்ளது.

இந்த மாநாட்டில் மாவட்ட ரீதியான பிரச்சினைகள் ஆராயப்பட்டு அடுத்த கட்ட எதிர்கால அபிவிருத்தித்திட்டம் குறித்தும் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

## தவறிவிட்டது

நுணாவில் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா யோகலிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை [691453472V], விசேட அ.அட்டை என்பன அடங்கிய கைப்பேர்ஸ் கொழும்பிலிருந்து யாழ். வரும் பயணத்தின் போது ஓமந்தைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 0776630497 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் முதலாம், இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (புதிய, பழைய பாடத்திட்டம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் எல்லா ஆண்டுகளுக்குமான பரீட்சைகள் பின்வரும் நேர அட்டவணையின்படி ஆரம்பமாகும். நேர அட்டவணை தொடர்பான விவரங்களை பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

| | ஆரம்ப திகதி |
|---|---|
| 1 ஆம் வருடம் 2 ஆம் அரையாண்டு | 15.09.2010 |
| 2 ஆம் வருடம் முதலாம் அரையாண்டு | 09.09.2010 |
| 3 ஆம் வருடம் முதலாம் அரையாண்டு | 17.09.2010 |
| 4 ஆம் வருடம் முதலாம் அரையாண்டு | 27.09.2010 |

02.09.2010 - பதிவாளர்.

## வேலை வாய்ப்பு

எமது மின்தறி ஆலையில் கீழ் வரும் வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 15.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் காரியாலயத்தில் நேரில் தொடர்புகொள்ளவும்.

1. விற்பனையாளர் (க.பொ.த.சா/த. பரீட்சையில் கணிதம் உட் பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்)
2. தொழிலாளி 3 மின்தறி நெசவாளர்.
4. மின்தறி நெசவு பயிலுநர் (பயிற்சிக் காலத்தில் அலவன்ஸ் வழங்கப்படும்)
5. மின்தறி பொருத்துநர் - பயிலுநர்.(பயிற்சிக் காலத்தில் அலவன்ஸ் வழங்கப்படும்)

பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

(சி/570541) இருபாலை வீதி, கோண்டாவில்.



## காரைநகர் சிவன் கோயில் ஈழத்து சிதம்பரம் ஸ்ரீ சந்திரசேகர மூர்த்தி நூற்றாண்டு விழா (உற்சவ மூர்த்தி - சிவன் அம்பாள்)

**1008 கலச சங்காபிஷேகம், சதாபிஷேகம்**

எதிர்வரும்04.09.2010சனிக்கிழமைகாலை6மணி முதல் மதியம் ஒரு மணி வரை விசேட 1008 கலச சங்காபிஷேகம், விசேட திரவிய ஹோமம், அபிஷேகம், பூசை என் பன நடைபெற்று மாலை 7.30 மணிக்கு வசந்த மண் டப பூசை இடம்பெற்று சுவாமி, அம்பாள் வீதியுலா வருவர். இவ் விழா பொது உபய மாக நடைபெறுகின்றபெற்று. அனைவரும் வருக சுவாமியருள்பெறுக.

ஆ.அம்பலவிமுருகன்
மு.சுந்தரலிங்கம்
ஆதீனகர்த்தாக்கள்

(சி/570540)

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் நேற்று (02.09.2010) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (முன்னாள் தலைவர், சங்கானை ப.நோ.கூ. சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், சிவமோகன் (யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை), சிவஞானவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், Dr.கயமலா சிவமோகன் (மத்திய ஆயுர்வேத மருந்தகம், சரசாலை), தனுஷா சிவஞானவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் நிவேதிதையின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.09.2010) வியாழக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் மூளாய் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.சிவசுப்பிரமணியம் (கணவர்),
சி.சிவமோகன் (மகன்), 0772397056, 0213214809.

தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

## அரசமைப்புத் திருத்தம் தொடர்பான கருத்துரை

யாழ்ப்பாணம், செப். 03

அரசமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான சமகால விவாதம் என்ற தலைப்பில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்க கலந்து கொண்டு கருத்துரையை வழங்குவார்.

கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல்இடம்பெறும்.ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மனித உரிமைகள் இல்லத்தினர் அழைக்கின்றனர். (க)

## நூல்கள் அன்பளிப்பு

காரைநகர், செப். 3

கரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

2 லட்சம் ரூபா பெறுமதியான 400 நூல்களை கொழும்பு வத்தகரான சுகணநாதன் கல்லூரி அதிபர் பொ. சிவானந்தராசாவிடம் கையளித்துள்ளார். (ஒ-250)

## இசை இறுவட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு கல்லூரியின் 10 ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களினால், 'புலரும் பொழுதுகள்' என்னும் இசை இறுவட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வேதி. செல்வரட்ணம் பங்கு பற்றவுள்ளனர். (ஒ-15)

## சமூக உளவள ஆற்றுப்படுத்துநருக்கான வெற்றிடம்

MEDECINS SANS FRONTIERES வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து (எம்.எஸ்.எப்-கொலண்ட்) ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம். இந்நிறுவனமானது மக்களுக்கு அத்தியாவசியமான வேளைகளில் மனிதனால் அல்லது இயற்கையால் ஏற்பட்ட அழிவுகளினால் துன்புறுபவர்களுக்கும் ஆயுத வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மருத்துவ உதவியை சாதி, சமய, இன மற்றும் அரசியல் இணக்கப்பாடின்றி வழங்கி வருகின்றது. கீழே குறிப்பிட்டுள்ள பதவிக்கு சரியான விண்ணப்பதாரிகளை கிளிநொச்சியில் எமது புதிய திட்டத்திற்காக எதிர்பார்க்கின்றோம்.

சமூக உளவள ஆற்றுப்படுத்துநர் - கிளிநொச்சி

பொறுப்புகள்:

★ பயனாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு தனிநபர் மற்றும் குழுவற்கான சமூக உளவள ஆதரவினை செயற்படுத்துதல்.
★ தனிநபர் மற்றும் குழு மருத்துவ சிகிச்சை செயற்பாடுகளை நடத்துதல்.
★ மனோவியாதி-கல்வி ஒன்றுகூடல்களை நடத்துதல்.

தேவையானவைகள்:

★ சமூகப்பணி அல்லது மனோதத்துவ சாஸ்திரம் அல்லது தேசிய ஸ்தாபனத்தின் ஆற்றுப்படுத்தல் சான்றிதழ் ஆகியவற்றில் இலங்கையின் தகுதியைப் பெற்றிருத்தல்.
★ மொழித்தகைமை: ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் (கதைப்பதிலும் எழுதுவதிலும்) தேர்ச்சி பெற்றிருத்தல்.
★ கிளிநொச்சிப்பகுதியில் வசிப்பவராக அல்லது வசிக்க விருப்பமுடையவராய் இருத்தல்.
★ வரையறையற்ற வைத்தியர்களின் கோட்பாடுகளுக்கும் குறிக்கோள்களுக்கும் மற்றும் மருத்துவ நீதி நெறிகளுக்கும் பொறுப்பாகுதல்.

இந்த பதவியில் ஆர்வம் இருப்பின் தயவுசெய்து உங்களுடைய சுருக்கமான சுயவிவரக்கோவையை செப்ரெம்பர் 15, 2010 திகதிக்கு முன்பாக அனுப்பவும்.

வரையறையற்ற வைத்தியர்கள் ஒல்லாந்து
49/44A கோவில் வீதி, குருமன்காடு,
வவுனியா.

தொ.பே:(94) 024 324 8030 / தொலை நகல்: (94) 024 222 0381
அல்லது இணைய அஞ்சலுக்கு: msfh-kilinochchi-pc@field.amsterdam.msf.org

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத்தேர்விற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

## நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு கேள்வி அறிவித்தல்-2010

நெடுந்தீவுப் பிரதேச சபையால் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் M-09, M-08) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப்பத்திரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கேள்விகள் பரிசீலிக்கப்படும்போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. கேள்விப்படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி 13.09.2010 பி.ப. 2 மணிவரை. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 20.09.2010 நண்பகல் 12 மணிவரை. கேள்விகள் திறக்கப்படும் அன்றையதினம் (20.09.2010) பி.ப. ஒரு மணியளவில் திறந்து பரிசீலிக்கப்படும்.
6. மேலதிக விவரங்களை நெடுந்தீவுப் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா. | மீளளிக்கப்படாத கேள்விப்படிவப் பணம் ரூபா. | மீளளிக்கப்படாத VAT+NBT 12%+3% ரூபா. |
|---|---|---|---|---|
| 01 | மாகாளித்துறை யுவானியார் கோயில் வீதி திருத்தம் | 11,000.00 ரூபா | 750.00 ரூபா | 112.50 ரூபா |
| 02 | கலாசார மண்டப மலசலகூடம் அமைத்தல் | 4,000.00 ரூபா | 500.00 ரூபா | 75.00 ரூபா |
| 03 | நெடுந்தீவு மேற்கு நூலகக்கட்டடம் அமைத்தல் | 15,000.00 ரூபா | 750.00 ரூபா | 112.50 ரூபா |

நெடுந்தீவுப் பிரதேச சபை,
நெடுந்தீவு. 01.09.2010 (சி/570542)

சோமலிங்கம் தம்பிராசா
செயலாளர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் அடுத்த வாரம் 2,455 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

## கடற்றொழிலை மேற்கொள்ளவும் அனுமதி

பருத்தித்துறை,செப்.3

வடமராட்சி கிழக்கில் உள்ள ஆறு கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளார்கள். எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் இந்த மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் நடை பெறவுள்ளன. செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

பலாலி படைத் தலைமையகத்தில் க்டந்த 28ஆம் திகதி யாழ்.மாவட்ட கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் ம்ஹிந்த ஹத்துருசிங்கவுடன் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையி லான குழுவினர் நடத்திய கலந்துரையாட லின்போது யாழ்.மாவட்ட கட்டளைத் தள பதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க இப்பகுதிகளில் மக்களை குடிய மர்த்துவதற்கான அனுமதியை வழங்கியி ருந்தார். அதற்கமையவே 2 ஆயிரத்து 455 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 531 பேர் ஆறு கிராம சேவகர் பிரிவுகளிலும் மீளக்குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் 1991, 1996, 2006 ஆகிய காலப் பகுதிகளில் பல தடவைகள் இடம்பெயர்ந்ததுடன் 2006 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டு தற்போது கொடிகாமம், இராமாவில் நலன்புரி முகாம், குடத்தனை இடைத்தங்கல் முகாம் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளார்கள்.

இப்பிரதேசத்தில் மீளக்குடியமரவுள்ள குடும்பங்களில் 1385 குடும்பங்கள் கடற் றொழிலை மட்டும் வாழ்வாதாரத் தொழி லாக கொண்டிருப்பதனால் அவர்கள் தமது தொழிலை அப்பகுதிக் கடலில் மேற் கொள்வதற்கும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்து ருசிங்க அனுமதி வழங்கியுள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். இம்மக்கள் மீளக்குடிய மர்த்தப்படுவதையடுத்து கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையம் மூடப்பட வுள்ளதாகவும் தெரிவித்தார்.

மீளக்குடியமரவுள்ள மக்களுக்கான அடிப்படை வசதிகளையும் கட்டுமான வசதிகளையும் யாழ்.மாவட்ட செயலகம் மேற்கொள்ளவுள்ளது.

கடந்த 30ஆம் திகதி திங்கட்கிழமை அம்பன் கிராம சேவகர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இடத்தில் 81 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட் டன. (த-190-236)

## விசேட தேவையுடையோருக்கு தனியான குடும்ப அட்டை

நவாலி,செப்,3

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவி லுள்ள விசேட தேவைக்குரியவர்களுக்கு குடும்ப அட்டையொன்று சமூக சேவைத் திணைக்களத்தினால் விசேடமாக வழங்கப் படவுள்ளது.

இதற்காக இவர்களின் பூரண விவரங் கள் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக நேற்று வியாழக்கிழமை முதல் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இன்று 3ஆம் திகதி ஜே/140 மானிப் பாய் மேற்கு, கிராம சேவையாளர் பிரிவி லும் 6ஆம் திகதி ஜே/139 மானிப்பாய் தெற்கு பிரிவிலும், 7ஆம் திகதி ஜே/143 சண்டிலிப்பாய் மேற்கு பிரிவிலும் இவை வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட சகலரையும் காலை 9 மணிக்கு தத்தமது கிராம சேவையாளர் அலுவலகங்களில் சமுகமளிக்குமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந் தவராசா கேட்டுள்ளார். (த-100)



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' வெளியீட்டு விழா நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக் கரசுவிடம் இருந்து நூலின் முதல் பிரதியை பேராசிரியர் ம.வேதநாதன் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதி யினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

## வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம்; யாழ்ப்பாணத்தில் மீளாய்வுப் பணிகள்

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ்.மாவட்டத்தில் இருந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யப் பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர் பான மீளாய்வுப் பணிகள் கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமை யில் நடைபெற்ற மீளாய்வுப் பணியில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள், இடமாற்றச்சபை பிரதிநிதி கள் மற்றும் வலயங்களின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இடமாற்றப் பட்டியல் மீளாய்வு செய் யப்பட்டு இறுதிப் பட்டியலை மீளாய்வுப் பணியில் ஈடுபட்ட சகலரதும் கையொப் பங்களுடன் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப் படவிருப்பதாகவும் ஆளுநரின் தீர்மானத் துக்கு அமைய மேல் நடவடிக்கை தொட ரும் என்றும் மீளாய்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த உயர் அதிகாரி ஒருவர் தெரி வித்தார். (ஒ-11)

## அன்னை திரேசாவின் வாழ்க்கை வரலாறு நாடகம்

யாழ்ப்பாணம்,செப்.3

முத்திப்பேறுபெற்ற அன்னை திரேசா வின் வாழ்க்கை வரலாறு நாடகம் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கர வெட்டி புனித அந்தோனியார் ஆலய முன் றிலில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டிப் பங்குத் தந்தை அருட் திரு. போல் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நாடகம் அன்னை திரேசாவின் நூற்றாண்டு விழாவை முன் னிட்டு மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16)

## கல்விமாணிப் பரீட்சையில் 59 மாணவர்களும் சித்தி

யாழ்ப்பாணம்,செப்.3

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிப் பட்ட நெறி 2008/2009 கல்வி ஆண்டு முதலாம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய கல்வி நிறுவக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பிராந்திய நிலை யத்திலிருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 59 மாணவர்களும் சித்திய டைந்துள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்க ளின் சொந்த முகவரிகளுக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித் துள்ளார். (த-26)




## பளைப் பிரதேச சபையின் கட்டடங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.3

போர் அழிவுகளிலிருந்து விடுபட்டு மீண்டும் புதுப் பொலிவு பெறுகின்றது பளைப் பிரதேசம்.

பளை நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரதேச சபை தனது சொந்தக் கட்டடத்தில் தனது சேவையை வழங்கி வருகிறது. மக் களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற் காகச் சபைக்கு பிரமாண மூலதன நன் கொடைத் திட்டத்தினால் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக சபை யின் செயலாளர் எஸ்.சிவப்பிரகாசம் தெரி வித்தார். அவர் மேலும் கூறுகையில்;

இந்த நிதியின் மூலம் கட்டடத் திருத் தப் பணிகள், மலசல கூடவசதி, மின்சார வேலைகள், கதவு, யன்னல்கள் போன்றன திருத்தியமைக்கப்படுகின்றன. அலுவலக உபயோகத்துக்குப் போதுமான தளபாட வசதிகளும், கணனி வசதிகளும் கொள் வனவு செய்யப்படவுள்ளன.

இரண்டு மாடிகளைக் கொண்டமைந்த இப்பிரதேச சபைக்கு மேல் மாடிக் கட்ட டத்தைத் திருத்தி அமைக்க நிதி வழங்கப் படவில்லை. தற்போது நடைபெற்று வரும் திருத்தப்பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முடிவடையும்.

சபையின் உப அலுவலகம் இயக் கச்சியில் அமைந்துள்ளது. அதன் திருத்தப் பணிகளுக்கும் பிரமாண மூலதன நன் கொடை நிதியாக 5 லட்சம் ரூபா உள்ளு ராட்சி திணைக்களத்தின் அனுசரணை யுடன் கிடைக்கப் பெற்றுள்ளது.

உப அலுவலகத்தில் திருத்தப் பணி களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருத்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் மக்களின் தேவைக்காக அலுவலகம் திறந்து வைக் கப்படும் என்றார். (த-313-315)

## சங்கரத்தைப் பாலம் புனரமைப்பு



சங்கானை,செப்.3

சங்கானை ஊடாக சங்கரத்தை செல்லும் அந்திரான் வாய்க்கால் பாதையில் ஒரு புதிய பாலம் அமைக்கப்படுகிறது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் இப்பாலம் அமைக்கப்பட்டு வருவதையும் அதற்கான உபகரணங்கள், நீர்க்குழாய்கள் என்பன கொண்டுவரப்பட்டுள்ளதையும் படத்தில் காணலாம்.

புதிதாக அமைக்கப்படும் இப்பாலத்தின் மூலம் மழை காலங்களில் இப்பாதையூடா கப் பயணம் செய்யும் பொதுமக்கள் எதுவித சிரமமின்றிச் செல்வதற்கு வாய்ப்பேற் பட்டுள்ளது. (த-29)

## கல்விமாணி விரிவுரைகள்

யாழ்ப்பாணம்,செப்.3

தேசிய கல்வி நிறுவக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பிராந்திய கல்வி மாணிப் பட்டநெறி முதலாம்,மூன்றாம் வருட மாணவர்களுக்கான கல்வி சார் பாடங்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமை யான நேரத்திற்கு நடைபெறும் எனத் தெசிய கல்வி நிறுவகத்தின் இணைப்பா ளர் அறிவித்துள்ளார். (த-26)

## பச்சிலைப்பள்ளியில் இன்று சிரமதானப் பணிகள்


யாழ்ப்பாணம்,செப்.3


டெங்கு ஒழிப்பை முன்னிட்டு பச் சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட் பட்ட கிராமங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இவற்றின் அடுத்த கட்டமாக இன்று வெள்ளிக்கிழமை மாசார் பளைக் கிராமத் தில் கிராம மக்களும் பிரதேச சபை ஊழியர் களும் 671ஆவது படையணியைச் சேர்ந்த இராணுவத்தினரும்இணைந்து ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று சிரமதான நடவடிக் கைகளை மேற்கொள்ளவுள்ளனர் என விசேட ஆணையாளரும் பிரதேச சபைச் செயலாளருமான சி.சிவப்பிரகாசம் தெரி வித்துள்ளார். (த-313-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண மண்டபம் திறப்பு விழா





ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயில் இரட்ணசபாபதி திருமணமண்டபம் மங்களகரமான திறப்பு விழா
**காலம்: 03.09.2010 சுப நேரம்: காலை 9.40 மணிமுதல் 11.40 மணிவரை.** அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



இவ்வண்ணம்
தர்மகர்த்தாக்கள்

**விழா சிறப்புற வாழ்த்துவோர்**

| | | | | |
|---|---|---|---|---|
| **V.S.S சாப்பாட்டு நல்லெண்ணெய்**<br>சோமசுந்தரம் வீதி,<br>ஆனைக்கோட்டை. | **தனிஸ் ரெக்ஸ்**<br>மூத்தநயினார் கோயிலடி,<br>நவாலி வீதி,<br>ஆனைக்கோட்டை. | **சாருஜன் பான்சி கவுஸ்**<br>ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். | **சரவணன் கட்டட உபகரணங்கள் விற்பனையாளர்**<br>மானிப்பாய் வீதி,<br>ஆனைக்கோட்டை சந்தி,<br>ஆனைக்கோட்டை. | **துரைஐயா மண்டபம்**<br>நவாலி வீதி,<br>ஆனைக்கோட்டை. |
| **கமலா ஸ்ரோர்ஸ்**<br>நவாலி வீதி,<br>ஆனைக்கோட்டை. | **பரிமளா ஸ்ரோர்ஸ்**<br>மானிப்பாய் வீதி,<br>யாழ்ப்பாணம். | **தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்**<br>மூத்தநயினார் கோவிலடி,<br>ஆனைக்கோட்டை. | **சந்திரன் பான்சி பலஸ்**<br>நவாலி வீதி,<br>ஆனைக்கோட்டை. | **சாம்சன் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்**<br>நவாலி வீதி,<br>ஆனைக்கோட்டை. |

# "தரிசனம் நிறைவேற்றப்பட்டது"

## எக்காளத்தொனி சர்வதேச ஊழியங்களின் யாழ். திருச்சபை கட்டட கோலாகலத் திறப்புவிழா

**காலம் : 04.09.2010 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு**

பிரதம விருந்தினர் :

பாஸ்டர் : ரூத் எவன்சன் – டென்மார்க்

டார்ஜிலிங் கிறிஸ்ரீனா – டென்மார்க்



பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்.
சகரியா 4:6

## தரிசனம் பொய்ப்பதில்லை

எக்காளத்தொனி சர்வதேச ஊழியங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விரோத மது விற்பனையைத் தடுக்க யாழ். பிராந்தியத்தில் விசேட பொலிஸ் குழு

## பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தகவல்

யாழ்ப்பாணம்,செப்.3

சட்ட விரோத மது விற்பனையைத் தடுக்கும் பொருட்டு யாழ்.பிராந்தியத்தில் விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டு நேற்று முன்தினம்முதல் அது செயற்படத் தொடங்கியுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் ஏற்பாட்டின் பேரில் யாழ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவாவின் வழி நடத்தலில் இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ். பிராந்தியத்தில் சட்டவிரோத மது விற்பனை, பொது இடங்களில் மது பாவனையாளர்களின் தகாத நடவடிக்கைகள், கலாசாரச் சீர்கேடான நடவடிக்கைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் விசேட பிரிவு யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்பது பொலிஸ் பிரிவுகளுக்கும் சென்று சேவையில் ஈடுபடவுள்ளது.

எனவே சட்டவிரோத மதுப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பாகப் பொதுமக்கள் முறையிடும் பட்சத்தில் இப்பிரிவினர் உடன் நடவடிக்கை எடுப்பார்கள் - என்றார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்.

இது தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்கள் 021 321 7444 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-16)

# நல்லூரில் நகை திருட முயன்ற கிழக்கிலங்கை இளைஞர்கள்

## சிவில் உடையில் நின்ற பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்,செப். 3

நல்லூர் ஆலய உற்சவத்தில் பக்தரொருவரின் நகையைத் திருட முற்பட்ட கிழக்கிலங்கை இளைஞர்கள் இருவர், சிவில் உடையிலிருந்த பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூர்த் திருவிழாவின் போது குறித்த இருவரும் பக்தரொருவரின் தங்கச் சங்கிலியைத் திருட முற்பட்டனர். இதன் போது பக்தர்களோடு பக்தர்களாகச் சிவில் உடையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் வாழைச்சேனை மற்றும் காத்தான் குடியைச் சேர்ந்தவர்களான 25 வயதுக்குக் குறைவான இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-16)

## ரம்ழான் சிந்தனை

இந்த ஆண்டு எப்படியாவது குர்-ஆனின் முழுப்பரிமைத்தையும் அர்த்தத்துடன் ஓதி முடித்துவிடுங்கள். இதுவே ரம்ழான் மாதத்தின் சிறப்பாகும்.

எம்.ஏ.காதர்

# முதியோருக்கு பால்மா வகைகள்

நவாலி,செப்.3

நவாலி கிழக்கு ஜே- 135 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முதியோர் சங்கத்தினர் தமது அங்கத்தவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் குலுக்கல் மூலம் அங்கர் பால்மா பெட்டிகளை வழங்கி வருகின்றனர்.

கடந்த மாதம் மட்டும் 10 பால் மா பெட்டிகள் இவ்வாறு வழங்கப்பட்டன.

மேலும் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வந்த அங்கத்தவர்களுக்கு 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் வழங்கப் பட்டு வருகின்றது.

இவர்களது இச்செயலை அனைத்து மக்களும் பாராட்டியுள்ளனர். (த-100)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# 300 ரூபா வரை கட்டணம் செலுத்தி நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகள்

## குமுதினியால் வந்த வினை

யாழ்ப்பாணம்,செப். 3

ஒருநாள் ஓடும். மறுநாள் பழுது என நிறுத்தப்படும். பின் திடீரெனச் சேவைக்கு வரும் நெடுந்தீவுக்கான அரச படகான குமுதினி இவ்வாறான அற்புதங்களை நிகழ்த்துவதால் நெடுந்தீவு மக்கள் வேறு வழியின்றி சிறிய பிளாஸ்டிக் படகுகளில் 300 ரூபா வரை பயணக் கட்டணமாகச் செலுத்தித் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குமுதினி படகுச் சேவையில் ஈடுபடாத சமயங்களில் இந்தச் சேவையை மேற்கொள்ளும் படகுகளில் ஒரு குறிப்பிட்ட அளவு பயணிகளே செல்ல அனுமதிக்கப்படுவதால் துறைமுகத்தில் எஞ்சி நிற்கும் பயணிகள் தமது முக்கிய அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு 'பிளாஸ்ரிக்' மீன்பிடிப்படகுகளில் பயணிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளனர்.

இந்தப் படகுக்கான பயணக்கட்டணமாக ஒருவரிடம் தலா 300 ரூபா வரை அறவிடப்படுகின்றது. நெடுந்தீவு மக்களுக்கான பயணச் சேவை இலவசம் என முன்னர் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரை இந்த இலவசச் சேவை சீராகக் கிடைக்கவில்லை எனவும் அரச படகு ஒன்றுவிட்டு ஒருநாள் பழுதடைவதும் நியதியாகிவிட்டதெனவும் நெடுந்தீவு மக்கள் விசனத் தெரிவிக்கின்றனர்.

இதற்கு மாற்றீடாகக் கடந்த காலங்களில் மேற்கொண்டது போல் மற்றொரு படகைச் சேவையில் ஈடுபடுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்வருவதில்லை எனவும் பொதுமக்கள் கூறுகின்றார்கள். (த-7)

# உள்ளூராட்சிமன்ற வருமானவரி மேற்பார்வையாளர்கள் பரிசோதகர்களுக்குச் சீருடை வழங்குமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய்,செப்.3

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்கள், பரிசோதகர்கள் ஆகியோருக்கான சீருடை வழங்கப்படாததினால் கடமை நேரங்களில் அவர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே இவர்கள் தங்கள் கடமைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு வசதியாகச் சீருடை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை உள்ளூராட்சிச் சேவைகள் தொழிற்சங்கத்தின் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பாளர், வடமாகாண ஆளுநரைக் கோரியுள்ளார்.

இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்கள், பரிசோதகர்களுக்கு ஏற்கனவே சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இன்று வரை சீருடைகள் வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் கடமை நேரங்களில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நீதிமன்றங்களில் சமுகமளிப்பதற்கும் தயங்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றார்கள்.

பல வருடங்களாக இடம்பெற்று வந்த போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவுகின்றது.

எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களும், பரிசோதகர்களும் தங்கள் கடமைகளை இலகுவாக மேற்கொள்வதற்கும் கடமை நேரங்களில் தங்களை உறுதிப்படுத்துவதற்கும் வசதியாகச் சீருடைகளை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தொழிற்சங்க இணைப்பாளர் ஆளுநரை வேண்டியுள்ளார். (எ-115)

# குடாநாட்டில் தற்போதுள்ள மின்வெட்டு ஞாயிற்றுக்கிழமையுடன் சீரடையும்

## பிரதிப் பொதுமுகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,செப். 3

குடாநாட்டில் பரவலாக அமுலில் இருக்கும் மின்வெட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையுடன் சீரமைக்கப்படும்.

''நொதேன் பவர்'' நிறுவனத்தின் இயந்திரம் மீண்டும் பழுதடைந்துள்ளதாலே இத்தகைய மின்வெட்டு அமுல் படுத்தப்பட்டுள்ளது.


மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'நொதேன் பவர்' நிறுவனத்தின் இயந்திரம் மீண்டும் பழுதடைந்தமையால் குடாநாட்டில் கடந்த 27 ஆம் திகதி முதல் மின்வெட்டு பலவலாக அமுல்படுத்தப் பட்டது.

பழுதடைந்த இயந்திரம் நாளை சனிக்கிழமை சீரமைக்கப்படும் என்று 'நொதேன்பவர்' நிறுவனத்தினர் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

எனவே நாளை மறுதினம் 5 ஆம் திகதிக்கு முதல் மின்சாரம் சீராக வழங்கப்படும். அதுவரைக்கும் பொதுமக்கள் அளவுக்கதிகமான மின்விளக்குகளைப் பாவிப்பதைத் தவிர்ப்பதன் மூலம் மின்வெட்டு நேரம் கணிசமாக குறைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)



குடாநாட்டில் அண்மையில் பெய்த மழை வடமராட்சி விவசாயிகளின் வெங்காயப் பயிர்களைப் பேரழிவுக்குட்படுத்தியுள்ளது. வெங்காயப் பயிர்கள் மழை வெள்ளத்தில் அமிழ்ந்திருப்பதையும், செய்கை பண்ணப்பட்ட வெங்காயத் தோட்டம் வெள்ளக்காடாகக் காட்சியளிப்பதையும் முதலிரு படங்களிலும், மழை வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் வெங்காயப்பயிர்களை ஈ.பி.டி.பி அமைப்பின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் செந்தில்நாதன் ஆகியோர் பார்வையிடுவதையும், வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் வெங்காயப் பயிர்களை விவசாயிகள் நீரினுள் இருந்து எடுத்து லான்ட் மாஸ்டரில் ஏற்றுவதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: எஸ்.மூர்த்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை

## தீர்க்கப்படாத காணிப் பிணக்குகள் -ஆக்கிரமிப்பின் அடையாளங்கள்

திருகோணமலையின் குச்சவெளிப் பகுதியில் வீதியோரத்தில் தனது காணியைச்சுற்றி அடைக்கப்பட்ட கம்பி வேலியில் நின்று வீதியால் போய்வரும் வாகனங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் பண்டார மெனிக்கே.

அவர்களது மண் குடிசையின் வாயிலில் அவளது கணவன் அமர்ந்திருந்தான்.

சில நொடிகளில் நான் ஒரு ஊடகவியலாளர் என்பதை உணர்ந்துகொண்ட மெனிக்கே வீட்டினுள் சென்று பல தடவை பல பேருக்கு காட்டப்பட்ட ஆவணங்களடங்கிய ஒரு கோப்பினை எடுத்து வந்தாள்.

சில நிமிடங்களுள் சுற்றயலிலிருந்தவர்களும் அங்கு கூடிவிட்டனர்.

மெனிக்கே வாழும் நிலம் உண்மையில் அவளுடையதல்ல. அவளுடன் வேறு பல குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டாலும் எவருக்கும் அந்த நிலம் சொந்தமானதல்ல.

''இந்த நிலத்தில் மேற்படி விண்ணப்பதாரி வசிக்கிறார். தற்காலிக கொட்டகை வழங்க முடியும்'' என குறிப்பிட்டு காணிகளுக்கான உதவி ஆணையாளர் கையெழுத்திட்ட ஆவணம் மட்டுமே அவர்களிடம் உள்ளது.

பாரம்பரியமாக தமிழ் மக்கள் வாழ்ந்த திருகோணமலையின் இந்தப் பகுதியிலேயே 2009இல் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

அவர்களது நிலை தெளிவற்று இருப்பதுடன் அவர்களுக்கே தமது எதிர்காலம்பற்றித் தெரியவில்லை.

அவர்களது பிள்ளைகள் பாடசாலைகளில் இணைக்கப்படவில்லை.

அரசு அவர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளித்த கூரைத் தகடுகளையும் வழங்கவில்லை.

போரினால் அவர்களது பெற்றோர்கள் விரட்டியடிக்கப்பட்ட இடங்களுக்கே அவர்கள் மீண்டும் திரும்பலாம் என பல்வேறு அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகளைத் தவிர அவர்களுக்கு வேறெதுவும் தெரியாது.

அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் எவ்வளவு காலத்திற்கு முன்னர் வந்தார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் போரின் காரணமாக அவர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்.

போருக்குப் பின்னான காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் தோன்றியிருக்கும் அதிகாரிகள் இன்னமும் தீர்வு காணாத நிலப்பிரச்சினைக்கு இவர்களுடைய பிரச்சினை வெறும் உதாரணமே.

இவ்வாறு கொழும்பில் இருந்து வெளிவரும்'' செய்தித்தளத்தில் எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை 'புதினப்பலகை'க்காக மொழியாக்கம் செய்தவர் தி.வண்ணமதி.

போர் முடிவுக்குவந்ததன் விளைவாக அபிவிருத்திப் பணிகளுக்காகவும், குடியேற்றத்திற்காகவும் அதிக நிலப்பரப்பு துப்பரவாக்கப்பட்டிருப்பதால் மாத்திரம் திருகோணமலை மாவட்டத்தில் காணிப்பிரச்சினை உருவெடுக்கவில்லை.

யார் இதனை உருவாக்கினார்கள், யார் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று மிகவும் நுணுக்கமாகவும் இயன்றளவு விரைவாகவும் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

போரின் பின்னான அபிவிருத்தி என்று வரும்போது இனரீதியிலான சமநிலை என்பது தவிர்க்க முடியாத சிக்கல்கள் நிறைந்த ஒரு அம்சம் எனக்கூறுவது அரசியல் ரீதியில் பொருத்தமானதாகக் கருதுகிறேன்.

குறிப்பாக நீண்ட பல காலமாகவே இன ரீதியிலான பதற்றம் நிலவி வரும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் எழுவது தவிர்க்க முடியாதது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் சிங்களக் குடும்பங்கள் விற்றுவிட்டுச் சென்ற காணிகளை மீளவும் கோருவதற்காக இந்தக் குடும்பங்கள் மீண்டும் திரும்புகின்றன எனச் சில தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

இது தவிர குறித்த ஒருவரின் காணி நான்கு பக்கங்களாலும் அபகரிக்கப்பட்ட சம்பவங்கள் பலவும் இடம்பெற்றிருப்பதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.



போர் இடம்பெற்ற காலத்தில் குறிப்பிட்ட குடும்பங்கள் தங்களது காணிகளைக் கைவிட்டுவிட்டுச் சென்றிருந்தார்கள். காணிகளின் உண்மையான சொந்தக்காரர்கள் தற்போது சொந்த இடங்களுக்குத் திரும்பும்போது காணிகள் நான்கு பக்கங்களாலும் அபகரிக்கப்பட்டிருப்பதை அறிகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலும் இதுபோன்ற பிரச்சினைகள் எழுந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

உள்ளூர் சமூகத்தவர்களைப் பெரிதும் குழப்பும் வகையில் காணிகள் விற்கப்பட்டிருக்கின்றன அல்லது அபிவிருத்தியடைந்திருக்கின்றன. அயலவருடன் கலந்துபேசாமல் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதுதான் தற்போது பெரும் பிரச்சினைகள் உருவெடுப்பதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

போரின் பின்னர் அமைதி ஏற்பட்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் நிலாவெளிப் பகுதியிலுள்ள தனது காணியினைப் பார்ப்பதற்காக நீண்ட காலத்திற்குப் பின்னர் காணியின் சொந்தக்காரர் ஒருவர் சென்றிருக்கிறார்.

ஆனால் திருகோணமலைப் பகுதியில் தற்போது செயற்பட்டுவரும் பலம்பொருந்திய வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு யாரோ ஒருவரால் இவருடைய காணி விற்கப்பட்டிருப்பதைக் காணி உரிமையாளர் கண்டார்.

இந்த நிலையில் காணி உரிமையாளர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

நிலாவெளியினைச் சேர்ந்த பி.முபாராக் என்ற வியாபாரிதான் கிராமத்தின் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருக்கிறார்.

'எந்தவிதமான தடைகளுமின்றி மீன்பிடிக்காக குறிப்பட்ட வீதியினைப் பயன்படுத்துவதற்காக வேண்டுகை' என்ற தலைப்பிலமைந்த கடிதமொன்றை இவர் குடியரசு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கென முகவரியிட்டு அனுப்பியிருக்கிறார்.

இந்தக் கிராமத்தில் வாழும் 240 குடும்பங்கள் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக குச்சவெளி கரையோரப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகவும் இவர் எங்களிடம் விளக்கினார்.

அண்மையில் 'பூபதி ஹவுஸ்' என்ற நிறுவனத்தின் சொந்தக்காரர் ஒருவர் குறிப்பட்ட கரையோரத்தின் ஒரு பகுதியினை விலைக்கு வாங்கியிருப்பதோடு அதனூடாகச் செல்லும் வீதியினையும் மூடி வேலி அடைத்திருப்பதால் இந்த வீதியினைப் பயன்படுத்தி மீனவர்களால் கடலுக்குச் செல்லமுடியவில்லை.

தனது பலசரக்குக் கடையில் வியாபாரத்தினைக் கவனித்தவாறு எங்களுடன் உரையாடிக்கொண்டிருந்த முபாராக் போரின் பின்னர் எழுந்திருக்கும் காணிப்பிணக்குகள் தொடர்பாகவும் கருத்துக் கூறினார்.

''இந்தப் பகுதியிலுள்ள காணிகளில் எமது கிராமத்தவர்கள் வெங்காயம் உள்ளிட்ட மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தற்போது வெளியேயிருந்து வருபவர்கள் இந்தக் காணிகள் தங்களுடையது என்கிறார்கள். அதற்கான ஆதாரங்களை அவர்கள் காட்டுகின்ற போதும் காணி தொடர்பான இந்த ஆவணங்கள் உண்மையானதா என எமக்குத் தெரியவில்லை.

எனக்குச் சொந்தமான இரண்டு காணிகள் தொடர்பான பிணக்கும் தற்போது எழுந்திருக்கிறது. போர் இடம்பெற்ற காலத்தில் இந்தக் காணிகளுக்கு உரிமை கோருவோர் எவரும் இல்லை'' என அவர் தொடர்ந்தார்.

எங்கெல்லாம் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றதோ அங்கு அரசியலும் கலந்திருப்பதைக் காண முடிகிறது.

வனப்பான கடற்கரையைக் கொண்டிருக்கும் திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளை அரசாங்கம் 'தெற்கினைச் சேர்ந்த இலட்சாதிபதிகளுக்கு' வழங்கி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்துகிறது.

கரையோரக் காணிகளைத் தமதாக்கும் இந்த இலட்சாதிபதிகளில் பலர் ராஜபக்ஷ குடும்பத்திற்கு நெருக்கமானவர்கள் எனவும் கூட்டமைப்பு கூறுகிறது.

''நிலாவெளி தொடக்கம் குச்சவெளி வரையிலான கரையோரத்தில் 26 காணித் துண்டுகள் தென்பகுதி இலட்சாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது'' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலைக் கிளையின் துணைச் செயலாளர் சூசைப்பிள்ளை ஜேசுதாசன் கூறுகிறார்.

''ஒவ்வொரு காணித்துண்டும் எட்டு ஏக்கர் நிலத்தினைக் கொண்டது. றைகம் உப்புத் தொழிற்சாலைக்காக 1805 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிண்ணியா தொடக்கம் புத்தளம் வரைக்கும் அல்லது ஏன் மெறேவேவவிலும் கூட அரசியல் வாதிகள் அரச காணிகளை குறித்த சில மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

இவர்கள் இடம்பெயர்ந்து வசித்த மக்களல்ல. காணிகள் வழங்கப்பட்டிருக்கும் அனைவருமே புதியவர்கள்.''

இலங்கையிலுள்ள மிகப்பெரும் உப்பு உற்பத்தி நிறுவனமாகிய ஈஸ்ரேன் உப்பு நிறுவனமானது கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பஸில் ராஜபக்ஷவே தலைமைதாங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஓரினக் கொள்கை:

1887ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் மேற்கொண்ட கணக்கெடுப்பின் பிரகாரம் வெறும் 0.5 வீதத்தினைச் சேர்ந்த சிங்களவர்களே திருகோணமலையில் இருந்ததாக ஜேசுதாசன் கூறுகிறார்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தபோது இந்தத் தொகை 9 சதவீதமாக அதிகரித்திருந்தது. இதனைத் தொடர்ந்து 1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்திற்கு அமைய திருகோணமலை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 30 சதவீதம் பேர் சிங்களவர்களாக இருந்தனர்.

''இந்த அதிகரிப்பு வேகத்தினை இயல்பானதொரு அதிகரிப்பாகக் கொள்ளமுடியாது. யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொழும்பில் வசிப்பது உண்மைதான்.

ஆனால் அவர்கள் அரசின் ஆதரவுடன் கொழும்பில் குடியேறவில்லையே.

இங்கு திருகோணமலையில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் தொடர்ந்துவந்த சிங்கள ஆட்சியாளர்களின் தயவுடன் தான் இவை அனைத்தும் நடந்திருக்கின்றன.

சாரை சாரையாகக் கொண்டுவரப்பட்ட சிங்களக் குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்'' என்றார் அவர்.

மறுவளத்தில் நோக்குவதாயின் 'விடுதலைப் புலிகளின்' காலத்தினை ஒட்டியதாக இந்தத் தமிழர்கள் இதுபோலப் பாதுகாப்பின்மையினை உணரலாம். ஆனால் நிலைமைகள் பெரிதும் மாறிவிட்டது.

மாவட்டத்தில் ஒரு இனம் மட்டுமே இருக்கக்கூடாதென்பதில் அரசு மிகவும் தெளிவாக உள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் மோகன் விஜயவிக்கிரம மற்றும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி போன்ற அரச நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தமது அலுவலகங்களுக்கு சிங்களவர்களை நியமிப்பதிலும் மாவட்டத்தின் சிங்கள கிராமங்களுக்கே உதவிகள் கிடைப்பதை உறுதிசெய்வதிலும் கவனமாக இருப்பதை திருகோணமலை மாவட்டத்தின் அரச சார்பற்ற நிறுவன வட்டாரங்கள் அவதானித்துள்ளன.

தமிழ் அல்லது முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஏதாவது செய்யவேண்டுமாயின் அதில் சிங்கள கிராமங்களும் உள்ளடக்கப்படக்கூடிய வகையில் தமது திட்டங்களை தயாரிப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் சட்டவிரோத குடியேற்றங்களை தடுத்து நிறுத்தக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

அம்பாறை,செப்.03

அம்பாறை - வளக்காப்பிட்டிப் பிரதேச மக்களுக்கு உரித்தான காணிகளில் சட்ட விரோதக் குடியேற்றங்கள் இடம்பெறுவதைக்கண்டித்து அப்பகுதி மக்கள் அம்பாறை மாவட்ட அதிபர் பணிமனைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் வரை இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சட்ட விரோதக் குடியேற்றங்கள் இடம்பெறுவதைக் கண்டிக்கும் வகையிலான சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் சட்ட விரோதக் குடியேற்றம் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் கையளிக்கப்பட்டது. (ளி)

## கிண்ணியாவில்கலந்துரையாடல்

திருகோணமலை, செப். 03

திருகோணமலை விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஆதரவிலான ஜனநாயகமும் சமகால அரசியற்கட்சிகளும் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் 12 மணிவரை கிண்ணியா பொது நூலகத்தில் நடைபெறும் என விழுது ஆற்றல் மையம் தெரிவித்துள்ளது.

இதுபற்றிய மேலதிக தகவல் தொடர்புகளுக்கு 026-2224941எனும் இலக்கத்தில் விழுது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். (ளி)

### அம்பாறை மாவட்டத்தில்

# மீள்குடியேறிய மக்களுக்கு அரசு உதவிகள் வழங்கும்

அம்பாறை, செப்.03

மீண்டும் தமது சொந்தப் பிரதேசத்துக்கு வந்துள்ள அம்பாறை மாவட்ட மஹா ஓயா பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட மக்களுக்கு, அரசின் அனைத்து உதவிகளும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவும், பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் தம்மைச் சந்தித்த இம் மக்களிடம் இதற்கான வாக் குறுதியை அளித்துள்ளனர்.

யுத்தம் காரணமாகத் தமது சொந்த மண்ணை விட்டு வெளியேறியிருந்த அம்பாறை மாவட்ட மஹாஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் மீண்டும் தமது சொந்தப் பிரதேசத்திற்கு வந்து உறவினர்களினதும் நண்பர்களினதும் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவ்வாறு மீண்டும் வந்தவர்கள் முகாம்களில் தங்காது உறவினர்களினதும் அயலவர்களினதும் வீடுகளில் தங்கியிருப்பதால் இவர்கள் பற்றிய தரவுகள் எதுவும் கிடையாது.இதனால் இம்மக்களுக்கு அரசின தும் ஏனைய நிறுவனங்களினதும் உதவிகள் கிடைக்காது. வாழ்ந்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் அண்மையில் இம் மக்கள் வாழ்ந்த பிரதேசத்தின் அழிவுகளைச் சுற்றிப் பார்வையிட்டனர். அத்துடன் அம்பாறை மஹாஓயா மங்கள ராமய விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

மீண்டும் தமது சொந்தப் பிரதேசத்திற்கு வந்த மக்கள் தங்களது பிரச்சினைகள், தேவைகள் ஆகியவற்றை அமைச்சர், பிரதியமைச்சர் குழுவினரிடம் எடுத்துக் கூறினர். இம்மக்களின் கருத்துகளைக் கேட்டறிந்த அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவும் பிரதியமைச்சர் முரளிதரனும் மீள் குடியேறிய மக்களுக்கு அரசு என்னென்ன உதவிகள் செய்து வருகின்றதோ அதே உதவிகளை இம்மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க உடனடி நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்வர் என உறுதியளித்தனர்.

இந்த நிகழ்வில் மஹாஓய பிரதேச செயலாளர், சபைத் தலைவர், பாதுகாப்புத்தரப்பினர், மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ளி)

# கால்நடை வளர்ப்பு, பயிர்ச்செய்கையில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் நாட்டம்

திருகோணமலை, செப்.03

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வேதத்தீவு, முதிரையடிமுனைப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் கால்நடை வளர்ப்பிலும், பயிர்ச்செய்கையிலும் மிகவும் நாட்டம் காட்டி வருகின்றனர். கடந்த கால யுத்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பின்னர், இப்பகுதியில் குடியேறிய மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகத் தற்காலிக தகரக் கொட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இக்கிராம மக்கள் வாழ்வாதாரத்திற்காக வீட்டுத் தோட்ட உப உணவுப் பயிர்ச்செய்கையிலும் மற்றும் ஆடு, மாடுகளைப் பராமரித்து வளர்த்து வருவாய்களைப் பெருக்குவதிலும் ஈடுபட அதிக நாட்டம் கொண்டுள்ளனர். (ளி)

# கிழக்கு மாகாண சபையின் பிரதித் தலைவியாக பெண்

திருகோணமலை, செப்.03

கிழக்கு மாகாணசபையின் பிரதித் தலைவியாகப் பெண் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாகாண சபையின் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கிழக்கு மாகாணசபையின் பிரதித் தலைவியாக ஆரியவதி கலப்பதி தெரிவு செய்யப்பட்டார்.

இவரின் பெயரைக் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்மொழிய, மாகாணசபை அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்வை வழிமொழிந்தார்.

இதனடிப்படையில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட சபையின் பிரதித் தலைவி ஆரியவதி கலப்பதி முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட பெண் என்ற பெருமையைப் பெறுகின்றார். 2008ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரேயொரு பெண் மாகாணசபை உறுப்பினர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)




# ரயர் மீள்நிரப்பும் தொழிற்சாலையை பதுளை டிப்போவில் நிறுவக் கோரிக்கை

## ஊவா மாகாணசபை உறுப்பினர் முதலமைச்சருக்கு கடிதம்

கொழும்பு,செப்.03

இலங்கை போக்குவரத்துச் சபையின் பதுளை டிப்போவில் ரயர் மீள்நிரப்பும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுமாறு ஊவா மாகாணசபை உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் உபதலைவருமான அ.அரவிந்குமார் மாகாண முதலமைச்சரும், போக்குவரத்துக்குப் பொறுப்பான வருமான சஷீந்திர ராஜபக்ஷவிடம் கடிதம்மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

ஊவா மாகாணத்தில் டயர் மீள்நிரப்பும் தொழிற்சாலை ஒன்று இல்லாமையால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இப்பிரச்சினையானது அரச நிறுவனங்களுக்கும் ஏற்புடையதாகும். இதனை நிவர்த்தி செய்யும்முகமாக தொழிநுட்பம், இடவசதிகள் மற்றும் முகாமைத்துவ அனுபவங்கள் கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் அனுசரணையோடு இத்தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

இங்கு இவ்வாறான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதனூடாக நாம் பல்வேறு அனுகூலங்களைப் பெறமுடியும்.

மாவட்டத்தின் இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், பெரும் இலாபத்தையும் ஈட்டமுடியும்.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் மீள்நிரப்புகைக்காக வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் டயர்களை மீளப்பெறுவதில் ஏற்படும் தாமதத்தினால் பல தடவைகள் சேவைகள் தடைப்பட்டிருக்கின்றன.

என்வே, எமது பிரதேசத்திற்கென தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதனூடாக இவ்வாறான சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அத்துடன் எமது மக்களுக்கு சிறந்த சேவையையும் வழங்கலாம். டயர் நிரப்புகை விடயத்தில் வெகுதொலைவில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் தங்கியிருக்காமல் எமக்கென ஒன்றை நிறுவவுதனூடாக மீள்நிரப்பும் கட்டணம் குறைவதோடு, தேவைகளையும் துரிதமாகப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

இத்திட்டமானது எமது மாவட்டத்தில் தொழில்பேட்டை ஒன்றை அமைப்பதற்கான உந்துசக்தியாகவும் அமையும்.

எனவே, எனது இந்த முன்மொழிவை காலத்தின் தேவையாகக் கருதி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - இப்படி அரவிந்குமார் தெரிவித்தார்.

இக்கடிதத்தின் நகல்கள் ஊவா மாகாண ஆளுநர் சி.நந்தா மெத்திவ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ளி)

## தேங்காய் விலை வீழ்ச்சி

கேகாலை, செப்.03

கேகாலை, மாவனல்லைப் பிரதேசங்களில் தேங்காயின் விலை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக 30 ரூபா முதல் 40 ரூபாவாக விலை உயர்ந்திருந்த தேங்காய் ஒன்றின் விலை தற்போது இப்பகுதிகளில் 20 ரூபா முதல் 25 ரூபாவாக விலை குறைந்துள்ளது.

இதனால் தேங்காய் எண்ணெய்யின் விலையும் குறைந்துள்ளது. இதனையிட்டு பாவனையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (ளி)

## நக்கிள்ஸ் மலைத்தொடரில் வனிலா உற்பத்திக்கு ஏற்பாடு

நக்கில்ஸ் மலைப்பகுதியில் வெனிலா உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வனிலா உற்பத்திக்கு சிறந்த சந்தை வாய்ப்பு உள்ளதாலேயே உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு கண்டி வனிலா உற்பத்தியாளர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வீட்டுத் தோட்டங்களிலும் வனிலா உற்பத்தியை மேற்கொள்ள முடியும் .

வெனிலாவுக்கு உயர்ந்த விலையைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன என கண்டி வனிலா உற்பத்தியாளர் சங்கத் தலைவர் டி.மடுகல தெரிவித்தார். (ளி)




# தேயிலைச் செடிக்குள்ளிருந்து மஸ்கெலியாவில் சடலம் மீட்பு

நுவரெலியா, செப்.03

மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றில் தேயிலைச் செடிகளுக்கிடையில் இருந்து ஆணொருவரின் சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கேற்ப மஸ்கெலியா பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

நோட்டன் - மஸ்கெலியா பிரதான பாதையில் ஹப்புகஸ்தென்ன தெபர்ட்டன் தோட்டத்துக்கு அருகில் பிரதான பாதையிலிருந்து 5 மீற்றர் தூரமுள்ள தேயிலைச் செடிகளுக்கிடையில் சடலம் காணப்பட்டுள்ளது.

சம்பவதினம்காலை இந்த இடத்திற்கு விறகு சேகரிப்பதற்குச் சென்ற பிரதேச மக்கள் சடலத்தைக் கண்ணுற்றுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக உடனடியாக மஸ்கெலியா பொலிஸாருக்கு அவர்கள் அறிவித்துள்ளனர்.

அவ்விடத்திற்கு வருகைத்தந்த மஸ்கெலியா பொலிஸார் ஹட்டன் நீதிமன்றின் கவனத்திற்கு விடயத்தைக் கொண்டு வந்ததனர். இதன்பின்னர் நீதிவான் விசாரணைகள் இடம்பெற்றன.

சுமார் 48 வயது மதிக்கதக்க இந்த ஆணின் சடலத்துக்கு உரியவர் திவுலா பட்டிய என்ற இடத்தைச்சேர்ந்தவர் என்றும், இவர் ஐந்து நாட்களுக்கு முன்பு இறந்திருக்கலாமென்றும் நம்பப்படுகின்றது. உயிரிழந்தவரின் ஆள் அடையாள ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)

# கண்டி மாநகர பிதா பதவி நீக்கம் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கண்டி, செப். 03

கண்டி மாநகர பிதா எல்.பி.அலுவிகார உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஒகஸ்ட் 23 ஆம்திகதி வெளியிடப்பட்டுள்ள விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அலுவிகார பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

[illegible] திருப்தியற்ற நிர்வாகமே அதற்குக் காரணம் எனவும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சி வடக்கு ப.நோ.கூ சங்கம் (வரையறுக்கப்பட்டது)

**கிளைகள் ரீதியாக அங்கத்தவர்கள் விவரங்களைத் திரட்டுதலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளலும்**

கடந்த வருடம் வன்னியில் ஏற்பட்ட போர் சூழ்நிலை காரணமாக எமது சங்கம் பல இடங்களிலும் இடம்பெயர்ந்து சங்க ஆவணங்களையும், சொத்துக்களையும் கைவிட்டு தற்போது தமது சொந்த இடத்தில் மீளவும் இயங்கி வருகின்றது. கண்டாவளைப் பிரதேச செயலர் பகுதியில் மக்கள் முழுமையாக மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் எமது சங்கத்தின் பொதுச்சபையினையும், இயக்குநர் சபையினையும் கிளைரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது. அத்துடன் புதிய அங்கத்தவர்களையும் சேர்த்துக் கொள்ள முடியும்.

அங்கத்தவர்களின் விவரத்தைத் திரட்டுவது தொடர்பில் ஏற்கனவே சங்கத்திலிருந்த அங்கத்தவர்கள் பின்வருவனவற்றை கவனத்தில் கொண்டு செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

* தாங்கள் சங்கத்தின் ஏதாவது கிளையொன்றில் அங்கத்தவராகச் சேர்ந்திருப்பின் அதற்கு ஆதாரமாக பங்குப்பணம் கட்டிய பற்றுச் சீட்டு அல்லது சேமப்புத்தகத்தில் பங்குப் பணம் கட்டியமையை அல்லது ஆதாரப்படுத்தக்கூடிய சான்றளிக்கக்கூடிய விவரமிருப்பின் அதனை சங்கச் செயலாளருக்கு/தலைவருக்கு சமர்ப்பித்து இரு பிரதிகளில் அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தை தயாரித்து சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.
* ஏற்கனவே அங்கத்தவராகச் சேர்ந்து அவர்கள் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியாதவிடத்து 100 ரூபா பங்குப் பணத்தைச் செலுத்தி இரு பிரதிகளில் அங்கத்துவ விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து சங்கச் செயலாளரிடம் அவற்றைச் சமர்ப்பிப்பதுடன், தான் பழைய அங்கத்தவர் என்பதை உறுதிப்படுத்த சத்தியக் கடதாசி ஒன்றை தயாரித்து முறைப்படி பூரணப்படுத்தி சங்கச்செயலாளரிடம் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்துடன் ஒப்படைக்கவும் (எதிர்காலத்தில் பழைய கணக்கு விவரம் கிடைக்கும் பட்சத்தில் அதில் குறிப்பிடப்படும் பங்குப் பணம் தற்போது கட்டிய பங்குப் பணத்துடன் சேர்க்கப்படும்)
* ஒரு பங்கின் பெறுமதி 100/= ஆகும்.
* புதிய அங்கத்தவர்கள் 100/= பங்குப்பணத்தைச் செலுத்தி அங்கத்துவ விண்ணப்பப் படிவங்களை இரு பிரதிகளில் பூரணப்படுத்தி சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

இந்நடவடிக்கைக்கான இறுதித் திகதி 30.11.2010 ஆகும்.

திரு.அ.கேதீஸ்வரன் (தலைவர்) (சி/570527) திரு.க.செல்வராசா (செயலாளர்)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2152 திகதி 01-09-2010

ஆங்கில எழுத்திற்கும் G

வெற்றி எண்கள் 04 26 35 38 போனஸ் இல: 22

ஜக்பொட் பரிசு ரூ. 11,480,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 191520 | 20/- | 3,830,400/- |
| 2 இல | 13694 | 100/- | 1,369,400/- |
| 3 இல | 287 | 1,000/- | 287,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7640 | 40/- | 305,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 536 | 1,000/- | 536,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,480,480/- | - |
| 1 இல + போனஸ் இல | 9112 | 100/- | 911,200/- |
| 2 இல + போனஸ் இல | 432 | 500/- | 216,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 361 | 200/- | 72,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,134,800/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 223624 | | 9,734,800/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 202250276-8-48 |
| கண்டி | 202247675-0-32 |
| கம்பஹா | 202249257-5-48 |
| கொழும்பு | 202252604-2-27 |
| கேகாலை | 202250705-3-00 |
| மட்டக்களப்பு | 202265676-4-26 |
| பதுளை | 202249721-4-32 |
| நுவரேலியா | 202247627-9-43 |
| புத்தளம் | 202248297-0-31 |
| யாழ்ப்பாணம் | 202265632-4-06 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 12,003,375/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 04 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

# சமய சந்நிதிகளில்

வலி.வடக்கு,செப்.3

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு கஜவல்லி, மஹா வல்லி திருவிழாவும் மாலை 5 மணிக்கு வேல்விமானத்தில் சுவாமி வெளி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

(த-204-86)

* * *

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ்.வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(த-204)

* * *

வடமராட்சி,செப்.3

வடமராட்சி, கற்கோவளம் வடக்கு முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலைத் திருவிழா பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

(த-204-253)

* * *

யாழ்ப்பாணம்,செப்.3

தாவடி வடக்கு, குழந்தை சிட்டி கணையன்வளவு காமாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

திருவிழாக் காலங்களில் தினமும் முற்பகல் 10 மணிக்கும், இரவு 7 மணிக்கும் விசேட பூசைகள் இடம்பெறும்.

(த-204-313)

* * *

வலி.வடக்கு,செப்.3

ஏழாலை சிவபூதராயர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 6.30 மணிக்கு விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து மாலைப் பூசைகளும் இடம்பெற்று இரவு 7.30 மணிக்கு சுவாமி வெளிவீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

(204-86)


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Honda CD - 50 (Japan) 114 - xxxx மிக நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 9859218 (சாவகச்சேரி) (102778)

## விற்பனைக்கு

P4 Computer, Mobitel dongle Sanyo Radio விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 6701539, 078 9130759 (102777)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979ஆம் ஆண்டு பிறந்த படித்த மணமகளிற்கு உள்நாடு, வெளிநாடு மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: 077 6701539, 078 9130759
Email - aaravinthjhc@gmail.com. (102776)

## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது கணக்கியல் நிறுவனத்துக்கு கணக்கியல் உதவியாளர், கணக்கியல் பயிலுநர்கள் தேவை. G.C.E A/L.இல் Commerce பிரிவு கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். சனி, ஞாயிறு தினங்களில் நேரில் வரவும்.
தொடர்பு: 140, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 9530496, 021 2222478

## வேலையாள்கள் தேவை

சேவிஸ் வேலை தெரிந்தவர்கள், மெக்கானிக் வேலை பயிலுநர்கள் (ஆண்கள்) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
சன்னதி முருகன் வேக் சொப் அன்ட் சேவிஸ்
24, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8076

## TV மலிவு விற்பனை

Sony wega flat 50க்கும் மேற்பட்ட TV கள் (14" - 10,000/=, 21" - 14,000/=, 25" - 20,000/=) மற்றும் அம்பிளிஃபயர்கள், Box வகைகள் JBL 12" - 600W Double Cassette Deck ரேடியோக்கள் மிக மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 1393670, 021 4920853
...K.K.S வீதி, இணுவில்.



# ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 526
சீட்டிழுப்பு திகதி: 01.09.2010

வெற்றி எழுத்து: M வெற்றி இலக்கங்கள்: 08 15 38 52

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 18,634,669.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 224 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 450 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 11045 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6423 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 159887 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25495 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,317,060.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,882,676.80


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 ★ 05 ★ 1935 — மறைவு 04 ★ 08 ★ 2010




## அமரர் இராமலிங்கம் சிவலிங்கம்

கடந்த 04.08.2010 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் இராமலிங்கம் சிவலிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (102755) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 ★ 08 ★ 1929 — உதிர்வு 14 ★ 09 ★ 2009



## அமரர் சின்னப்பொடி சின்னத்தம்பி

அன்புத் தெய்வமே!
எங்கள் நல்வாழ்வுக்காய்
உமையுருக்கி ஒளிதந்தீர் ஐயா!
எங்கள் உயர்வுக்கு உம் சிந்தனையை
உரமாக்கி விருட்சமாகி நின்றீர் ஐயா!
வறுமையிலும் செம்மை வழி நின்று
பெருமையுடன் எமை வளர்த்தீர் ஐயா!
பொறுமை என்னும் வழிநின்று
ஆலயப் பணிக்கு ஓர் காவலனாகி நின்றீர் ஐயா!
என்றும் எம் வாழ்வின் பசுமை நினைவுகளில்
வற்றாத ஜீவநதியாக வாழ்ந்திடுவீர் ஐயா!

வைத்தியசாலை வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (102759) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோயில்



(சென்றவாரத் தொடர்ச்சி)

அவை புனரமைக்கப்பட்டு 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற கும்பாபிஷேகத்தின் போது புதுப்பொலிவு பெற்றது.

கொடியேற்றத்திருவிழா ஆரம்பிக்கப்பட்ட போது தேர் வேண்டுமெனக் கருதிய வேளையில் யோகரத்தினம் நிரோஜன் என்பவர் சிம்மாசனத்தையும் திருமதி சிவசம்பு என்பவர் சகடையையும் செய்வித்து வழங்கினர். இவற்றிலேயே தேர்த்திருவிழாவின் போது அம்மன் வீதி வலம் வருகிறார்.

ஆலயத்தில் நீண்ட காலமாக நவராத்திரி பூர்த்தி தினமான விஜயதசமி தினத்தில் மாநோம்பு எனப்படும் மானம்பு பவனியும் வன்னி மரமாக உருமாறிய மகிடாசூரனை அழிக்கும் நிகழ்வும் இடம்பெற்று வருகின்றன. இந்த மானம்பு உற்சவத்திற்கு அம்பாள் சிங்க வாகனத்தில் சென்று கடற்கரையுடன் அமைந்துள்ள கோயில் குடியிருப்பு முருகமூர்த்தி ஆலயத்தில் கன்னிவாழை வெட்டுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

அவ்வாறு அம்மனுக்கென சிங்க வாகனத்தை சின்னத்தம்பி நாகமணி தர்மகர்த்தாவாகவும் அண்ணசாமி ஐயர் பூசகராகவும் இருந்த காலத்தில் 1946ஆம் ஆண்டு வட்டுக் கோட்டையில் கொள்வனவு செய்யப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டு இன்றுவரை பாவிக்கப்பட்டு வருகிறது.

அதன் பின்னர் 1972 இல் வைரமுத்து லட்சுமி, நாகமணி அன்னம்மா சகோதரிகளால் இரட்டைக்குதிரை வாகனமும் சின்னத்துரை சரவணமுத்து என்பவரால் அன்னப்பட்சி வாகனமும் ஆலயத்திற்கு வழங்கப்பட்டது. திருமதி குமரய்யா சரஸ்வதி என்பவர் அம்மனுக்கு 9 கற்கள் பதித்த பதக்கத்தினை சங்கிலியுடன் வழங்கினார்.

ஆலயத்திற்கு நீர்த்தாங்கியினை நாகமணி கணேசு என்பவரும் ஒலிபெருக்கிச் சாதனங்களை கதிர்காமு சத்தியசீலன், மயில்வாகனம் பிரபாகரன், விஸ்வலிங்கம் யோகலிங்கம் ஆகியோராலும் மின்பிறப்பாக்கியினை கணேஸ் சிவதாஸ் என்பவரும் வழங்கியுள்ளனர்.

ஆலயத்தில் மூன்று காலப்பூசைகளுடன் பூரணை உற்சவம்,தைப்பொங்கல், தைப்பூசம், மணவாளக் கோலம், தை அமாவாசை அபிராமிப்பட்டர் தினம், மகா சிவராத்திரி, மாசிமகம், பங்குனித் திங்கள், பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, சித்திரகுப்த விரதம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், நவராத்திரி விழா, விஜயதசமி மானம்பு விழா, கேதாரகௌரி விரதம், சந்திரமண்டலப் பூஜை, கந்தசட்டி, தீபத் திருநாள், கார்த்திகை விளக்கீடு, பிள்ளையார் கதை, விநாயக சஷ்டி, திருவெம்பாவை, திருவாதிரை அபிஷேகம் போன்றவை விழாவாக நடத்தப்படுகின்றன.

ஆலயத்தில் நடத்தப்பட்டு வந்த அலங்கார உற்சவம் 1996ஆம் ஆண்டு பெருந்திருவிழாவாக மாற்றப்பட்டது பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலை அருகில் உள்ள இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்படுகிறது. அத்துடன் கொடியேற்றத் திருவிழாவினை இத்தியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரே நடத்தி வருகின்றனர். அம்மன் ஆலய வேட்டைத் திருவிழாவும் இத்தியடிப் பிள்ளையார் ஆலய வீதியிலேயே நடைபெற்று வருகிறது.

இவ் ஆலயம் ஆரம்பத்திலிருந்து சிவஸ்ரீ சோ.அண்ணாமலைக் குருக்கள் அவரின் மருமகன் கதிர்காமு ஐயர் ஆகியோர் நீண்டகாலம் பூசகர்களாகப் பணிபுரிந்தனர். 1952இல் பிரம்மஸ்ரீ அப்பாசாமி விஸ்வநாத ஐயர் தொடர்ச்சியாக 36 வருடங்கள் ஆலயத்தில் அர்ச்சகராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னர் அவரது மகனும் மருமகனும் பூஜைகளை மேற்கொண்டனர்.

பின்னர் 1989ஆம் ஆண்டு தொடக்கம் சிவஸ்ரீ நடராசா இராஜேஸ்வரக் குருக்களும் பின்னர் ஸ்ரீகாந்தக் குருக்களும் பின்னர் இ.வேதரூப சர்மா, சி.இலட்சுமிகாந்தன்ஐயர் ஆகியோரும் 2010 சித்திரைப் புத்தாண்டு தொடக்கம் ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இ.சுரேஸ்வர சர்மா நித்திய பூஜைகளை நடத்தி வருகிறார்.

2000ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ் ஆலயத்திலிருந்து வருடாவருடம் நல்லூருக்கு பாதயாத்திரை செல்வர்.

ஸ்ரீமீனாட்சி அம்மன் தேவஸ்தானம் ஆரம்ப காலத்தில் திருவூஞ்சற் பதிகம் திருவெம்பாவை இறுதிநாளான திருவாதிரைக்குப் பாடப்பெற்று வந்தது. பின்னர் திருவாதிரையுடன் ஆடிப்பூரம் உற்சவ காலத்தின் இறுதி நாளிலும் பாடப்பெற்றது.

தற்போது இரண்டு திருவூஞ்சல் பதிகங்கள் ஆலயத்தில் உள்ளன. ஒன்று கச்சாயைச் சேர்ந்த 'சந்தக் கவிமணி' செந்தமிழ்ப் புலவர், 'கவித்துறையரசு' 'கோவைக்கிழார்' சி.சின்னையாவும், இரண்டாவது பதிகத்தை இணுவிலைச் சேர்ந்த இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரும் இயற்றி வழங்கியுள்ளனர்.

இவ் ஆலயம் இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(முற்றும்)

# கோயிற் குடியிருப்பு கிராம அபிவிருத்தி அமைப்பு மீள் எழுச்சித்திட்டம்

தொகுப்பு: ஐயந்தன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கடன் பெற்றதால் தமது வாழ்வாதாரம் அதிகரித்ததுடன் தமக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் வெவ்வேறு துறைகளில் ஈடுபடச் செய்து தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடியதாக இருந்தது என கடன் பெற்றவர்கள் மனத் திருப்தியுடன் தெரிவித்தனர்.

உட்கட்டுமாணப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட 40 வீத நிதியினை ஒவ்வொரு கிராமத்திலும் அத்தியாவசியமெனக் கருதப்பட்ட வேலைத் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி செய்வதென தீர்மானிக்கப்பட்டு அந்தந்த குக்கிராம மக்களினால் முன்மொழியப்பட்ட வேலைத் திட்டங்கள் வீரசிங்கம் குக்கிராமத்தில் நீண்ட காலமாகப் பழுதடைந்து பாவிக்கப்படாமல் இருந்த நல்ல தண்ணீர் கிணறு ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 512 ரூபா 65 சதம் செலவில் புனரமைக்கப்பட்டது. இக்கிணறு புனரமைக்கப்பட்டதன் பின்னர் அப் பகுதியில் நிலவிய குடிதண்ணீர் பற்றாக்குறை நீங்கியது. அத்துடன் அப்பகுதியில் நீண்டகாலமாக மணல் வீதியாகக் காணப்பட்ட மாவடிப்புலம் வீதியினை 500 மீற்றர் வரை 13 லட்சம்ரூபா செலவில் புனரமைத்து மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

உதய சூரியன் கிராமத்தில் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட உதயசூரியன் சனசமூக நிலையக் கட்டடம் 3 லட்சத்து 49 ஆயிரம் ரூபா செலவில் புனரமைத்துக் கொடுக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட சனசமூக நிலையக் கட்டடம் 2009 ஏப்ரல் 19ஆம் திகதி யாழ்.அரச அதிபர் க.கணேஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

புனித லிகோரியார் குக்கிராமத்தில் அமைந்துள்ள முன்பள்ளிச் சிறார்களுக்கு மர நிழலில் வைத்து உணவுகள் சமைத்து வழங்கியதால் அங்கு சமையலறை அமைக்க வேண்டுமென வேலைத் திட்டம் முன்மொழியப்பட்டதால் ஒரு சட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் சமையலறை நிர்மாணிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இயலளவு விருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி அலுவலக தேவைகளுக்கும் பயனாளிகளுக்கும் வழங்கப்படும் பயிற்சி வகுப்புகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நிழலோடு சம்பந்தப்பட்ட திட்டங்களை வெற்றி பெறச் செய்வதற்கு அதனை வழிநடத்துபவர்களின் வழிகாட்டல் மிகமிக அவசியமானது.

தேவையுடையோரின் தேவைகளை இனங்கண்டு அதனை நிவர்த்தி செய்ய நிதி வழங்குவதுடன் நின்று விடாமல் அவர்கள் பெறும் நிதியினை உரிய முறையில் பயன்படச் செய்வித்து அதன் மூலம் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவர்களின் எதிர்காலத்தை மென்மேலும் பெருகச் செய்ய இந்த அமைப்பின் நிர்வாகிகள், உபகுழுக்களின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளன. நிர்வாகிகள் உப குழுக்கள் ஆகியோரின் தன்னலமற்ற சேவை இந்த அமைப்பு ஒரு சிறந்த அமைப்பாக மாறுவதுடன் இப்பகுதியில் பல சுய முயற்சியாளர்களாக தொழில் அதிபர்களாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

(முற்றும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



துணையாக இருந்த சிலரே தொல்லையாக மாறலாம். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு பின்னர் அதில் இருந்து பின் வாங்குவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தை காப்பாற்ற கடும் சிரமப்படுவீர்கள். ஆதாயமில்லாத விடயங்க ளைப் பற்றி ஒருவரிடம் தீவிரமாக வாக்குவாதம் செய்வீர்கள். சிலரி டம் கடன், கைமாத்து வாங்கலாம்.

### இடபம்




மற்றவர்கள் வியப்படையும் வகையிலான காரியங்களைச் செய் வீர்கள். மனதிற்கு உல்லாசம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வீட்டு வேலையாட்கள் வழியில் உருவான பிரச்சினைகள் தீரலாம். வியாபாரிகள் இருப்பு சரக்குகளால் கணிசமான லாபம் பெறலாம். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம்.

### மிதுனம்



மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். தொழிலில் மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். பேராசை களைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள் தொடர்பான விடயங் களில் கர்வமாக நடந்து, அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். கடன் மிகுதிகள் கொடுப்பது தள்ளிப் போகலாம். குடும்பச் செலவுகள் கூடும்.

### கடகம்



காலை முதல் மாலை வரை உற்சாகமாக செயல்படும் நாள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரிய மனிதர்கள் சிலரை சந்திக்கலாம். உதிரி வருமானங்கள் கைக்கு கிடைக்கும். அயலார் அனுசரணையாக இருப்பர். சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதை நிறைவேற்ற முடியாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிக்கலாம்.

### சிங்கம்



மனதில் தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். எதிர்ப்புகளை முறியடிக்க புதிய திட்டம் போடுவீர்கள். பிள்ளைகள் விருப்பங்களை நிறை வேற்றி வைப்பீர்கள். ஓய்வு எடுக்க நினைத்தாலும் முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். புத்திசாலித் தனமான செயற்பாடுகளால் மற்றவர்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். நாவன்மை கூடும்.

### கன்னி



சக ஊழியர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பர். நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாட்டங்களில் பங் கேற்கலாம். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கலாம். சிலரிடம் தேவையில்லாமல் சில விடயங்களைப் பற்றி பேசிவிட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள்.

### துலாம்



வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள். சக ஊழியர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். எங்காவது வெளியில் செல்லும் நேரத்தில் யாராவது சில வேலைகளை கொடுத்து தொந்தரவு கொடுக்கலாம். பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். எதிலும் அவசரப்படாமல் நிதானமாக செயற்பட வேண்டும். வேலைப்பளு அதிகரிக்கும்.

### விருச்சிகம்



அலைச்சல் இருந்தாலும் அதற்கேற்ற ஆதாயம் பெறுவீர்கள். நண்பர்கள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி உண்டு. குடும்ப உறுப் பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். தன்னம் பிக்கை அதிகரிக்கும்.

### தனுசு



புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். கோவிலுக்கு சென்று வழிபாடு நடத்து வீர்கள். சிறு பணவரவுகள் உண்டு. நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென பேசலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

### மகரம்



ஒரு வழியில் வந்த வரவுகள் மற்றொரு வழியில் செலவாகலாம். இளைய உடன் பிறப்புக்கள் மூலம் அனுகூலமான உதவி கிடைக் கலாம். குடும்ப விவகாரங்களில் அனுபவம் உள்ளவர் களி டம் ஆலோசனை கேட்டு செயற்படுவது நல்லது. பிள்ளைகள் வழி யில் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். பிறரை நம்பி உங் களின் வேலைகளை ஒப்படைக்க வேண்டாம்.

### கும்பம்



நன்றி மறந்தவர்களை நினைத்து புலம்புவீர்கள். கணவன் மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். இதுவரை செல் லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். சில விடயங்களில் அஜாக்கிரதையாக செயற்படுவீர்கள். உங்களின் பெருமையான செயற்பாடுகளைப் பற்றி நண்பர்களிடம் சொல்வீர்கள். குறுகிய தூர பயணம் செல்லலாம்.

### மீனம்



நண்பர்கள் வழியில் சிறு அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கை அதிகரிக்க முற்படு வீர்கள். பல நாள்களாக மன உளைச்சலை கொடுத்துக் கொண்டி ருந்த விடயம் நல்ல விதமாக முடியலாம். எதிர்பார்த்த பணவரவு களை மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். சுக மான அனுபவம் உண்டு

## கூரைத்தகடு வெடித்து சிறுவன் காயம்

தென்மராட்சி,செப்.3

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக துப்புரவு செய்யப்பட்ட காணியில் குப்பை எரித்தபோது வெடித்துப் பறந்த கூரைத் தகட்டுத் துண்டு அங்கு நின்ற சிறுவனின் காலை வெட்டிக் காயப்படுத்தியது.

கடந்த செவ்வாய்க்கிழமை நுணாவிலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.பிரதாப் (வயது 6) என்னும் சிறுவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-207)

## மீளக்குடியேறிய மாணவருக்கு சீருடைத் துணிகள்

தென்மராட்சி,செப்.3

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மீளக் குடியேறியோரில் மிக வறிய மாணவர்க ளுக்குப் பாடசாலைச் சீருடைத்துணி களை மிக விரைவில் வழங்க உள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள் இத் திட்டத்துக்கு தகுதி வாய்ந்த பயனாளி களின் தெரிவுப்பட் டியலைத் தயாரிக் கும் பணிகளைமேற் கொண்டு உள்ளனர். மீளக் குடியேறிய வறிய மாணவர்க ளின் கல்வி நடவ டிக்கைக்கு பல அரச சார்பற்ற நிறுவ னங்கள் உதவி வரு கின்றமை குறிப்பி டத்தக்கது. (எ-121)





50ஆவது அகவையின் திருமண வாழ்வின் வெள்ளி விழாக் காணும் நாயகன், நாயகி திரு.கனகசபாபதி தேசிகர் சந்திரசேகரக் குருக்கள் திருமதி பொன்னம்மா தம்பதியினரை இவ்வுலக வாழ்வில் மன நிறைவுடன் வளமுடன் வாழ இறைவனின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
மக்கள், மருமக்கள், பேறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கந்தவனக் கோயிலடி, பொலிகண்டி. சிறிதரன் துர்க்கா.

(சி/570121)


## பூநகரி பிரதேச சபை, பூநகரி
## கேள்வி அறிவித்தல் - 2010

### பூநகரி பிரதேச சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) பதிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பதிவுத்தரமுடைய ஒப்பந்தகாரர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகைகளைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை 03.09.2010ஆம் திகதி பி.ப.3மணி வரை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து செயலாளர், பூநகரி பிரதேச சபை, பூநகரி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும், இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், கிளிநொச்சி என்ற முகவரிக்கும் 06.09.2010ஆம் திகதி பி.ப.3 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. கேள்விகள் 07.09.2010ஆம் திகதி மு.ப.11 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அவ்வேளையில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கப்பட வேண்டும்.
4. மேலதிக விவரங்களைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ.இல | வேலையின் பெயர் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | ஜெயபுரம் உப அலுவலகக் கட்டட நிர்மாணம். | C9 | 5000.00 | 1000.00 |
| 02 | ஜெயபுரம் (MOH) பிரதான வீதி புனரமைப்பு. | C9 | 10000.00 | 1000.00 |
| 03 | பல்லவராயன்கட்டு கழிவகற்றும் இடத்திற்கான சுற்றுமதில் அமைத்தல் | C9 | 8000.00 | 1000.00 |

பூநகரி பிரதேச சபை,
பூநகரி.
26.08.2010 (சி/570524)

க.[illegible]
[illegible]
பூநகரி பிரதேச சபை, பூநகரி.


# Computer Courses

New Batches Start

Batch 01: 05.09.2010 Batch 02: 06.09.2010
Batch 03: 24.09.2010 Batch 04: 25.09.2010

INSTITUTE OF INFORMATICS STUDIES

Courses Offered

| | |
|---|---|
| Diploma in Software Development | 6 Mon. |
| Diploma in Computer Hardware & Networking | 6 Mon. |
| Diploma in Business Information System | 6 Mon. |
| Certificate in Office Solution Development | 4 Mon. |
| Certificate in Networking | 4 Mon. |
| Certificate in Java Programming | 4 Mon. |
| Certificate in Visual Programming | 4 Mon. |
| Certificate in Web Designing | 4 Mon. |
| Certificate in Desktop Publishing | 4 Mon. |
| Certificate in Hardware Technology | 4 Mon. |
| Certificate in Eng. Drawing & AutoCAD | 4 Mon. |
| Certificate in Computerized Accounting | 4 Mon. |
| Certificate in Multimedia | 4 Mon. |
| Certificate in Database Management System | 4 Mon. |

"கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்."

மேலதிக விபரங்களுக்கு:
Institute of Informatics Studies (IIS)
#100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2831


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றவர் வென்றார்



வெற்றி தோல்விகளைப் பற்றி உலகம் வைத்திருக்கிற அபிப்பிராயங்கள் அளவுகோல் எப்போதும் சரியாக இருக்க வேண்டும் என்பதில்லை. உலகின் நடைமுறைகள் தோல்வியுற்றதாக அறிவித்தவர் வெற்றிபெற்ற வரலாறுகள் உண்டு. சில சமயம் சிலரது வெற்றிகளைப் புரிந்துகொள்ளும் சக்தியே உலகத்துக்கு இல்லாமல் போவதும் உண்டு.

பாராட்டிய மாநிலத்தில் தேர்வில் தேர்ச்சி பெறாதவனாக அறிவிக்கப்பட்ட மாணவன் ஒருவன் மறுகூட்டல் கேட்டபோது அதிர்ச்சி காத்திருந்தது. அவன்தான் மாநிலத்திலேயே முதலாவது மதிப்பெண் பெற்றவன் சில நாள்களில் வெற்றி, தோல்வி தலைகீழாகிவிட்டது. எனவே பிறரது அளவு கோல்களால் நிர்ணயிக்கப்படுகிற வெற்றி தோல்விகளால் தயவு செய்து பாதிக்கப்படாதீர்கள்.

ஊரும் உலகமும் நிர்ணயித்த வெற்றி- தோல்விகளுக்கு அப்பாலும் சில வெற்றிகள் இருக்கின்றன. இன்னொன்று சொல்கிறேன் தத்துரூபமாக சிலை வடிக்கும் போட்டி நடந்தது. இருசிற்பிகள் ஒரே மாதிரி இரு சிலைகள் செய்திருந்தனர். அவர்களுக்குள் கடும் போட்டி நிலவியது. நடுவர் குழு ஒருவரை வெற்றி பெற்றதாக அறிவித்து. காரணமும் சொன்னது. ஓர் இளம் பெண் தலையில் திராட்சைக் கொத்துக்களைச் சுமந்து செல்வது போல் சிலைகள் இருந்தன. ஒருவர் சிலையில் இருந்த திராட்சை கொத்துக்களை நிஜம் என நம்பிக் காக்கைகள் கொத்த வந்தன. அதனால் அவர் வெற்றிபெற்றார் என்றனர் நீதிபதிகள்.

ஆனால் மற்றவர் செய்த சிலையில் இருந்த பெண்ணையும் அவர் கையில் இருந்த குச்சியையும் நிஜம் என்று பயந்த காக்கைகள் அந்தச் சிலை மீதிருந்த திராட்சைக் கொத்தாமல் விட்டன. இது போட்டியின் நீதிபதிகளுக்குப் புரியாமல் போய்விட்டது. அந்த நீதிபதியைப் பார்த்துக் காக்கைகள் தமக்குள் கேலியாகச் சிரித்தன.இப்போது சொல்லுங்கள் யாருடைய வெற்றி உண்மையான வெற்றி?

வெற்றி- தோல்விகள் வாழ்வின் ஓரிரு சம்பவங்களை மட்டும் சார்ந்தவை அல்ல. அவை முழு வாழ்வையும் சார்ந்தவை இதை புரிந்துகொண்டால் வெற்றி நிச்சயம்!

சுகி.சிவம்.

# வெற்றியாளர்களின் மருந்து

எமது வாழ்க்கையில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் பல் வேறுபட்ட நெருக்கடிகள், துன்பங்கள் நிறைந்தனவாகவே பெரும்பாலும் காணப்படுகின்றது. இது உலக வழமை.

இப்படிப்பட்ட வாழ்வை நாம் வெற்றி கொள்வதற்கு பல்வேறுபட்ட வழி முறைகளைக் கையாண்டாலும் இதற்கு சிறந்த மருந்தாக அமைவது மகிழ்ச்சியே.

இந்த மருந்தை நாம் ஒவ்வொரு வரும் கட்டாயம் அருந்தியேயாக வேண்டும். அப்போதுதான் சோகத்தின் நிரம்பலால் கறைபடிந்து, துருப்பிடிக் கக்கூடியதான எமது வாழ்க்கையை துருப்பிடிக்காமல் இயங்க வைப்ப தற்கு எளிதாக அமையும்.

தீய எண்ணங்களை எவ்வாறு எம் உள்ளத்தில் செல்ல விடாது தடுப்பது அவசியமோ, அதே போலத்தான் சோக எண்ணங்களையும் உட்புக விடாமல் தடுப்பதானது மிகமிக அவசியமான தொன்றாகும்.

''இலேசான இதயம் நீண்ட நாள் வாழும்'' என்பது சேக்ஸ்பியர் கருத்து. எனவே நாமும் லேசான இதயத்துடன் வாழ வேண்டுமானால் எம்மை தொடர்ந்துவருகின்ற துன்ப அலை களைத் தூர விரட்டி அடிக்க வேண்டும். அதற்குரிய மிகச்சிறந்த மருந்து சிரிப்பு மட்டுமே.

'சிரித்துக் கொழுத்துப் போ' என் பது ஓர் ஆங்கிலப் பழமொழி. இதன் அர்த்தத்தை நாம் புரிந்து கொண்டால் மருந்து மாத்திரைகளின் செலவைக் குறைத்துக் கொள்வதுடன் எமது உடல் நிலையையும் பாதுகாத்துக் கொள்ள லாம்.



சிரிப்பானது எம்முடைய சுவாசப் பையில் ஆரம்பித்து இதயம், வயிறு ஆகிய எல்லாவற்றையுமே ஒரு குலுக் குக் குலுக்கி விடுகிறது. இதனால் எமது உடலில் சாதாரண நிலையில் ஓடிக் கொண்டிருக்கும் இரத்தமானது துள் ளிக் குதித்து உடல் முழுவதும் பாய் கிறது. இதனால் எம் உடலில் இனம்புரியாத ஒரு சத்தி பிறக்கிறது. இதயம் சீராகத் துடிக்கிறது. ஜீரண உறுப்புக்கள் துரித மாக வேலை செய்கின்றன. கண்கள் பிரகாசம் அடைகிறது. சுவாசப்பை சுருங்கி விரிந்து கரிமல வாயுவை வெளியேற்றுகிறது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நாளும் சிரித்து மகிழ எவ்வளவோ விடயங்கள் இருக்கின் றன. ஆனால் நாம் எவருமே மனப்பூர் வமாகச் சிரித்து அனுபவிப்பதில்லை. அதில் கூட கஞ்சத்தனமாகவும் கருமியாகவும் தான் இன்னமும் இருக்கி றோம்.

சிரிக்க வேண்டும் என்பதற்காக மற்ற வர்களை ஏளனம் செய்து, அவர்க ளைத் துன்பப்படுத்தி நாம் சிரித்து மகிழவேண்டும் என்று ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது. இதில் கவிஞர் கண்ணதாசனின் கருத்தையும் கவனத் தில் கொள்ள வேண்டும். அதாவது 'சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழக்கூடாது'

எனவே மனிதனாப் பிறந்த நாம் அனைவரும் சிரிப்பு என்னும் மருந்தை உள்ளெடுத்து துன்ப துயரங்களை தூர விரட்டி வாழ்வோமானால் இயற் கையும் எங்களுடன் சேர்ந்து சிரித்து மகிழும் என்பதில் ஐயமில்லை.

# சுமையை இறக்குங்கள்

ஓர் ஊரில் பெரியவர் இருந்தார். அந்த ஊரில் எல்லோரும் கோயிலுக்கு போவார்கள். அவர் மட்டும் போவதில்லை. இது மற்றவர்களுக்கு வியப்பாக இருந்தது. ஒருவர் அவரிடமே சந்தேகத்தைக் கேட்க அந்தப் பெரியவர் சொன்னார். அதுக்குக் காரணம் ஒரு பிச்சைக்காரன்.

ஒரு சமயம் நான் ஒரு நகரத்துக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு அரண்மனை வாசலில் ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டு இருந்தான். உள்ளே இருந்து வந்த மன்னன் பிச்சைக்காரனைப்பார்த்துக் கேட்டான். உனக்கு என்ன வேணும்? ஏன் பேசாமல் இருக்கிறாய் உனக்கு என்ன வேணும். அதற்கு பிச்சைக்காரன் சொன்னான் என்னைப் பார்த்தவுடன் உங்களுக்கு இரக்கம் வரவில்லை. நான் கேட்டால் மட்டும் இரக்கம் எப்படி வரும் என்றான். அந்தப் பிச்சைக்காரன் சொன்னதை யோசித்துப் பார்த்தேன். அதுக்கப்புறம் கடவுளிடம் போவதை விட்டுவிட்டேன்.

ஆண்டவனை அறிந்து கொண்டவர்கள். ஆலயத்துக்குப் போக வேண்டிய அவசியமில்லை.



அதன் பிறகு வழக்கம் போல் அவன் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுத் தூங்கினான். அப்போது ஒரு கனவு அவன் ஒரு கோயிலுக்குப் போகும் போது சாப்பிட்டு மூட்டைகளை அவனுக்கு தெரிந்த கடையில் வைத்துவிட்டு பாதணிகளையும் கழற்றிவிட்டு ஆலயத்துக்குள் போகிறான். வாசலில் காவலுக்கு நின்ற ஒருவன் அவனைத் தடுத்து நீ மட்டும் தனியாக செல்லலாம். உன்னுடன் இருக்கும் மூட்டையை வெளியே விட்டுச் செல்ல வேண்டும்.

அவனுக்கு அதிசயம். எனது கையில் தானே எதுவுமில்லை. ஏன் இப்படிச் சொல்கிறாய் நீ என்றான். அதற்கு அவன் வெளியே பார்க்காதே உள்ளே பார். நான் இருக்கிறேன் என்ற உனக்குள் இருக்கும் நினைப்பு அந்த மூட்டையைத் தான் சொன்னேன்.

அவன் திடுக்கிட்டு விழித்தான். சிந்திக்க ஆரம்பித்தான். அகங்காரம் என்கிற சுமையை இறக்கி வைத்தால். ஆண்டவன் என்கிற வெளிச்சத்தை நாம் நெருங்க முடியும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்





காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்த்திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் ஐயனார் சுவாமி தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடைசூழ வீதி வலம் வருவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:தர்னிகா)



சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழாவின் போது ஆனைமுகப்பெருமான் தேரில் எழுந்தருளி வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.



நீர்வேலி தெற்கு, ஞானவைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தன்று மணவாளக் கோல விழாவில் சுவாமி பூஞ்சப்பரத்தில் எழுந்தருளி வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம். (படம்: நந்தன்)

## கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகளை சந்திக்கவிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,செப்.3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சில நாள்களில் சிறைச்சாலை கைதிகளையும் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளதாக, சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் வீ ஆர் த சில்வா தெரிவித்துள்ளார்.

கைதிகள் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைதிகளைச் சந்திக்கும் திகதி குறித்து இதுவரை அறிவிக்கப்படவில்லை. எனக்குத் தெரிந்தவகையில் அரச தலைவர் ஒருவர், கைதிகளையும், சிறைச்சாலை அதிகாரிகளையும் சந்திப்பது இதுவே முதல் தடவை - என்று கூறினார். (சி)

இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

அனுமதி இலவசம்



Organized by pico Events

செப்டம்பர் 18–19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

மேலும் விவரங்களுக்கு:-
அஞ்சலா – 0778036854

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

JEF
Jaffna Education Fair 2010

BRITISH COUNCIL Daily News pico

Internationally Recognized and Affordable

UK Qualification

edexcel BTEC HND Civil Engineering
Higher National Diploma

Delivered locally...... Recognized globally......

New Batch Starts on 10.09.2010



மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

பொறியியலாளர் ஆக வேண்டும் என்ற உங்கள் கனவை நாம் நனவாக்கித் தருகின்றோம். ஆம் IIS CITY CAMPUS நிறுவனத்தின் குடிசார் பீடத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மேற்படி கற்கை நெறிக்கு மூன்றாம் பிரிவுக்கான மாணவர்கள் உள்வாங்கப் படவுள்ளனர். Edexcel,UK நிறுவனத்தினால் வழங்கப்படும் HND தகைமைக்கான இச்சான்றிதழ் சர்வதேச ரீதியிலே மிகப்பிரபல்யமானதாகும். நீங்கள் பிரித்தானிய பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாகும் வாய்ப்பினை இன்றே பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

IIS CITY CAMPUS
200,Sivan Pannal Road,Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் இருப்பது தெளிந்த நம் சிந்தனையில்

## ஞானக்கதிர்

அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கி நிற்கும் இறைமை, அற்பமான நம் உடலிலே புகுந்து, உயிரிலே கலந்து நிற்கிறது என்றால், அந்த இறைமையின் இன்னருளை என்னவென்று எடுத்துரைப்பது? உடம்பு, உயிர் இரண்டும் மக்களுக்கு மட்டுமன்றி எல்லா உயிரினங்களுக்கும் உள்ளன. அவ்வுயிரினங்களின் உடம்பிலும் உயிரிலும் இறைமை இசைந்துள்ளது. ஆயினும், உள்ளுறைந்துள்ள இறைமையினை உணரும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை. காரணம், ஓர்ந்து உணரும் கருவியான மனம், பிற உயிர்களுக்கு இல்லை என்பதே. மனிதனுக்கு மட்டுமே மனம் என்ற மகத்தான கருவி உள்ளது. அது ஓர்ந்து உண்மைகளை உணரும் ஒப்பற்ற திறம் கொண்டது. 'உருகுவார் உள்ளத்து ஒண்சுடர்' என்று உள்ளத்துள் ஒண் சுடராக இறைவனைக் காணுகின்றார் சம்பந்தர். இதையே 'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்றும் 'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்' என்றும் சொன்னார் திருமூலர். இதனைத் தெளிவான தமிழ் நடையில் 'சிந்தையே கோயிலாகக் கொண்ட எம் பெருமான்' என்றார் மணிவாசகப் பெருமான்.

சிந்தைவேறு சிவன் வேறு அல்ல. சிந்தை தெளியும் போது, சிந்தையில் சிவம் வெளிப்படுகின்றது. இறைவன் அகக் காட்சியில் காணத்தக்கவர். ஆனால் அப் பரம்பொருள் உன் அகக் காட்சியில் தோன்றவில்லை எனில், அப்பரம்பொருளே இல்லை என்று கூறி விடாதே. கலங்கிய தண்ணீரில் சந்திரனுடைய தோற்றம் தோன்றாது. தோன்றாமையால் சந்திரனே இல்லை என்ற முடிவுக்கு வருவது அறிவுடைமை ஆகுமா? உன் உள்ளம் கோபம், சூது,வாது முதலியவைகளினால் கலங்கி இருப்பதனால் பரம்பொருளின் காட்சியைக் காண முடிவதில்லை. ஆனபடியால் முதலில் உன் உள்ளம் தெளியட்டும். தெளியும் போது தெய்வீகம் புலப்படும். இதனால்தான் சிவன் இருப்பது தெளிந்த நம் சிந்தனையிலேயே என்று ஓதுகின்றார் திருமூலர். 'சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச் சிந்தையின் உள்ளே சிவன் இருந்தானே' என்பது திருமந்திரம். எண்ணத்துக்கும் எட்டாத இறைவன் நம் இதயத்தில் உள்ளான். உன்னுதற்கும் அரிய ஒருவன் நம் உள்ளத்தில் ஒளிர்கின்றான். நினைப்பதற்கும் இயலாத நிர்மலன் நம் நெஞ்சிலே நிலவுகின்றான். புறப் பொருளாகக் கண்ட இறைவனை இங்கே அகப்பொருளாகக் காண்கின்றோம். பேருயிராகக் கண்ட இறைவனை நம் ஆருயிரிலே காண்கின்றோம்.

# சைப்பிரஸில் இலங்கைத் தொழிலாளர்களை அடிமைகளாக வைத்திருந்த பண்ணை முற்றுகை

கொழும்பு, செப். 03

சைப்பிரஸ் நாட்டில் தொழிலாளர்களை அடிமைகளாக்கி வைத்திருந்த பண்ணை ஒன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது இலங்கையர்கள் உட்பட பாகிஸ்தான், இந்தியா, எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 32 பேர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சைப்பிரஸ் நாட்டில் சட்ட விரோதமாகத் தங்கியிருந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பண்ணையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டதை அடுத்தே, குறித்த தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

பண்ணையின் உரிமையாளர் தம்மை நீண்ட நேரம் தொழில் செய்ய நிர்ப்பந்தித்தார் என மீட்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த இடம் மிகவும் மோசமானதாக அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்பட்டது. அத்துடன் அவர்கள் அடிமைகள் போல நடத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த 32 வெளிநாட்டுத் தொழிலாளர்களும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் நாடுகடத்தப்படுவார்களா என்பது குறித்து எந்தத் தகவலும் வெளிவரவில்லை.

(சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப். 03

நல்லைக்கந்தன் ஆலயப்பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்காமணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்குதிருமதி பூஷணி கல்யாண ராமனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

கும்பகோணம் கே.சுவாமிநாதன் மிருதங்கமும், என்.மாதவன் கடமும், எஸ்.செந்தூரன் முகர்சிங்கும் வாசிப்பர்.

(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று பி.ப 3 மணிக்கு 'துள்ளி வருகுது வேல்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

சாவல்கட்டு அத்திக்குளி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, தொல்புரம் ஆதி முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை, சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும்.

(201)

* * *

நல்லைக் கந்தனின் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபை நல்லைதிரு ஞானசம்பந்த குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா 'சூதும் வாதும்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(201)








# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## நாம் படும் துயர் நீ அறிய மாட்டாயா

கையிலே அருள் நிறைந்த கூர்வடிவேலேந்தியுமே
மையலார் வள்ளி தெய்வ யானை இரு சக்தியுடன்
கை கூப்பித் தொழும் எமது கடு வினைகள் தீர்ந்திடவே
பைய வொரு கைலாச வாகன மேறிவரும் - முருகா
வையமதில் நாம் படு துயர் நீ அறிய மாட்டாயா
ஐயனே - நல்லூர்க் கந்தனே - எமைக் காத்தருள்வாயே

சா.தணிகாசலபதி
அளவெட்டி

## கண்ணீர் துடைத்திடுவாய்

கோல மயிலேறி கோடி வரமீய் வோனே
கோலத் தமிழுக்கு விடிவெள்ளியானவனே

கயிலாய வாகனத்தில் வந்தெம் கண்ணீர் துடைத்திடுவாய்
காலங்கள் கடக்காமல் எமக்குத் தீர்வென்று தந்திடுவாய்

வேண்டுதல்கள் பலித்திடவே வேலொடு வருவோனே
வெம்பி அழும் உறவுக்கு நிம்மதி தருவோனே
நல்லூரில் நம் வேண்டுதல்கள் நாளிலும் பலித்திடுமே
நல்லை நகர் கந்தன் தாள் பணிந்துமே வேண்டிடுவோம்

மலர் சின்னையா

## நல்லூர் முருகனுக்கு ஒரு மடல்

'நல்லூரில் உறைகின்ற தமிழ்த் தெய்வம் முருகனுக்கு
நாம் உமக்கு அனுப்பும் சிறிய மடல் இது
கற்பனையில் கூட நாம் கருதமுடியாத
கதையெல்லாம் வன்னி மண்ணில் கண்டு -
கலங்கி நிற்கின்றோம்
உற்றார் உறவுகளை உடன் பிறப்பை நாம் -
இழந்தோம்
அங்கோடி இங்கோடி அலைந்து நொந்து விட்டோம்
பட்டதுன்பம் போதுமையா பாரினிலே நாம் -
இனிமேல்
அமைதியாக வாழ்ந்திடவே அருள் எமக்குத் -
தந்திடையா'

வாணி
வியாபாரம்.

## வெற்றியைத் தா முருகா

பிட்டுக்கு மண் சுமந்த
பெருமானின் இளங்குமரா
பெருநிலப் பரப்பினிலே
திருக்கோலம் பூண்டுறையும்
நற்றமிழ் நல்லைக் கந்தா...
உன் கிருபைக்கு நிகரேது?

'கந்தா சுகம் தா' என்று
காலடிக்கு வந்தோரை
ஆரத்தழுவி நிதம்
அருள் கொடுத்து அனுப்புகிறாய்

உன் தலத்தில் அங்கமெல்லாம் புரள
உருண்டு புரண்டு வந்தால்
அருளோ பல கிடைக்கும்
ஆயிரம் இன்பங்கள் தான் கிடைக்கும்

உன் தலத்தில் திருநீறும் சந்தனமும்
தரித்து உனை நினைத்து உருகி நின்றால்
பெருகி நின்ற வினையெல்லாம்
விரைவாகப் பறந்தோடும்

உன் திருப்பாதம் சரணடைந்தோம்
சித்தி தா - சிந்தனைப் பலத்தைத் தா
கலை தா; கல்வி தா; கவினுறும் வாழ்வைத் தா
எல்லா அருளும் தா; எல்லாவற்றுக்கும் மேலாக
நிம்மதியாக வாழ்வதற்கு
நிலையான அமைதியைத் தா

கன்னிமுத்து வெல்லவதியான்
பாண்டிருப்பு
கல்முனை.

## கண்ணினுள் மணியாய்க் காப்பான் நல்லூர்க் கந்தன்

நண்பனும் நாயகனும் தானே யாகி நவைகள் நீக்கும்
பண்பனும் பாருக்கோர் முதலு மாகிப் பரவுவார்க் கின்பனாகி
பெண்ணினார் இருவரோடும் பிரிவின்றி மண்ணும் விண்ணும்
கண்ணினுள் மணியாய்க் காப்பான் நல்லூர்க் கந்த னாவான்.

சிவ.சண்முகவடிவேல்
ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.12.1993

★ வடக்கு-கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள லயனல் பெர்னாண்டோ, ஜனாதிபதி டி.பி.விஜே துங்க முன்னிலையில் பதவி ஏற்றுக் கொண்டதாகத் தெரிவிப்பு.

★ இலங்கையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பேச்சுக் களை ஆரம்பிக்க வேண்டும் என இலங்கை அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் ஐ.நா. சபையின் ஓர் அங்கமான சமயங்கள், சமாதானத்துக்கான உலகப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

02.12.1993

★ வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாக கடந்த வாரம் நியமிக்கப்பட்ட மேஜர் ஜென ரல் ஜெரி டி சில்வா பலாலி முகா முக்கு விஜயம் செய்து பாதுகாப்பு மாநாடு ஒன்றை அவசரமாக நடத்தியதாகத் தெரிவிப்பு.

★ தொண்டமானின் அழுத்தங்களுக்கு தாம் பணிந்துவிடப் போவதில்லை என ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்திருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பு.

03.12.1993

★ திருகோணமலை மாவட்டம், மூதூரில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஓர் அதிகாரி உட்பட எட்டு இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்கட்சி, சுதந்திரக்கட்சியுடன் கூட்டு அமைக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளதாக சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ தெரிவிப்பு.

04.12.1993

★ வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு யாழ். அரசாங்க அதிபர் கா.மாணிக்கவாசகர், பிரதமர் ரணில் விக்கிரசிங்கவிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகத் தெரிவிப்பு.

★ குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலையும் மற்றும் வழிபாட்டுத் தலங்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்களையும் கண்டித்து யாழ்.நகரில் நடத்தப்பட்ட மௌன ஊர் வலத்தில் மதத் தலைவர்கள், மற்றும் பொதுமக்கள் கறுப்புப்பட்டி அணிந்து கலந்துகொண்டதாகத் தெரிவிப்பு.

05.12.1993

★தமிழர் தேசியப் பிரச்சினையை இராணுவ அணுகுமுறை மூலம் தீர்த்துவிட முடியாது என யாழ்.அரச அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிடம் தெரிவிப்பு.

★ பூநகரியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஏற்பட்ட பெரும் தோல்விக்குப் பொறுப்பேற்றே இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரத்னா இம்மாத இறுதியில் பதவியிலிருந்து விலகுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவிப்பு.

06.12.1993

★யாழ்.நகரக் கரையோரப் பகுதிகளில் மூன்று இடங்களில் இலங்கை விமானப் படையினரின் குண்டுவீச்சு விமானங் கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் 17 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்த தாகத் தெரிவிப்பு.

★ விடுதலைப் புலிகள் போராளிகளுடன் எதிர்காலத்தில் அரசு எவ்வித பேச்சு வார்த் தைகளையும் நடத்தமாட்டாது என பிரதம ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துவிட்டதாக இந்திய வானொலி அறிவிப்பு.

07.12.1993

★பூநகரி இராணுவமுகாம் வீழ்ச்சிக்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே வடபகுதி மீது விமானப்படை விமானங்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன என பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவிப்பு.

★வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அரச படை கள் சந்தித்து வரும் தோல்விகளைத் தடுப்பதற்கு, வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் உதவிகளைப் பெறுவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகத் தெரிவிப்பு.

08.12.1993

★ கிழக்கு மாகாணத்தில் பல தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமல் போனதற்கு அல்லது கொல்லப்பட்டதற்குக் காரண மாக இருந்த கப்டன் முனாஸ் என்பவரும் பூநகரித் தாக்குதலின்போது மாண்டு போனதாக செய்திகள் வெளியாகியுள்ளதாகத் தெரிவிப்பு.

★ வவுனியா எல்லைப்புற இராணுவ நிலைகள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக எல்லைப்புற நிலைகளில் உள்ள கனரக வாகனங்கள் மற்றும் ஆயுதங்களை படையினர் பிரதான தளத்திற்கு மாற்றி வருவதாகத் தெரிவிப்பு.

09.12.1993

★ இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுத்துள்ள நிலைப்பாட்டைக் கண்டித்து சர்வதேச ரீதியில் பிரசாரம் மேற்கொள்வதென அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் கூட்டமைப்பு ஒன்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிவிப்பு.

★ வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு அரசை வற்புறுத்தும் நோக்கில் அடுத்தவாரம் முதல் நாடளாவிய ரீதியில் தொடர் பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்துவதென சுதந்திரக் கட்சி முடிவு.

10.12.1993

★ வடக்கு-கிழக்கு யுத்தத்தை நடத்தும் பொறுப்பை இராணுவ சபை ஒன்றிடம் வழங்கவும் அச்சபையில் இரண்டு ஜேர்மன் இராணுவ நிபுணர்களை சேர்த்துக் கொள்வதெனவும் ஜனாதிபதி விஜே துங்க உத்தேசித்து வருவதாகத் தெரி விப்பு.

★இலங்கையில் இந்தியத் தூதராகப் பணியாற்றியவரும், இந்திய வெளியு றவுச் செயலாளருமான ஜே.என்.டிக்ஸிற் எதிர் வரும் ஜனவரி மாதத்தில் சேவையிலிருந்து ஓய்வுபெற இருப்பதாகத் தெரிவிப்பு.

11.12.1993

★மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று இலங்கை மனித உரிமைச் சங்கங் களின் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டு போரை நிறுத்தக்கோரி அரசுக்கு எதிரான சுலோகங்களை எழுப்பிய தாகத் தெரிவிப்பு.

★ யாழ்.ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்தில் ஷெல் தாக்குதலோ, வேறெந்தத் தாக்குதல்களோ படையினரால் இனிமேல் நடத்தப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் உறுதி அளித்துள்ளதாகத் தெரிவிப்பு.

12.12.1993

★இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிசில் வைத்திய ரத்னாவின் ராஜினாமாவை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க ஏற்றுக்கொண்டுள்ளதுடன் புதிய இராணுவத் தளபதியாக ஜெரி டி சில்வாவை லெப். ஜெனரலாக பதவி உயர்த்தி புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கவுள்ளதாகத் தெரிவிப்பு.

★மாகாண சபை முறை ஒழிக்கப்படும் என்று சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதால் மேல்மாகாண முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ய சந்திரிகா முன்வருவாரா என ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க கேள்வி எழுப்பியுள்ளதாகத் தெரிவிப்பு.

13.12.1993

★நாம் இராணுவ ரீதியாக பலவீனம் அடைவோமானால் தமிழர்கள் அழிக்கப்படுவது திண்ணம் என விடுதலைப் புலிகள் இயக் கத்தின் மூத்த உறுப்பினர் பொட்டு அம்மான் தெரிவிப்பு.

★ மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவ முகாம்களில் இருந்து பெருமளவு படையினர் வாபஸ் பெறப்பட்டு வடபகுதிக்கு அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

14.12.1993

★ வடக்கு-கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநர் லயனல் பெர்னாண்டோ அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பா ணத்துக்கு வரவிருப்பதாகத் தெரிவிப்பு.

★ புத்தாண்டில் தமிழ்ப் பகுதிகளில் மிகப் பெரும் தாக்குதலை நடத்த இராணுவம் தயாராகி வருவதால் சமாதானம், பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடம் இல்லை என தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவிப்பு.

15.12.1993

★ வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அரசுக்கு நெருக்குதல்கள் வரத் தொடங்கியிருக்கும் நிலையில் எதிர்க் கட்சித் தலைவி ஸ்ரீமாவோவும், அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரும் அக் கருத்தை வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

# சமயங்களின் மேம்பாட்டுக்காக விசேட குழுக்கள் நியமிக்கப்படும்

## பிரதமர் டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

கொழும்பு,செப்.3

சமயங்களின் மேம்பாட்டுக்காக நாடளாவிய ரீதியில் விசேட குழுக்களை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமயத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகப் பிரதமர் குறிப்பட்டார்.

இதன் முதற்கட்டமாக வவுனியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சமயத் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமயங்களின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலாளர்கள் தலைமையில் உருவாக்கப்படவுள்ள இந்த விசேட சமயக் குழுக்களின் பிரதிநிதிகள் மாவட்ட மட்டத்தில் அந்தந்த சமயங்களுக்குரிய கலாசார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வார்களெனப் பிரதமர் டி.எம்.ஜெயரத்ன கூறினார்.

இத் திட்டத்தின் நிறைவில் நாட்டிலுள்ள அனைத்து சமயத் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்துத் தேசிய மாநாடு ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு ஜனாதிபதி தலைமை தாங்குவாரெனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

(சி)

# பிரபல பாதாளக் கோஷ்டித் தலைவர் அதிரடிப் படையால் சுட்டுக்கொலை

கொழும்பு,செப்.3

பிரபல பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் ஒல்கொட்டை விசேட அதிரடிப் படையினரின் சூட்டுக்குப் பலியானார்.

ஜயகொடி ஆராச்சிகே ஒல்கொட் பெரேரா எனப்படும் ஒல்கொட் என்ற போதைப்பொருள் வர்த்தகரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளாக பொலிஸாரிடமிருந்து தலைமறைவாக வாழ்ந்து வந்த ஒல்கொட்டை, விசேட அதிரடிப் படையினர் மினுவன் கொடப் பிரதேசத்தில் வைத்து சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

குறித்த நபரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து கொழும்புக்கு அழைத்து வரும் வேளையில், தப்பிச் செல்ல முற்பட்டார் எனவும் அதன்போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குறித்த நபர் உயிரிழந்தார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒல்கொட், விசேட அதிரடிப் படை அதிகாரி ஒருவரின் கைத்துப்பாக்கியை எடுத்து தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தார் எனவும் அதன்போது விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒல்கொட் என்ற பாதள உலகக் கோஷ்டித் தலைவர் 26 படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும், கடந்த 2000 ஆம் ஆண்டு அவர் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 52
திகதி - 01.09.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து N | அதிர்ஷ்ட இலக்கம் 07 | வெற்றி இலக்கம் 9 1 3 2 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | N | 07 | 9 | 1 | 3 | 2 | 8 | ரூ. 16,471,754.00 | - |
| 1 பரிசு | | 07 | 9 | 1 | 3 | 2 | 8 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 9 | 1 | 3 | 2 | 8 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 1 | 3 | 2 | 8 | ரூ. 10,000.00 | 24 |
| 4 பரிசு | | | | | 3 | 2 | 8 | ரூ. 1,000.00 | 260 |
| 5 பரிசு | | | | | | 2 | 8 | ரூ. 50.00 | 2562 |
| 6 பரிசு | | | | | | | 8 | ரூ. 20.00 | 24781 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 9 | 1 | 3 | 2 | | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | | | 9 | 1 | 3 | | | ரூ. 100.00 | 262 |
| 9 பரிசு | | | 9 | 1 | | | | ரூ. 50.00 | 2591 |
| 10 பரிசு | N | | | | | | | ரூ. 20.00 | 10310 |
| 11 பரிசு | N | 07 | | | | | | ரூ. 100.00 | 1193 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,931,970.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 16,868,722.00




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குமாரசுவாமிபுரம், மயில்வாகனபுரம், கொழுந்துப்புலவுப் பகுதிகளில் மீளக்குடியமரச் சென்ற 255 குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில்

## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, செப்.3

மீளக்குடியேற்றம் என்ற பெயரில் முகாம்களில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட 255 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 215 மக்கள் விசுவமடுப் பகுதியில் மூன்று மாதகாலமாக எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி முல்லைத்தீவு , விசுவமடுப் பிரதேசத்திற்கான பயணத்தினை மேற்கொண்டு மக்களைச் சந்தித்ததன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசுவமடுப் பிரதேசத்தின் குமார சுவாமி புரம், மயில்வாகனபுரம், கொழுந்துப்புலவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 255குடும் பங்களைச் சேர்ந்த ஆயிரத்து இருநூற்றுப் பதினைந்து பேர் கடந்த ஜூன் மாதம் வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து கொண்டுவரப்பட்டனர்.

இவர்களில் குமாரசுவாமிபுரம் கிராமத்தினைச் சேர்ந்த 69 குடும்பங்கள் றெட்பானாப் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மயில்வாகனபுரம், கொழுந்துப்புலவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஏனைய குடும்பங்கள் பாடசாலை ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

உலக உணவுத்திட்டத்தினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்ற பொருள்களில் அரிசி வழங்கப்படுவதில்லை. எந்தவித வருமானமும் இன்றி வாழ்ந்து வருகின்ற மக்கள் தமது அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

எந்தவருமானமும் இன்றி வாழ்ந்து வருகின்ற மக்கள் சில மீற்றர்கள் தூரத்தில் உள்ள தமது காணிகளுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. அவ்வாறு செல்கின்றவர்கள் தாக்குதல்களுக்கு உட்படுவதாக கண்ணீர் மல்க எம்மிடம் கவலை வெளியிட்டனர். தமது சொந்தக் காணிகளில் தாம் சென்று ஒரு தேங்காய் கூட எடுக்க முடியாத நிலை உள்ளதாகவும், அங்கிருந்து தேங்காய்கள் திருடப்பட்டு வெளியே கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுவதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

மலசல கூட வசதிகள் இல்லாத நிலையில் அயலில் உள்ள சுடுகாட்டுப் பகுதிக்குச் செல்வதாகவும், இரவுவேளையில் அதற்கும் அனுமதி மறுக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்ற அந்த மக்கள், குறிப்பாக பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று றெட்பானாப் பகுதியில் உள்ள குமாரசுவாமிபுரம் மக்களின் பாவனைக்கென ஒரு கிணறு மட்டுமே உள்ளது. ஆனாலும் அந்தக் கிணறு சுகாதாரமற்ற நிலையில் காணப்படுகின்றது. அந்தக் கிணற்று நீரினையே குடிதண்ணீராகவும், ஏனைய தேவைக்காகவும் மக்கள் பயன்படுத்துகின்றனர். அதே கிணற்றினையே அப்பகுதி இராணுவத்தினரும் பயன்படுத்துகின்றனர். இத னால் அங்கு நோய்த்தொற்று ஏற்படு வதற்கான சந்தர்ப்பம் உள்ள அதே வேளை நீர் தட்டுப்பாடும் ஏற்பட்டு வருகின்றது.

இந்த மக்களுக்கான சுகாதார வசதி தொடர்பில் குறித்த பகுதிக்குப் பொறுப்பான சுகாதார அமைப்புக்களோ, பிரதேச சபையோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அந்த மக்கள் தெரிவித்தனர்.

மீளக்குடியேற்றத் தாமதம் குறித்துக் கேட்ட போது,

குறித்த கிராமங்களின் எல்லைகளாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட் டங்கள் காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட மக்களைக் குடியமர அனுமதிப்பதாக அதற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி தெரிவிப்பதாகவும், முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்கு உட்பட்ட பகுதிக்குள் குடியமர அந்த மாவட்டத்திற்குப் பொறுப் பான இராணுவ அதிகாரி அனுமதி மறுப் பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்று மாதங்களாகியும் எந்தவித தொழில் முயற்சியும் இன்றி வாழ்ந்து வருகின்ற குறித்த கிராம மக்கள் தம்மைத் தமது பகுதிகளில் மீளக்குடியமர அனுமதித்தால் போதும், எமது பொருளாதாரம் உட்பட்ட அனைத்தையும் நாமே பார்த்துக்கொள்வோம் எனக் கோரிக்கை விடுத்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அலுவலகங்களுக்கு கணக்காய்வாளர்கள் வருவது வழமையாக இடம்பெறும் நடைமுறையாகும்

## வீடமைப்பு அதிகாரசபையின் முல்லை . முகாமையாளர் விளக்கம்

முல்லைத்தீவு,செப்.3

அலுவலகங்களுக்கு கணக்காய்வாளர்கள்வருவது வழமையாக இடம்பெறும் நடைமுறையாகும் எனத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் சி.மனோகரன் தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை யின் முல்லை அலுவலகத்தில் நிதி கையாடல் என்ற தலைப்பில் கடந்த 28 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பாக அனுப்பியுள்ள விளக்கத்தி லேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

ஜூலை மாதம் கடைசிப் பகுதியில் கொழும்பில் இருந்து வருகை தந்த பொதுக் கணக்காய்வாளர்கள் மூன்று நாள்களாக யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபையில் கணக்காய்வு செய்தார்கள். பின்பு உள்ளக கணக்காய்வாளர்கள் யாழ். அலுவலகத்தில் கணக்காய்வு செய்தபின் முல்லைத்தீவு அலுவலகத்தைக் கணக்காய்வு செய்தனர். கணகாய்வாளர்கள் அலுவலகங்களுக்கு வருவது வழமையாக இடம்பெறும் நடைமுறையாகும்.

முல்லை மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கணக்காளர் யுத்தத்தின் போது இறந்துள்ளார். அலுவலர்கள் யுத்தத்தின் போது காயமுற்றனர். உறவினர்கள் இறந்துள்ளனர். ஆவணங்கள் பெறமுடியாதுள்ளது. இவ்வாறான நிலையில் ஏதோ பெரிய மோசடி நடந்ததாகப் பத்திரிகையில் பிரசுரிப்பது வெந்த புண்ணில் வேல் ஏற்றுவதாக உள்ளது. இவ்வாறான செயற்பாடானது பல கஷ்டத்தின் மத்தியில் வசதியற்ற பிரதேசத்தில் தொழில்புரியும் ஊழியர்களின் மனநிலை பாதிப்பிற்குள்ளாகும். மேலும் புதிய அலுவலகத்துடன் வளர்ந்து வரும் எமது அலுவலகத்துக்கு மாசுபடுத்துவதாகவுள்ளது. எமது வளர்ச்சியைக் கண்டு பொறுக்க முடியாத தீய சக்திகளில் பிரசாரமே இதுவாகும்- என்றுள்ளது. (த)




# புனரமைக்கப்படாத நிலையில் கறுப்பிக் குளத்தின் அணைக்கட்டு

கிளிநொச்சி,செப்.3

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சியில் உள்ள சிறிய குளமான கறுப்பிக் குளத்தின் அணைக்கட்டு இதுவரை புனரமைக்கப்படவில்லை. இப்பகுதியில் மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னரே உடைக்கப்பட்டிருந்த இந்த அணைக்கட்டு மீள்குடியேற்றம் நடந்து நான்கு மாதங்கள் கடந்தும் புனரமைக்கப்படாமல் உள்ளது.

இதனால் இப்பகுதி கால்நடைகள் நீருக்கு அலைந்து திரிவதுடன் இப்பகுதிக் கிணறுகளினதும் நீர்மட்டம் குறைந்துள்ளது. இரணைமடு வாய்க்காலினூடாகவும் மழை மூலமும் நீர் கிடைக்கும் இக்குளத்தின் அணைக்கட்டு புனரமைக்கப்படாததால் நீரானது பயனின்றி வெளியேறிக் கொண்டிருக்கின்றது. குளத்துக்கு வரும் நீர் முழுவதும் வெளியேறிய வண்ணம் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகக் கவனம் எடுத்து இக்குளத்தின் அணைக்கட்டினைப் புனரமைக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.(த-405)

## வலுவிழந்தோர் ஓய்வூதியம்

மன்னாரில் வசித்துவரும் வலுவிழந்த குடும்பத் தலைவர்களுக்கான மாதாந்த ஓய்வூதியம் வந்து சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும், மாந்தை மேற்கு, மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் வசித்து வரும் சுமார் 35 பேர் இத் தொகையைப் பெற்று வருகின்றனர்.கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் இவர்கள் இத்தொகையைப் பெற்று வருகின்றனர். (க-80)

# மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

வவுனியா, செப்.3

வன்னி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மற்றும் குறைபாடுகளை தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடபகுதியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தின் பின்னர் மீள்குடியேறிய மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தங்களது கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

* தற்காலிக கூடாரங்களில் வசிக்கும் மீள்குடியேறிய மக்களின் குடியிருப்புக்களை மழை காலம் தொடங்குவதற்கு முன்பாக நிரந்தர வீடுகளை அமைத்து அல்லது கொட்டைகைகளைப் பலமாக்கிக் கட்டித்தர ஆவன செய்யவும்.

* அத்தியாவசியப் பண்டங்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்குக்கூட விதிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு அனுமதிப்பத்திர முறையினால் முல்லைத் தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியோர் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

இது ரத்துச்செய்யப்படவேண்டும். அங்கு நிவாரணப் பணிகளில் ஈடுபடும் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும்.

* மேட்டுநில காணிகள் மற்றும் வயல் நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் மீள்குடியோர் யானை, பன்றி போன்ற காட்டு மிருகங்களால் பயிர்ச்செய்கை அழிக்கப்பட்டு உயிர் ஆபத்திற்கும் உள்ளாகி வருகின்றனர்.

இவர்களின் பாதுகாப்பிற்காக ஏற்கனவே 1983களின் முன்னர் வழங்கிய துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமங்கள் மீளப் பெறப்பட்டுவிட்டது. இவர்களுக்கு மீண்டும் உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும்.

* மீள்குடியேற்றக் கிராமங்களிற்குச் செல்லும் பாதைகளில் மண்டியுள்ள பற்றைக்காடுகளை அழித்து செப்பனிட வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள அத்தியாவசிய பிரச்சினைகளைத் தீர்க்க ஆவன செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

- இப்படி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார். (ஒ-11)



வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் திருக்கோவிலின் தேர்த்திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள். தேர்த்திருவிழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதையும் தேர் வீதியுலா வருவதையும் அடியவர்கள் இருவர் பறவைக்காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துவதையும் படங்களில் காணலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதேச அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உரையாற்றுவதையும் அருகில் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்:கர்ணி, தட்சி)

# மலேசியாவில் கடத்தப்பட்ட மூன்று பேரும் முஸ்லிம்கள்

கொழும்பு,செப்.3

இரத்தினக்கல் விற்பனைக்காக மலேசியாவுக்குச் சென்றவேளை, அங்கு கப்பம் கோரி கடத்தப்பட்ட இலங்கையர்கள் மூவரும் முஸ்லிம்கள் எனத் தெரியவந்துள்ளது.

முஹமட் மிஹிலர், சம்சுதீன், சரிப்தீன் ஆகியோரே இம்மூவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பம் கோரி கடத்தப்பட்ட மூவரில் உயிரிழந்தவர் சம்சுதீன் எனத் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

கப்பம் கோரி கடத்தப்பட்ட மூவரும் 12 ஆயிரத்து 736 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இரத்தினக் கற்களை விற்பதற்கென மலேசியாவுக்குச் சென்றிருந்தனர்.

கோலாலம்பூர் விமான நிலையத்தை சென்றடைந்த இவர்கள்

குறைந்த விலையில் வாடகை வான் ஒன்றைத் தேடினர். ஆனால், வான் ஒன்றில் ஏறிய பின்னர்தான் தாம் கடத்தப்பட்டிருக்கின்றனர் என்பதை உணர்ந்தனர். இவர்கள் நால்வரால் கடத்தப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட இவர்கள் கோலாலம்பூரின் புறநகர்ப் பகுதியில் உள்ள தொடர்மாடி ஒன்றுக்குக் கொண்டுச் செல்லப்பட்டு அடைக்கப்பட்டனர். கடத்தல்காரர்களிடம் இருந்து தப்புவதற்கு மிஹிலரும், சம்சுதீனும் முயன்றனர். அம்முயற்சியில் சம்சுதீன் இறந்துவிட்டார். ஒருவாறு தப்பிய மிஹிலர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மலேசியப் பொலிஸார் சரீப்தீனை உயிருடன் மீட்டனர்.

மிஹிலர் மலசலகூடத்துக்குச் செல்பவரை போல் அறையைவிட்டு வெளியே வந்திருக்கின்றார். அவருக்குக் காவலாக வந்திருந்த கடத்தல்காரர் ஒருவரை மிஹிலர் தள்ளிவிட்டு பின் மாடியின் கூரையில் ஏறினார். அங்கிருந்து தரைக்குக் குதித்தார்.

அவரின் கால் முறிந்தது. ஆனால், இந்த அமளிதுமளிக்கு இடையில் யன்னல் ஊடாக தரையில் குதிக்க முயன்ற சம்சுதீன் இறந்துவிட்டார். மிஹிலர் பெரிதாக குழறி இருக்கின்றார். பொலிஸார் விவரத்தைத் தெரிந்துகொண்டு உடனடியாக மாடியை சுற்றிவளைத்து முற்றுகை இட்டனர்.

மிஹிலரையும், சரீப்தீனையும் கடத்தல்காரர்களிடமிருந்து பொலிஸார் காப்பாற்றினர்.

இதேவேளை, இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய மலேசியப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் மற்றும் இருவரையும் மலேசியப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# விசாரணைக்கு சவூதி ஒத்துழைக்கும்

கொழும்பு,செப்.3

சவூதி அரேபியாவில் வைத்து இலங்கைப் பணிப்பெண் ஆரியவதியின் உடலில் ஆணிகள் செலுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக சவூதி அரேபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரணவக்க 'அராப் நியூஸ்' இணையதளத்துக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பணிப்பாளர் கிங்ஸ்லி ரணவக்க, அதன் பொது முகாமையாளர் எல்.கே.ருகுணுகே, கீர்த்தி முத்துகுமாரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த திங்கட்கிழமையன்று சவூதிஅரேபியா சென்றிருந்தனர்.

சவூதி அரேபியாவின் தேசிய குழுத் தலைவர் சாட் அல்-பத்தாவை இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சவூதி அரேபியாவின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பது தமது நோக்கமல்ல எனவும், இவ்வாறான சம்பவங்களுக்கு சவூதி அரேபியா உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் இவர் கோரிக்கை விடுத்துள்ளார். (சி)

# வலந்தலை வீதியின் புனரமைப்பு ஒக்ரோபர் மாதம் நிறைவடையும்

யாழ்ப்பாணம்,செப்.3

பொன்னாலை வலந்தலை வீதியின் புனரமைப்பு, அகலிப்பு பணிகள் ஒக்ரோபர் மாதத்திற்குள் நிறைவுபெறும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வீதியின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வீதியில் மேற்றளத்திற்கு 'காப்பெற்' போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணிகளை விரைவாக முடிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் ஒக்ரோபர் மாத்திற்குள் சகல பணிகளும் நிறைவுபெற்றுவிடும் - என்றார். (த-26)

# திருகோணமலை....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துலக தொண்டு நிறுவனப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

சிங்கள கிராமங்களுக்கும் பல ஆண்டுகளாக எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவில்லை என்பதால் இது ஒரு பாதகமான விடயமன்று.

எவ்வாறிருந்தும், சிங்கள சமூகத்தில் காட்டப்படுகின்ற அதிக கரிசனையினால் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் இந்த மாவட்டத்தில் தமது உரிமைகளை இழந்துவிடும் நிலை ஏற்படுமா அல்லது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை பகடையாக வைத்தே இந்த உதவிகள் வழங்கப்படுகிறதா என்பது தெளிவாகவில்லை.

யதார்த்தமான அணுகுமுறை:

இதற்கு முற்றிலும் மாறாக, திருகோணமலையில் 'வெளிநாடுகளால்' மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பில் நான் நேர்காணல் மேற்கொண்ட தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே எந்த அச்சத்தையும் காணமுடியவில்லை.

கிழக்கு மாகாண பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாக தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர் மகேந்திரராஜன்தான் ஒரு பஜிரோவும் பிக் -அப் வாகனம் ஒன்றும் கடற்கரையை நோக்கிச் சென்றதைக் கண்டதாக மறுநாள் கூறினார்.

அவர்கள் கொழும்பைச் சேர்ந்த முதலீட்டாளர்களாக இருக்கக்கூடும் என்று எண்ணிய அவர் அதுபற்றிக் கவனத்திலெடுக்கவில்லை. பணம் உள்ளவர்கள் முதலீடுகளை மேற்கொள்கிறார்கள் ''என்னிடம் பணமிருந்திருந்தால், நானும் ஒரு ஹோட்டல் கட்டியிருக்கலாம்.'' என அவர் சுட்டிக் காட்டினார்.

அபயபுரவைச் சேர்ந்த 42 வயதுடைய மகேந்திரராஜனுக்கு வேலைவாய்ப்பே பெரும் பிரச்சினையாக உள்ளது. திருகோணமலை வளாகம் திறக்கப்பட்டமையினால் 20 பேர் நாளாந்தம் ரூபா. 275 ஊதியமாகப் பெறுகின்றனர்.

''போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் திருகோணமலையில் பல ஹோட்டல்கள் இருந்தன. தற்போது மீண்டும் மக்கள் வந்து போகிறார்கள். இப்பகுதியும் அபிவிருத்தியாகிறது. அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பது பிரச்சினையல்ல. நாம் மீண்டும் பணம் சம்பாதிக்கலாம். தற்போது மேலும் பல கடைகள் திறக்கப்பட்டுள்ளன.''

தனது மோட்டார் வண்டியை தட்டியவாறு மகேந்திரராஜன் பெருமூச்செறிந்தார். தற்போது அவர் புலிகள், குண்டுகள், கைதுகள் மற்றும் ஏனைய பல்வேறு 'பிசாசுகளின்' பயமின்றி எங்கும் சுதந்திரமாகப் போய்வரலாம்.

அதேவேளையில், மேற்கு நாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிப்பு எவ்வாறு முஸ்லிம் கலாசாரத்தை பாதிக்கும் என்று எச்சரிக்கிறார் முபாரக்.

ஹோட்டல் மூலம் வேலைவாய்ப்பும் வருமானமும் கிடைக்கலாம். ஆனால் உள்ளூர் மக்கள் தாம் முன்னர் குளித்தது போல் கடலில் சென்று குளிக்க முடியாது. எல்லா இடங்களிலும் ஹோட்டல் முளைத்துவிடும்.

ஆனால் திருகோணமலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து முபாரக்கும் மகிழ்ச்சியடைகிறார்.

''போர் காலத்தில் எனது கடைக்கு பொருட்க[illegible] கடினமாக இருந்தது. சில இடங்களில் இராணுவ சோதனைக்காக நாம் பொருட்கள் அனைத்தையும் இறக்கவேண்டும்.

காலையில் சென்றீர்களானால் நீங்கள் திரும்புவதற்கு அந்த நாள் முழுக்க தேவை. தற்போது பிரச்சினையில்லை. புதிய கடைகள் திறக்கப்படுகின்றன. மேலும் பொருட்கள் வருகின்றன. இதனால் போட்டி ஏற்பட்டுள்ளது.''

சுனாமி குடியேற்றத்திட்டமான இக்பால் நகரில், 48 வயதுடைய விஜயலட்சுமி, ''மக்களுக்கு வேலை இல்லை. ஹோட்டல்கள் வருவது நல்லது'', என்று கூறுகிறார்.

அருகிருந்த 46 வயதுடைய ராஜேஸ்வவரியும் தலையசைக்கிறார். அவர்களுடைய கணவன்மார் அன்றாட கூலித்தொழிலாளர்கள்.

''தெற்கிலிருந்து மக்கள் இன்னமும் வருகிறார்கள். அது நல்லதில்லையா?. வீட்டு உரிமையாளர்கள் சிலர் வீடுகளை வாடகைக்கு விடுவதன்மூலம் பணம் சம்பாதிக்கிறார்கள்.

குறைவாக செலவழிக்கும் உல்லாசப்பயணிகள்:

வார இறுதி நாட்களில் திருகோணமலைக்கு உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரித்தாலும் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இலங்கையர்களே.

தமது வீடுகளை வாடகைக்கு விடுவதன்மூலம் உள்ளூர்வாசிகள் சிலர் பணம் சம்பாதிக்கிறார்கள் என ராஜேஸ்வரி கூறியது ஒருபுறமிருக்க, திருகோணமலைக்கு வருகைதரும் இலங்கை சுற்றுலாப் பயணிகளால் உள்ளூர் மக்களின் பொருளாதாரம் வளம் பெறுகிறதா என்பது விவாதத்திற்குரியது.

இரண்டு நட்சத்திர விடுதிகளில் ([illegible] பீச் அல்லது சாயா புளூ) [illegible]வர்கள் தவிர, இந்த மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் அல்லது உள்ளூர் மக்கள் எரிவாயு அடுப்பு முதல் அரிசிவரை அனைத்தையும் தம்முடன்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலைக்கு வரும் சுற்றுல[illegible] பயணிகளின் பல பேருந்துகளை நான் திரியாயில் கண்டிருக்கிறேன்.

ஒரு சில வெளிநாட்டவர்களே புழுதி வீதிகளில் களைப்படைந்து முதுகில் தமது பொதிகளை சுமந்தவாறு நடமாடுவதை நான் கண்டேன்.

அவர்கள் தாம் தங்கி நிற்கும் விடுதிகளுக்கு முச்சக்கர வண்டியில்கூட போகாத சிக்கனமானவர்கள். அதிகம் செலவு செய்பவர்களல்ல.

அதிகம் செலவு செய்யும் சுற்றுலாப் பயணிகள் நல்ல நிலையிலுள்ள ஹோட்டல்கள் கிடைக்கும்போதே வருவார்கள் என இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளர் சீனிவாசகம் கலைசெல்வம் தெரிவித்தார்.

''அடிப்படையில் அங்கு போதியளவு ஹோட்டல்கள் இல்லாததால் அங்கு போபவர்கள் கஸ்ரப்படுவார்கள். நல்ல தரத்திலான ஹோட்டல்கள் வரும்போது, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.'' என்றார் அவர்.

திருகோணமலை சுற்றுலாத்துறைக்கான திட்டம் முழுமை பெற்றுவிட்டது. சுற்றுச் சூழல் ஆய்வும் பூர்த்தியாகிவிட்டது, என்றார் அவர். தனியார்துறை அபிவிருத்திக்கு நிலத்தை வழங்குவதே அடுத்த கட்டமாகும். பகிரங்க கேள்வி அறிவித்தல் மூலமே இது மேற்கொள்ளப்படும் என கலைசெல்வம் உறுதியளித்தார்.

ஆனால் இறுதியில் நிலம் யாரிடம் போய்ச் சேரும் என்பதை அனைவராலும் ஊகிக்க முடியும்.

நன்றி: புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை முனையிலிருந்தும் புங்குடுதீவு தபாலகத்திலிருந்தும் ஆரம்பமான ஒலிம்பிக் தீப ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. புங்குடுதீவு தபாலகத்திலிருந்தும் பருத்தித்துறையிலிருந்தும் எடுத்துவரப்பட்ட ஒலிம்பிக் தீபத்தை ஏந்தியவாறு யாழ்.தபாலகத்தினை நோக்கி வருவதை முதல் இரு படங்களிலும் பருத்தித்துறை முனையிலிருந்து எடுத்து வரப்பட்ட ஒலிம்பிக் தீபத்தை கரவெட்டி அஞ்சல் அதிபர் அருளானந்தசோதி, வடபிராந்திய கணக்காளர் திருமதி கலைச்செல்வியிடம் கையளிப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்:தமிழினியன்)*

# 15 வயதுப் பிரிவு அணிகளின் கிரிக்கெட்; அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.இந்து வெற்றி

வலி.வடக்கு,செப்.3

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 16 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் எகலியக்கொட தேசியக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 47.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

பிருந்தாபன் மூன்று நான்குகளுடன் 31 ஓட்டங்களையும் மதுசன் 21 ஓட்டங்களையும் சிந்துஜன், கல்சோபன் தலா 13 ஓட்டங்களையும் சஜீகன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

எகலியகொட தேசியக் கல்லூரியைச் சேர்ந்த தவநிதி 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் பிரேமரத்ன 05 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் டயானந்தா 9.1 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், சமரசுந்தரா 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்க ளுக்கு 02 விக்கெட்டுக்களையும் மாப்பா 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

143 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய எகலியக்கொட தேசியக் கல்லூரி 37.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

பிரேமரத்னா நான்கு நான்குகளுடன் 23 ஓட்டங்களையும் பண்டார மூன்று நான்குகளுடன் 30 ஓட்டங்களையும் சமரக்கோன் 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ருக்ஸ்மன் 10 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் மதுசன் 07 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கௌசிகன் 05 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (த-86)

# பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,செப்.3

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான இவ்வாண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை ராஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில்ராஜரட்டைப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

போட்டியில் பங்குகொள்வதற்காக யாழ். பல்கலைக்கழக அணி இன்று வெள்ளிக் கிழமை ராஜரட்டை புறப்படுகின்றது. (த-23)

# பகீரதனின் பந்து வீச்சினால் வென்றது ஜொலிஸ்ரார் வி.க.

யாழ்ப்பாணம்,செப்.3

பகீரதனின் பந்து வீச்சில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் 91 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வீ.டி ஜெயரட்ண சிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி 27.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கோகுலன், முல்லைத்தீபன் ஆகியோர் முறையே 23,18 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர்களான பகீரதன் 9.5 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும், நாதன் 2 விக்கெட்டுக்களையும், வர்மணன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினார்கள்.

92 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 12.1 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கௌசுதன், சிவராஜா ஆகியோர் ஆட்டம் இழக்காமல் 34, 28 ஓட்டங்களைப் பெற்றனர்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 8 விக்கெட்டினால் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது. (த-23)

# தாச்சிச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**சனிக்கிழமை**

பிற்பகல் 3.30 மணி-

உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழகம் எதிர் சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் 4.30 மணி

கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகம் எதிர் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் 'பி' அணி.

**ஞாயிற்றுக்கிழமை**

பிற்பகல் 3.30 மணி

தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி எதிர் உடுவில் வைகறை விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 4.30 மணி

கைதடி நீயூகிட் விளையாட்டுக் கழகம் எதிர் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக 'ஏ' அணி. (த-23)

# கரப்பந்தாட்டப் போட்டியில் அமைச்சர்கள் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம்,செப்.3

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்திற்கான மாவட்ட மட்டக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னாவும், இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரும்,பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சருமான டிலான் பெரேராவும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# றேஞ்சர்ஸ் சம்பியன்

ஊர்காவற்றுறை,செப்.3

தீவக ரீதியில் அம்பிகை நகர் உதய சூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தக் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் வி.கவும் அம்பிகை நகர் உதய சூரியன் வி.கவும் மோதிக்கொண்டன.

இப்போட்டியின் முதலாவது சுற்றில் 25:6 என்ற செற் கணக்கில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் வி.க.முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் உதய சூரியன் அணி பாடுபட்டபோதும் அது பலனளிக்காமல் 21:25 என்ற செற் கணக்கில் தோல்விகண்டு சம்பியனைப் பறிகொடுக்க றேஞ்சர்ஸ் அணி தீவக கரப்பந்தாட்டச் சம்பியனானது. (த-325)

# கோயில் திருவிழாக்களில் பாரம்பரிய விளையாட்டுக்கள்

நாவற்குழி,செப்.3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருவிழா நடைபெறும் கோயில்கள் சிலவற்றில் பாரம்பரிய விளையாட்டுக்கள் மீண்டும் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

மிக அண்மையில் கோப்பாய் கிருஷ்ணர் கோயிலில் தயிர்முட்டி அடித்தல், தீப்பந்த விளையாட்டுக்கள், சிலம்படி, வாள் சண்டை என்பவை இரவு நிகழ்ச்சியாக நடைபெற்றது.

மிக நீண்ட காலப் பகுதிக்குப் பின்பு நடைபெற்ற இக்கிராமிய பாரம்பரிய விளையாட்டுக்களை பக்தர்களும் மிக்க ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.

குறிப்பாகச் சிறுவர்கள் மிக்க குதூகலத்துடன் கண்டு களித்ததைக் காண முடிந்தது. முதியவர்கள் தமது காலத்தில் நிகழ்ந்த சாகச விளையாட்டுக்களையும் அதை நிகழ்த்திய குழுவினரையும், ஊரையும் ஞாபகத்துடன் நினைவு கூர்ந்ததையும் காண முடிந்தது.

தொலைக்காட்சியில் இரவுநேரத் தொடர் நாடகங்களைப் பார்ப்பதையும் தவிர்த்து இக் கிராமியக் கலை வடிவங்களைத் தாம் ஆர்வத்துடன் பார்க்க வந்ததாக மக்கள் பேசிக்கொண்டனர்.

அருகிப் போகும் கிராமியக் கலை வடிவங்களும், கலைஞர்களும் புத்துணர்ச்சி பெறக் கூடிய காலம் மீண்டும் மலர்ந்ததையிட்டு தாம் மகிழ்வதாகக் கலைஞர்கள் சந்தோஷத்துடன் கூறினார்கள். (த-121)

# அரையிறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான 17 வயதுப் பிரிவினருக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் நாளை சனிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

# அநுராதபுரத்துக்கு ஒலிம்பிக் தீபம்

யாழ்ப்பாணம்,செப்.3

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை அநுராதபுரத்தில் ஆரம்பமாகவுள்ள விளையாட்டு விழாவுக்காக யாழ்.மாவட்டத்திலிருந்து அநுராதபுரத்துக்கு ஒலிம்பிக் தீபம் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இதற்கமைய நேற்றுக் காலை 6 மணியளவில் பருத்தித்துறை முனையிலிருந்தும் புங்குடுதீவுத் தபாலகத்திலிருந்தும் தபால் ஊழியர்களினால் ஒலிம்பிக் தீபம் யாழ்.தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டது.

இவ்வாறு எடுத்து வரப்பட்ட ஒலிம்பிக் தீபம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் யாழ்.தபாலகத்திலிருந்து ஏ-9 பாதையூடாக மாங்குளம் வரை எடுத்துச் செல்லப்படும். அங்கிருந்து யாழ். தபாலக ஊழியர்களால் அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்வர். (த-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



அளவெட்டி வடக்கு, அளவெட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி தாமரைமணாளன் நிருபா
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**செல்வன் துசிந்** (துஷா)
இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை தனது
முதலாவது பிறந்த தினத்தை தனது
இல்லத்தில் வெகு விமரிசையாக
கொண்டாடுகிறார். துசிந்தை
தொண்டமானாறு செல்வச் சந்நிதியானின்
அருள்பெற்று வாழ

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, அப்பம்மா,
அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்,
அத்தைமார், மச்சான்மார்,
மச்சாள்மார் மற்றும் நண்பர்கள்.

தகவல்:
அப்பா - தாமரைமணாளன்.

(102791)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்!!



எமது நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி நம்
சாதனைப் பயணங்களில் எமது
வழிகாட்டியாகி மாகாணக் கல்விப் பணிப்பாளராக
பதவியுயர்வு பெற்றுச்செல்லும்

**உயர்திரு.ப.விக்னேஸ்வரன்**

அவர்களை மேலும் பதவிகள் பல பெற்று கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்ற
வேண்டும் என மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்!

NORTH LANKA IIT (Pvt.) Ltd.
Jaffna, Sri Lanka.

---

# Computer Express

**Institute of Information Technology**

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு

## அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book,Tally) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

10/09/2010 க்கு முன் பதிவுகளுக்கு முந்துங்கள். பயன்பெறுங்கள்.

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

Batch i - 03.09.2010 9am or 2pm
Batch ii - 04.09.2010 9am or 2pm
Batch iii - 05.09.2010 9am or 2pm
Batch iv - 06.09.2010 9am or 2pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

No.15 ,Sirampiyady lane
off Stanly Road,
(Cosy Hotel 2nd floor)
Jaffna.
021 222 8250, 0777222422,
0774907444

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

எமது நிறுவனத்தில் ஏற்கனவே கல்வி பயின்று தொடர முடியாமல் இடைநிறுத்திய மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !!!

03.09.2010 தொடக்கம் 20.09.2010வரை எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மீண்டும் கல்வியை தொடரலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

---

# சிங்கப்பூர் சில்லறை வியாபாரம் விற்பனைக்கு

இரத்தினக்கல், நகைகள், கைவினை பொருள்களை 22 வருட காலமாக நகரின் பிரதான இடத்தில் விற்பனை செய்து வரும் வியாபாரம் முழுமையாக விற்பனைக் குண்டு. வியாபாரத்தை உடன் எடுத்து நடத்த ஆர்வமுள்ளவர்கள் மேலதிக விவரங்களுக்கு கொழும்பு வந்துள்ள உரிமையாளரை செப். 4ஆம் திகதிக்குள் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: D.சில்வா
0771 - 255363, 0112 - 736738

---

# வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளுமுள்ள வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, சுன்னாகப் பகுதிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 2557020 (102792)

---

# SHAMROCK ஈச்சமோட்டை, யாழ்.

A/L 2012 இணைந்த கணிதம்
D.கண்ணன் B.Sc. *Sat,Sun 6pm*
CHE - M.A.நிரோஜன் B.Sc. *Mon, Wed, Fri* 6.15am
Phy - ஆசிரியர் Wed, Fri 6pm
Bio - R.குகானந்தன் B.Sc. wed, Fri 4.30pm
* Gr 1 முதல் O/L வரை
*Eng Med 6 To 11

(சி/570531)

---

# நல்லூர் மகோற்சவகால மாபெரும் மலிவு விற்பனை...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள் கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கால்மிதி பேசன்கள் போன்றவற்றை தரமான மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

**ஸ்ரார் செரமிக்ஸ்**
**இல.05, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.** தொ.பே: 0215672061, 077 7578277.

---

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.3

இருபாலைகிழக்கு, கேணிக்குளம்பதி வங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(204)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது வலயத்தில் முன்னாள் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்
திருமதி சத்தியபாமா தனபாலசிங்கம் அவர்களின் கணவர்

**அமரர் நல்லையா தனபாலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும், அனைத்து அலுவலர்களும். (102788)
வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.

---

நீங்கா நினைவுகளுடன் நெஞ்சை விட்டகலா விண்ணக வாழ்வின்

# 31ஆம் நாள் நினைவு



**நாகராசா கமலாம்பிகை**

மண்ணில் 20*09*1934

விண்ணில் 06*08*2010

எழுபத்தாறு ஆண்டுகளை முந்திக் கடந்த உங்களை
முந்தல் நகர் காலன் முடித்து விட்டான் நொடிப் பொழுதில்
இறப்பின் பின் யாதெனக் கேட்போம் இறந்து பாரென இறைவன் பணித்தான்
பணித்தவன் பாதம் கண்டு - நீங்கள் பரகதி சென்று இளைப்பாறிட நாம்
பரமனை வேண்டுகின்றோம்

கடந்த 06.08.2010 அன்று நடைபெற்ற எமது தாயார் திருமதி நாகராசா கமலாம்பிகை அவர்களின் மரணச் செய்தி கேட்டுநேரில் வந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரம் அச்சிட்டு, மலர்வளையம் சாத்தி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
குடும்பத்தினர்
[எழில்மோகன் - (கலா)]

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

---

# தவறிவிட்டது

வவுனியாவில் இருந்து கொடிகாமத்திற்கு பஸ்ஸில் பயணம் செய்யும்போது செல்வயேந்திரன் இந்திராணி என்பவரது திருமணச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வங்கிப் புத்தகங்கள், கிளினிக்காட் மற்றும் பல ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கற்கோவளம், பருத் தித்துறை. 077 0802162

---

# SITE ENGINEERS

# TECHNICAL OFFICERS

to work on construction sites in
**Jaffna, Kilinochchi, Mannar & Vavuniya**

Applications to be forwarded by post or e-mail to:

Manager - Administration,
**RANJAN NADESAPILLAI ASSOCIATES**
*Consultants to the Built Environment*
No. 200, George R. de Silva Mawatha, Colombo 13.
Tel: 011 2320748, 4617810/11
E-mail: admanager.ndasso@gmail.com / r_ndasso@sltnet.lk

Architectural, Engineering, Quantity Surveying, Interior Design & Project Management Consultants

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி முன்னாள் ஆசிரியை
பகீரதி சுந்தரலிங்கம்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி கதிரவேலு மகேஸ்வரி
அவர்களின் மறைவையிட்டு
துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரி.
கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

---

# கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தின் மலேரியா தடை
இயக்கப் பிரிவின் பூச்சியியலாளர்
எஸ்.சிவமோகனின் அன்புத் தாயார்
**அமரர் சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்**
02.09.2010 அன்று அதிகாலை சிவபதமடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர் பணிமனை
ஊழியர் நலன்புரி சங்கம்.

(சி/570535)

---

# காரை அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டத்திற்கான பகிரங்க அறிவித்தல்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 19.09.2010ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்படவுள்ளது. இதில் காரைநகர்அபிவிருத்தியில் ஆர்வமுடையவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உதவி அரசாங்க அதிபர்,
காரைநகர்.

(சி/570532)

---

# American

இலங்கையில் முதல்தரமான American Premium water System நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதிகள்/ விற்பனை மேற்பார்வையாளர்கள் தேவை

* FMLG விற்பனை அனுபவத்துடன் வட பகுதியில் உள்ள வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: கஜமுகன் (ESP)
57/47, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
இன்றிலிருந்து 3 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

(102789)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அடுத்த இலக்கு அல் - குவைதா அமெ. ஜனாதிபதி ஒபாமா சூளுரை



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைக் காட்சியில் பேசுவதை ஈராக் தலைநகரான பக்தாத்திலுள்ள ஈராக்கியர் ஒருவர் பார்க்கும் காட்சி

வாஷிங்டன், செப். 03

அமெரிக்கப் படைகளுக்கு ஈராக்கில் வெற்றி கிடைத்துள்ளது. இதற்கு அடுத்த படியாக ஆப்கானிஸ்தான் எல்லையிலும், பாகிஸ்தான் எல்லையிலுமுள்ள அல்-குவைதா தீவிரவாதிகளை ஒடுக்குவதே எமது முக்கியக் குறிக்கோள் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் நிகழ்த்திய உரையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது உரையில் தெரிவித்தவை வருமாறு:-

''ஈராக்கில் சர்வாதிகாரி சதாம் ஹுஸைனின் ஆட்சியை ஒடுக்க அமெரிக்க இராணுவம் 7 ஆண்டுகளுக்கு மேலாகத் தங்கியிருந்து போராடி வெற்றி கண்டது. 'ஈராக் சுதந்திரம்' என்ற பெயரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது அமெரிக்கா வரலாற்றில் மட்டுமின்றி ஈராக் சரித்திரத்திலும் மிகவும் முக்கியமான தொன்றாகும்.

யுத்தம் முடிந்துவிட்டது. இப்போது ஈராக் மக்கள் நிம்மதியுடன் வழ்கின்றனர். தங்கள் நாட்டைக் காத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் போர் முடிவுக்கு வந்தமை ஈராக்கின் நலனுக்கு மட்டுமல்ல, அமெரிக்க நலன் சார்ந்தது. ஈராக் மக்களின் எதிர்காலம் கருதி அமெரிக்கா எடுத்த நடவடிக்கைக்கு மிக அதிகம் செலவிட நேர்ந்துள்ளது.

இருப்பினும், மிகக் குறைந்த எண்ணிக் கையிலான வீரர்களே இப்போது ஈராக்கில் உள்ளனர். ஈராக் இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பது, ஈராக் இராணுவத்தை வலுப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை இவர்கள் மேற்கொள்கின்றனர்.

பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு இவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. ஈராக் அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி அமெரிக்க இராணுவம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் முற்றிலுமாக வாபஸ் பெறப்படும்.

2003ஆம் ஆண்டு ஈராக்கின் மீது அமெரிக்க இராணுவம் படையெடுத்ததிலிருந்து இதுவரை 4,400 அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இது தவிர, தற்போது அமெரிக்காவுக்கு சவாலாக உள்ள அல்-குவைதா தீவிரவாதிகளை ஒடுக்கும் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. அமெரிக்காவுக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபடும் இத்தகைய தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பதுங்கியுள்ளனர்.

இவர்களை முற்றிலுமாக ஒழித்து ஆப்கானிஸ்தானை காக்கவேண்டிய பொறுப்புள்ளது.

தீவிரவாதிகளுக்குத் தளமாக விளங்கும் ஆப்கானிஸ்தானிலிருந்து அல்-குவைதா அமைப்பினரை முற்றிலுமாக வெளியேற்றுவதே எமது முக்கிய நோக்கம்.'' இவ்வாறு ஒபாமா குறிப்பிட் டார்.

இதனிடையே அமெரிக்க இராணுவம் திரும்புவதைக் கண்காணிக்க ஈராக்கிற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ் வந்துள்ளார்.

# கணனியில் ஆபாசப் படம் பார்த்த ஆஸ்திரேலிய அமைச்சர் பதவி நீக்கம்

சிட்னி, செப். 03

அலுவலக கணனிமூலம் இணையதளத்தில் ஆபாசப் படம் பார்த்த ஆஸ்திரேலிய அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர் பவுல்மெக்காலே. இவர் துறைமுகம் மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்தார். இவர் கடந்த 2003ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

2009ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அமைச்சரவையில் இடம்பெற்றார். இந்நிலையில் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற அமைச்சகம் சார்பில் ஒவ்வொரு அமைச்சருக்கும் தங்கள் அலுவலக விவரங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக இணையதள இணைப்புடன் கணினி வழங்கப்பட்டிருந்தது.

அப்படி வழங்கப்பட்ட அலுவலக கணனியில் பவுல் மெக்காலே ஆபாச படம் பார்த்துக் கொண்டிருந்தார் என்றும் இணையதள வாயிலாக சூதாட்டத்தில் ஈடுப்பட்டார் என்றும் முறைப்பாடு எழுந்தது. கையும் களவுமாக சிக்கிய அமைச்சர் உடனடியாக தனது பதவியை இராஜினாமா செய்தார்.

# 'டீன் ஏஜ்' கர்ப்பிணிகளுக்கு மலேசியாவில் தனி பாடசாலை

கோலாலம்பூர், செப். 03

மலேசியாவின் மலாக்கா மாகாண அரசு திருமணம் ஆகாமல் கர்ப்பிணியாகும் 'டீன்ஏஜ்' பெண்களுக்குத் தனிபாடசாலை அமைக்கவுள்ளது. இந்தப் பாடசாலை எதிர் வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து மலேசியாவிலிருந்து வெளிவரும் ஸ்டார் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

மலேசியாவில் மலாக்கா மாகாணத்தில் முறையற்ற வகையில் பிறந்த குழந்தைகள் குப்பையிலும், சாக்கடையிலும், பொது இடங்களிலும் வீசப்படும் செயல் அதிகரித்து வருகிறது.

மேலும் பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அதுமட்டுமின்றி டீன் ஏஜ் பெண்கள் பாலியல் பற்றிய விழிப்புணர்வின்றி திருமணத்திற்கு முன்னர் உடலுறவு கொள்வதால் கர்ப்பம் அடைவதும் அதிகரித்து வருகிறது.

இவர்களைப் பாராமரிக்க மலாக்கா மாகாண அரசு பாடசாலை ஒன்றை எதிர் வரும் 16ஆம் திகதி திறக்கவுள்ளது. இப் பாடசாலையின் தலைவர் அப்துல் ரஹ்மான், அப்துல் கரீம் கூறுகையில், ''தற்போது பாடசாலையில் சேர 30 டீன்ஏஜ் மாணவிகள் விண்ணப்பித்துள்ளனர்'' எனத் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு சாதாரண பாடசாலையில் கற்றுக்கொடுக்கும் கணக்கு, ஆங்கிலம், அறிவியல் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. தங்கிப் படிப்பதற்கு விடுதி வசதியும் உள்ளது'' என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் மலாக்கா மாகாண முதல்வர் கூறுகையில், ''டீன்ஏஜ் மாணவிகள் மத்தியில் பாலியல் குறித்த விழிப்புணர்வு இல்லாததால் ஆண்டுக்கு 170இற்கும் மேற்பட்ட குழந்தைகள் அநாதைகளாக விடப்படுகின்றனர்.இவர்களில் 70 சதவீதம் பேர் டீன்ஏஜ்கள் பெற்ற குழந்தைகள்'' என்று கூறியுள்ளார்.



ஈராக்கிலிருந்து வெளியேறும் அமெரிக்காவின் இராணுவப் படையை வழியனுப்பும் நிகழ்ச்சியில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிட்டன்(இடது) உட்பட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பாக். ஷியா முஸ்லிம்கள் ஊர்வலத்தில் குண்டுத் தாக்குதல்; 28 பேர் மரணம்!

## 180 பேர் படுகாயம்

பாகிஸ்தானில் ஷியா பிரிவு முஸ்லிம்களின் ஊர்வலத்தில் நடத்தப்பட்ட வெடி குண்டுத் தாக்குதல்களில் 28 பேர் பலியாயினர். 180 பேர் காயமடைந்தனர்.

ஷியா பிரிவு முஸ்லிம் மதத் தலைவர் ஹஸ்ரத் அலியின் நினைவு நாளையொட்டி லாகூரில் புதன்கிழமை ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6.35 மணியளவில் பிரார்த்தனை மைதானத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்த இடத்தில் 2 குண்டுகள் வெடித்தன.

ஊர்வலம் நடந்துகொண்டிருந்தபோது இரவு 7.15 மணியளவில் டாட்டா தர்பார் தலத்துக்கு அருகில் சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்தது. இதில் 28 பேர் உயிரிழந்தனர்.

3 இடங்களில் அடுத்தடுத்து குண்டு வெடித்ததை அடுத்து மக்கள் பாதுகாப்புக்காக அங்கும் இங்கும் ஓடினர். இவற்றில் நெரிசலில் சிக்கி பலர் காயமடைந்தனர்.

ஊர்வலத்தில் வந்தவர்கள் ஆத்திரமடைந்து பொலிஸாரைத் தாக்கினர். அருகிலிருந்த பொலிஸ் நிலையத்துக்கும், வாகனங்களுக்கும் தீ வைத்தனர்.

2 குண்டுவெடிப்புகளுக்குத் தற்கொலைப் படைத் தீவிரவாதிகளே காரணம் என மாகாண சட்ட அமைச்சர் ராணா சனவுல்லா தெரிவித்தார். இந்த குண்டுவெடிப் புகளுக்கு, தடைசெய்யப்பட்ட லஷ்கர்-இ-ஜாங்வி- அல் - அல்மி என்ற அமைப்பு பொறுப் பேற்றுள்ளது.

## உலக அரங்கில்

# இறந்துவிட்டது என அறிவிக்கப்பட்ட குழந்தை தாயின் அரவணைப்பில் உயிர்த்தெழுந்தது

## ஆஸி. பெற்றோர்கள் மகிழ்ச்சி; டாக்டர்கள் அதிர்ச்சி

சிட்னி, செப். 03

பிறந்த அடுத்த சில நிமிடங்களிலேயே இறந்துவிட்டது என அறிவிக்கப்பட்ட குழந்தை, தாயின் கத, கதப்பான அரவ ணைப்பாலும், மெல்லிய விசும்பலாலும் உயிர் பிழைத்த அதிசயம் ஆஸ்திரேலி யாவில் நிகழ்ந்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் சிட்னியைச் சேர்ந்தவர் டேவிட். இவரது மனைவி கேட், ஏழுமாதக் கர்ப்பமாக இருந்தார். தங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தால், அந்த குழந் தைக்கு ஜேமி எனப் பெயர் சூட்டவும் முடிவு செய்தனர்.

கேட்டுக்கு சமீபத்தில் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. ஆனால், அந்தக் குழந்தையிடமிருந்து எந்த அசைவும் இல்லை.

டாக்டர்கள் சில சிகிச்சைகளை அளித்தனர். குழந்தையின் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை. குழந்தை இறந்துவிட்டது என டாக்டர்கள் கூறினர். இதைக் கேட்ட டேவிட்டும், கேட்டும் அழுது புலம்பினர்.

தன் பச்சிளம் குழந்தை இறந்துவிட்டதை நம்ப முடியாத கேட், குழந்தையை மார் போடு கட்டி அணைத்துக் கொண்டு, முகத் தோடு முகம் வைத்து கொஞ்சியபடி கண்ணீர் வடித்தார். டேவிட்டும் அழுது கொண்டே, குழந்தையின் தலையை மென்மையாக தடவிக் கொடுத்தார்.

இரண்டு மணி நேரமாக இந்த பாசப் போராட்டம் நீடித்தது. குழந்தையை இரண்டு மணி நேரமாக மார்போடு அணைத்தபடி, அழுதுகொண்டிருந்த கேட், குழந்தையின் காதுக்கருகே சென்று மெல்லிய குரலில் விசும்பலுடன் பேசினார்.

அப்போதுதான், யாரும் எதிர்பாராத அந்த அதிசயம் நடந்தது. இறந்துவிட்டது எனக் கூறப்பட்ட அந்தக் குழந்தையின் உடலில் சிறிய அசைவு காணப்பட்டது. அந்தப் பச்சிளம் குழந்தையின் கைகள் மெதுவாக நீண்டு, தன் தாயின் கரங்களை இறுகப் பற்றியது. இந்த ஆச்சரிய நிகழ்வை நம்ப முடியாமல் கேட், சில நிமிடங்கள் திகைத்துப் போனார்.

அவரது கணவர் டேவிட், உடனடியாக ஓடிச் சென்று டாக்டரை அழைத்து வந்தார். குழந் தையைப் பரிசோதித்த டாக்டர்கள், ''இது வழக்கமாக நடப்பதுதான். இறந்து விட்ட குழந்தை, மீண்டும் பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை'' என உறுதியாகத் தெரிவித்து விட்டனர்.

தன் குழந்தையை விட்டுக் கொடுக்க விரும்பாத கேட், மார்போடு அணைத்துக் கொண்டு அந்தக் குழந்தைக்குத் தாய்ப்பால் புகட்டினார். அதை குழந்தை, ஆர்வத்துடன் குடித்தது. அங்கு நின்றிருந்த டாக்டர், இதை நம்ப முடியாமல் மீண்டும் குழந்தையை பரிசோதித்தார்.

அப்போது அவர், குழந்தையின் இருதயத் துடிப்பு சீராக இருப்பதையும், குழந்தை சரியாக மூச்சு விடுவதையும் உறுதி செய்தார். பின்னர் அவர்,''என்னால் நம்பவே முடியவில்லை. ஆச்சரியத்தில் என்ன பேசுவதென்றே தெரியவில்லை.குழந்தை பிழைத்து விட்டது என்பது உண்மை'' என்றார்.

ஆச்சரியத்திலும், மகிழ்ச்சியிலும் திக்கு முக்காடிப் போன கேட், இதுகுறித்து பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

குழந்தை இறந்து விட்டது என டாக் டர்கள் கூறியதை அடுத்து, அதை மார்போடு அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டேன். என் வாயில் என்ன தோன்றியதோ அதை குழந்தையின் காதருகே, அழுகையுடன் கிசு, கிசுத்தேன். ''உனக்கு ஜேமி என பெயர் வைத்திருக்கிறோம்; உனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள் தெரியுமா? நீ எங்களுக்கு வேண்டும்; உன்னை விட்டு எங்களால் பிரிந்திருக்க முடியாது'' எனக் கூறினேன்.

இரண்டு மணி நேரமாக, குழந்தையை மார்பில் வைத்துக் கொண்டு, அழுதபடி இருந்தேன். அப்போது திடீரென குழந்தையிடம் அசைவு தெரிந்தது. மெல்லக்கண் திறந்து பார்த்தது. அதன் பிஞ்சுக் கரங்கள், என் கை விரல்களை மென்மையாக பற்றிய போது, எனக்கு ஏற்பட்ட உணர்வுகளை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

இந்த நேரத்தில் இந்த உலகத்திலேயே மிக மகிழ்ச்சியான தாய், தந்தையர்கள் நானும், என் கணவரும் தான். இவ்வாறு கேட் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன் திருப்பதியில் சுவாமி தரிசனம்



திருமலை, செப். 03

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பிரதமர் மன்மோகன்சிங், சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் லட்டு, தீர்த்த பிரசாதம் மற்றும் பட்டு வஸ்திரங்கள், சுவாமி படம் ஆகியவை வழங்கப்பட்டன.

திருப்பதியை அடுத்த மன்னவரம் பகுதியில் நேஷனல் தெர்மோ பவர் கோர்ப்பரேஷன் மற்றும் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் மின்சாதன உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நடும் விழா நேற்றுமுன்தினம் நடந்தது. அந்த விழாவில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்துகொண்டார்.

பின்னர் திருப்பதி என்.டி.ஆர். மைதானத்தில் இருந்து 12.30 மணிக்கு குண்டு துளைக்காத கார் மூலம் புறப்பட்டு 1.20 மணியளவில் திருமலையை சென்றடைந்தார். பிரதமர் வருகையை முன்னிட்டு திருப்பதியில் இருந்து திருமலைக்கும், திருமலையில் இருந்து திருப்பதிக்கும் செல்லும் வீதிகளில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பிர தமரின் பாதுகாப்புக் காக அலிபிரி கேட் டில் இருந்து திரு மலை வரை துப்பாக்கிய ஏந்திய பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

திருப்பதி ஏழுமலையான் கோவில் வாசலில், பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு மேள தாளம் முழங்க வரவேற்பளிக்கப்பட்டது.

பின்னர், பிரதமர் மன்மோகன்சிங், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார். தரிசனம் முடிந்ததும், கோவிலில் உள்ள தங்கக் கொடி மரத்தை தொட்டு வணங்கி வழிபட்டார்.

அதைத் தொடர்ந்து கோவில் வளாகத்தில் உள்ள வகுலாதேவி சன்னதி, விமன வெங்கடேஸ்வரசுவாமி, பாஷ் யங்கார் சன்னதி, லட்சுமி நரசிம்மசுவாமி சன்னதிகளில் மன்மோகன்சிங் சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் ரங்கநாயக்கர் மண்டபத்தில் லட்டு, தீர்த்தப்பிரசாதம், பட்டு வஸ்திரங்கள், சுவாமி படங்கள் ஆகியன அவருக்கு வழங்கப்பட்டன. சீக்கைய மதத்தைச் சேர்ந்தவர் இந்துக் கோயிலுக்குச் சென்று வணங்குவதில்லை.

## ஜெயாவின் கோரிக்கை

புதுடில்லி, செப்.3

தமிழக சட்டமேலவைக்கான தொகுதி வரையறை குறித்த பிரச்சினைகளை ஆராய அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழுவை அமைக்க வேண்டும் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா யோசனை தெரிவித் துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அவர் தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தொகுதி வரையறை தொடர்பான வரைவு அறிக்கை முறையானதாக இல்லை என்றும் அந்தக் கடிதத்தில் அவர் கூறியுள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் 171 ஆவது பிரிவின்படி பட்டதாரிகள், ஆசிரியர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு வாக்களிக்க உரிய வாய்ப்பளிக்கும் வகையில் தொகுதிகள் வரையறை செய்யப்பட வேண்டும். ஆனால், இப்போது வெளியிடப்பட்டுள்ள வரைவு அறிக்கை முறையானதாக இல்லை.

## இந்தியச் செய்திகள்

# கச்சதீவை மீட்காவிட்டால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுக்கமுடியாது

## பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் தெரிவிப்பு



சென்னை, செப்டெம்பர் 03

கச்சதீவைத் திரும்பப்பெற முடியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா நாடாளுமன்றில் அறிவித்துள்ளார். ஆனால், கச்சதீவை மீட்காவிட்டால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, கச் சதீவை மீட்க அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழக பாஜக தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

தே.மு.தி.க. தலைமையில் தனி அணி அமையும் என்று அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் கூறியிருக்கிறார்.

தி.மு.கவின் வெற்றிக்கு உதவி செய்யும் வகையில் அவர் செயற்பட்டு வருகிறார். ஆனால், அதையும் மீறி தி.மு.க. தோற்கும் என்ற நம்பிக்கையுள்ளது.

முதல்வர் கருணாநிதியின் குடும்பத்தினர் திரைப்படத் துறையை முழுமையாக ஆக்கிரமித்துள்ள னர். இந்நிலை தொடர்ந் தால் அனைத்துத் துறை களும் அவர்களின் கட் டுக்குள் வந்துவிடும். எந்தத் தொழிலதிபரும் தமிழகத்தில் தொழில் செய்ய முடியாது. எனவே, வரும் சட்டப் பேரவைத் தேர்த லில் தி.மு.க. கட்டாயம் தோற்கடிக்கப்பட வேண்டும். அதற்காக அனைத்துக் கட் சிகளும் வேறுபாடுகளை மறந்து அணி திரள வேண்டும்.

கூட்டணி தொடர்பாக எந்தக் கட்சியும் எங்களைத் தொடர்பு கொள்ளவில்லை. நாங்களும் எந்தக் கட்சியுடனும் பேசவில்லை. வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு சட்டப் பேரவைக்குள் நுழைவோம். அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளோம்.

கச்சதீவு ஒப்பந்தம் ரத்து செய்யப்படாது என்று மக்களவையில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அறிவித்துள்ளார்.

கச்சதீவை மீட்காவிட்டால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, கச்சதீவை மீட்க அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# இந்திய-சீன எல்லைப்பகுதியில் வீதியமைக்கும் பணிகள் தீவிரம்

## மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

இந்திய - சீன எல்லையில் வீதி அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற் றுவருகிறது - என்று இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

எல்லையில் சீனத் துருப்புகளின் நடமாட்டம், அத்துமீறல் போன்றவை கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளன.

இதைக் கவனத்தில் கொண்டு இந்தியத் துருப்புகள் எல்லைக்கு எளிதாகச் சென்று வர வசதியாக இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

ஓகஸ்ட் மாதத்தில் தனது அமைச்சகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து புது டில்லியில் செய்தியாளர்களிடம் ப.சிதம்பரம் கூறியவை வருமாறு -

இந்திய, சீன எல்லையில் 15.22 கி.மீ. தொலைவுக்கு வீதி அமைக்கும் பணிகளும், 2.36 கிலோ மீற்றர் தொலைவுக்கு வீதி அமைப்பதற்கான முன்தயாரிப்புப் பணிகளும் கடந்த மாதம் நிறைவடைந்துள்ளன.

இந்திய, வங்கதேச எல்லையில் 3 கிலோ மீற்றர் தொலைவுக்கு முள்வேலி அமைக்கும் பணியும், 5 கிலோ மீற்றர் தொலைவுக்கு வீதி அமைக்கும் பணியும் நிறைவடைந்துள்ளன. 7 கிலோ மீற்றர் தொலைவுக்கு முள்வேலி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

நக்ஸலைட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் வளர்ச்சிக்காக கடந்த மாதத்தில் 23.54 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள் து.

நக்ஸல் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள 5 மாநிலங்களில் 12 ஆயிரம் கூடுதல் சிறப்புப் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்துறை நவீனமயமாக்கத் துக்காக பல்வேறு மாநிலங்களுக்கு 212 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# சௌந்தர்யா திருமணம் இன்று ரசிகர்களுக்கு அனுமதி இல்லை

## ரஜினிகாந்த் வருத்தம் தெரிவிப்பு



சென்னை, செப். 03

ரஜினிகாந்தின் மகள் சௌந்தர்யாவுக்கு இன்று (வெள்ளிக்கிழமை) திருமணம் நடக்கிறது.

இதையொட்டி ரஜினிகாந்த் விடுத்துள்ள அறிக்கையில், ரசிகர்கள் நேரில் வர வேண்டாம். மணமக்களுக்கு உங்கள் நல்லாசிகளை வழங்குங்கள் என்று கூறியிருக்கிறார்.

நடிகர் ரஜினிகாந்தின் இளைய மகள் சௌந்தர்யாவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மணமகன் பெயர் அஸ்வின். சென்னையைச் சேர்ந்த தொழில் அதிபர் ராம்குமார் - ஹேமா ராம்குமார் தம்பதிகளின் மகன்.

சௌந்தர்யா - அஸ்வின் திருமணம், சென்னை எழும்பூரில் உள்ள ராணி மெய்யம்மை மண்டபத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணிக்கு நடக்கிறது.

முன்னதாக நேற்று (வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு நிச்சயதார்த்த நிகழ்ச்சி நடைபெற்றது.

மணமக்களுக்கு வரவேற்பு அளிக்கும் நிகழ்ச்சி இன்று (வெள்ளிக்கிழமை) இரவு 7 மணிக்கு நடக்கிறது. அப்போது, கண்ணன் குழுவினரின் வீணை கச்சேரி நடைபெறுகிறது.

மகள் சவுந்தர்யா திருமணத்தையொட்டி, ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்து ரஜினிகாந்த் ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். அதில் அவர் -

என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிக பெருமக்களுக்கு என்னுடைய அன்பார்ந்த வணக்கங்கள். என்னுடைய இளைய மகள் செல்வி சௌந்தர்யா - அஸ்வின் திருமணத்துக்கு நீங்கள் நேரடியாக வந்து பார்க்க வேண்டும், வாழ்த்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் தொலைபேசி மூலமாகவும், தபால் மூலமாகவும் எனக்குத் தகவல் வந்துகொண்டிருக்கிறது.

உங்கள் அனைவரையும் அழைப்பதற்கு ஆசையாக இருந்தாலும், இட நெருக்கடி காரணமாகவும், போக்குவரத்து இடையூறு கருதியும் உங்களை அழைக்க முடியவில்லை என மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மணமக்களுக்கு உங்களுடைய நல்லாசிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்று கூறியிருக்கிறார்.



திருவள்ளூர் மாவட்டம் ஸ்ரீநிகேதன் பாடசாலையில் கிருஷ்ண ஜயந்தியை ஒட்டி மழலை வகுப்பில் கல்வி பயிலும் குழந்தை உறியடியில் கலந்துகொண்டு சட்டியை [illegible] மகிழும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசைமணி பத்மஸ்ரீ சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வர் கலைமாமணி பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரத்தின் இன்னிசைக் கச்சேரி நேற்றுமாலை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், சீர்காழி சிவசிதம்பரம் பாடல் இசைப்பதையும், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் சிவசிதம்பரத்துக்கு பொன்னாடை அணிவித்துக் கௌரவிப்பதையும் முறையே முதல் மூன்று படங்களிலும், இசைக்குழுவினர் இசை மழை பொழிவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ரசிகர்களையும் இறுதி இருபடங்களிலும் காணலாம்.

*(படங்கள்: சுகந்தன், டிலீப்)*

# அரசியல் செல்வாக்குடன் தகுதி தராதரமின்றி இனி எவரும் சமாதான நீதிவானாக முடியாது!

கொழும்பு, செப். 03

சமாதான நீதிவான் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற விதி கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக நீதியமைச்சு தெரிவிக்கிறது.

நீதியமைச்சர் அத்தாவுட செனவிரத்னவின் பணிப்புக்கு அமைய இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தகவல் வழங்கியியுள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் 90 ஆயிரம் சமாதான நீதிவான்கள் செயற்பட்டு வருகின்றார்கள் என்றும் ஆனால் அவர்கள் தொடர்பான மிகச் சரியான புள்ளி விவரங்கள் கூட மேற்படி அமைச்சில் இல்லை என்றும் தெரியவந்துள்ளது.

மேலும் சமாதான நீதிவான் பதவிகள் வழங்கப்படும்போது எந்தவொரு தகுதி தராதரங்களும் இன்றி அரசியல் ஆதரவு என்ற தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுவதால் அப்பதவியின் கௌரவத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை உணரப்பட்டுள்ளதால்-எதிர்காலத்தில் அப்பதவிகள் வழங்கப்படுவது தொடர்பாக விண்ணப்பித்துக் கொள்வோரது கல்வித் தகைமைகள் மற்றும் அவர்களது சமுதாய நிலைதொடர்பாக விசேட கவனம் செலுத்துவதற்கு நீதியமைச்சர் தீர்மானித்துள்ளதார் என்றும் அமைச்சின் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள முப்பது சமாதான நீதிவான்கள் தொடர்பாக தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார். (ஒ-22)

## சரத் தொடர்ந்தும் சுகவீனம்

நோய்வாய்ப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகாவுக்கு சிகிச்சை அளிப்பதற்காக விசேட வைத்திய நிபுணர்களை அனுமதிக்குமாறு பொன்சேகாவின் உறவினர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பொன்சேகா காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் தொடர்ச்சியாக வாந்தி எடுக்கின்றார் என்றும் தெரியவருகின்றது.

இதன் காரணமாக கடந்த 31ஆம் திகதி இடம்பெறவிருந்த பொன்சேகாவுக்கு எதிரான இரண்டாவது இராணுவ நீதிமன்றம் இன்று வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அவரை உடனடியாகக் குணப்படுத்த விசேட வைத்தியர்களை அனுமதிக்குமாறு அவரது உறவினர்கள் நேற்று அரசிடம் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாகத் தாம் இராணுவத் தளபதியிடமும் வேண்டுகோள் விடுப்பதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கூறியது. (ஒ-சி)

# முன்னாள் எம்.பி தர்மலிங்கத்தின் 25ஆவது நினைவுதினம் நேற்று

## அஞ்சலி நிகழ்வில் புதல்வர் சித்தார்த்தன்

சண்டிலிப்பாய், செப். 03

மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 25ஆவது நினைவுதினம் நேற்றுக்காலை அவரது தொகுதியான மானிப்பாயில் அனுஷ்டிக்கப்பட்டது.

தாவடி, மானிப்பாய் வீதியிலுள்ள மெருகூட்டப்பட்ட நினைவுத் தூபிக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவரும், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமரர் தர்மலிங்கத்தின் புதல்வருமான த.சித்தார்த்தன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து திருமதி சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பாலச்சந்திரன், முன்னாள் வவுனியா நகரசபைத் தலைவர் வ.லிங்கநாதன் உட் பட கட்சி ஆதரவாளர்கள் பலரும் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அமரர் தர்மலிங்கத்தின் நினைவுக் குழுத் தலைவர் க.கௌரிகாந்தன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வி.சித்தார்த்தன் உட்படப் பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். (ஒ-115)

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தருமரின் பெயர் சூட்ட முயற்சி

கோப்பாயிலுள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு முன்னாளர் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று நேற்றைய நினைவுதின நிகழ்வில் பலராலும் வலியுறுத்தப்பட்டது.

நேற்றுக்காலை தாவடியிலுள்ள தர்மலிங்கத்தின் தூபிக்கு முன்பாக இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் உரையாற்றியவர்களே அன்னாரின் பெயரைக் கல்வியியற் கல்லூரிக்குச் சூட்ட வேண்டுமென்று வலியுறுத்தினர்.

பல தரப்பினரிடமிருந்தும் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு இதற்கான முயற்சியில் ஈடுபடப்போவதாக ஏற்பாட்டாளர்கள் நிகழ்வில் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கல்லூரியை நிறுவுவதற்கு உலக வங்கி நிதியுதவியை வழங்கிய போதிலும், கட்டடம் அமைப்பதற்குக் காணி இல்லாததினால் இத்திட்டம் கைவிடப்படும் நிலையில் இருந்தபோது அமரர் வி.தர்மலிங்கத்தின் புதல்வரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவருமான வி.சித்தார்த்தன் தந்தைக்குச் சொந்தமான கோப்பாயிலுள்ள 240 பரப்புக் காணியை நன்கொடையாகக் கல்லூரி கட்டுவதற்கு வழங்கினார். தொடர்ந்து இக் கல்லூரி கட்டப்பட்டு ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வியைத் தொடர்வ தற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. (ஒ-115)

## ஆயுர்வேத சங்கத்தினர் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப். 03

அகில இலங்கை அரச ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் சங்கத்தினர் இன்று வெள்ளிக்கிழமை பொரளை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

தேசிய வைத்திய பிரதி அமைச்சரின் பிரத்தியேக ஊழியர்கள், பொரளை ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்களிடம் மேற்கொண்டுள்ள அடாவடித்தனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என அகில இலங்கை ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-சி)

# மரண அறிவித்தல்



## திருமதி கதிரேசு வள்ளியம்மை

இளவாலையை பிறப்பிடமாகவும் காக்கைதீவு கொழும்பு - 15ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரேசு வள்ளியம்மை அவர்கள் நேற்று (02.09.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேலு கதிரேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி மார்க்கண்டு செல்லம்மா, சுப்பிரமணியம், திருமதி ஜெயரட்ணம் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காஞ்சென்ற சின்னத்தம்பி மார்க்கண்டு, சுப்பிரமணியம் நாகம்மா, சின்னத்தம்பி ஜெயரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கேதிஸ்வரன், சாந்தீஸ்வரன், யோகேஸ்வரன், ரமேஷ்வரன், தயானந்தன், கோபிநாத், அரவிந்த், கவிதா, சதிதா, பிரசன்னா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயாணத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Wahls Shopping Center,
Bankshall street,
Colombo - 11.

தகவல்:
K.S.மணியம்

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் தவபாலநாதன்

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தவபாலநாதன் நேற்று (02.09.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் -தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும், பொன்னம்பலம் - சிவபாக்கியத்தின் (புங்குடுதீவு) மருமகனும், காலஞ்சென்ற யோகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உதயகுமாரி, தேவபாலன் மற்றும் ஜெயகாந்தன் (சங்கர்), பாஸ்கரன் (இத்தாலி), இராசகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் தில்லைநாயகி (ஜேர்மனி), காலஞ்சென்ற சற்குணசிங்கம், வசந்தகுமாரி மற்றும் பரமேஸ்வரி (இராசாத்தி), தவானந்தராஜா, சிறிகாந்தராஜா, செந்தில்மணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இந்திராணி மற்றும் புஸ்பராணி, புவனேஸ்வரி, நடேசபிள்ளை (கொழும்பு), கனகலிங்கம், ஏகாம்பரநாதன், தவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மதிவதனா, சாந்தி, செந்துரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் கோகுலன், பவலக்ஷன், நிதர்சன், தரணிகா, தனுமிகா (ஜேர்மனி), திவ்விகா (ஜேர்மனி), கீர்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் புளியங்கூடல் (சுருவில்) இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் கோயிலடி,
புளியங்கூடல்.
தொ.பே.: 0778059230

தகவல்:
ஜெயகாந்தன்
(சங்கர் - மகன்)

## மார்க்கண்டு சிவபாலசுந்தரம்

(இளைப்பாறிய அதிபர், யா/ சுந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்)



மூதூர் கட்டைபறிச்சானைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் பின்னர் வைரவர் கோயில் வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிவபாலசுந்தரம் நேற்று (02.09.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கட்டைப்பறிச்சானைச் சேர்ந்த காலஞ்சென்ற மார்க்கண்டு - வள்ளிநாயகி தம்பதியரின் மூத்த மகனும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றகிருஸ்ணப்பிள்ளை - கனகம்மாவின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், 'வினுசா, சிவகாந் ஆகியோரின் அருமை தந்தையும், காலஞ்சென்ற சிறிராததேவி, சிறிரதிதேவி, உத்தமராஜா, ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், விசுவலிங்கம், செல்வராசா, இராசலிங்கம், காலஞ்சென்ற பூங்காவனம், லலிதாராணி, ஜெயராணி, சுகிர்தராணி, பாலேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(03.09.2010) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 20/41 வைரவர் கோயில் வீதி,
கொட்டடி.

*தகவல்:*
சி.சறோஜினிதேவி
(மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் ஆஸி. செல்ல உதவிய புலம்பெயர் தமிழருக்குத் தண்டனை!

மெல்போர்ஸ், செப். 03

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் இலங்கையர்கள் வருவதற்கு உதவி -ஒத்தாசை-வழங்கினார் என்ற வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழர் ஒருவருக்கு ஆஸி. நீதிமன்றம் தண்டனை வழங்கவுள்ளது.

சிட்னியின் மேற்குப் பகுதியில் உள்ள பெண்டில் ஹில் என்கிற இடத்தில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழரான பத்மேந்திரா புலேந்திரன் (வயது - 36) என்பவரே இலங்கை அகதிகள் ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் வருகின்றமைக்கு உதவி வழங்கி இருந்தார் என்பதை நேற்று ஒப்புக் கொண்டார்.

இவர் நீதிமன்றில் சாட்சியம் வழங்கினார். 20 இலங்கையர்கள் கடந்த வருடம் ஜூன் மாதம் 10 ஆம் திகதி ஆஸி. வருகின்றமைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றும் அவர் தமது சாட்சியத்தில் ஒப்புக் கொண்டார்.

இவர் ஆஸ்திரேலியாவில்வைத்துஇலங்கை அகதிகளின் உறவினர்களிடம் இருந்து ஆஸியில் வைத்து 4000 அமெரிக்க டொலர் வரை இலஞ்சமாகப் பெற்றதாகவும் முதல் தடவையாக நீதிமன்றில் ஒப்புக்கொண்டார்.

## தமிழ்க்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அரங்கத்தின் முக்கியஸ்தருமான எம். கே.சிவாஜிலிங்கம் இதுதொடர்பாகக் கூறியவை வருமாறு:-

இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவை கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் சந்தித்துப் பேசினோம். அவரிடம் நாம் முக்கிய 12 கோரிக்கைகளை முன்வைத்தோம்.

அர்த்தமுள்ள மீள்குடியேற்றம், அதி உயர் பாதுகாப்பு வலயத்தைப் படிப்படியாக நீக்குதல், மக்கள் வாழ்விடங்களில் அமைக்கப் பட்டுவரும் இராணுவக் குடி யேற்றங்களை நிறுத்துதல், முழுமையான சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவருதல், யுத்தத்தால் உடைமைகள் அங்கங்கள் போன்றவற்றை இழந்த மக்களுக்கு நட்டஈடு வழங்குதல், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழ்ப் பேசும் பகுதிகளில் இனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துதல், யுத்தகாலத்தில் பின்பற்றப்பட்ட பாதுகாப்பு நடைமுறையைத் தளர்த்துதல், மீள்குடியேற்றத்தை வெளிப்படையாக மேற்கொள்வதுடன் அதற்கு மக்கள், உள்ளூர், வெளிநாட்டு, தொண்டு நிறுவனங்களிடமும் இருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதித்தல், இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அரசியல் தீர்வை நோக்கிய முன்முயற்சியை ஏற்படுத்துதல் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளினதும், யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த போராளிகளினதும் விவரங்களை வெளியிடுவதோடு அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற கோரிக்கைகளை நாம் அவரிடம் முன்வைத்தோம்.

இதுதொடர்பில் கவனம் செலுத்துவதாக நிருபமா ராவ் எம்மிடம் கூறினார். - என்றார்.

இந்தச் சந்திப்பில் சிவாஜிலிங்கத்துடன், ஈ.பி.டி.பி. கட்சியின் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, றொபின், ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் எஸ்.சீ. சந்திரகாசன், பேரின்ப நாயகம், ஈரோஸ் அமைப்பின் சார்பில் பிரபாகரன், சிறிரெலோ சார்பாக உதயராஜ், சுரேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியைச் சேர்ந்த குமரகுருபரன், பத்மநாபா ஈ.பி. ஆர்.எல்.எவ். சார்பில் சிறிதரன், புளொட் அமைப்பைச் சேர்ந்த சதானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இச் சந்திப்பில் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் இதன்போது இந்திய வெளியுறவுச் செயலரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக தமது ஆதரவை தமிழ் மக்கள் விடுதலைப் கூறினார். (ஒ-எ-சி)


NEW SCIENCE CENTRE
Clock Tower Rd., Jaffna
CHEMISTRY - G.BENO (B. Sc)
★ Physical - Fri 3-5 pm ஆரம்பம் இன்று 3 pm

ENGLISH SPOKEN AND GRAMMAR By: A.BRITTO
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: சனி/ஞாயிறு காலை 7.30 04.09.2010
புதன்/வெள்ளி காலை 9 மணி 08.09.2010
இடம்: கொக்குவில், பிரம்படி வீதி.
(கிராம அலுவலர் அலுவலகம் முன்னால்)


## டில்லியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பில் கட்சியின் மத்திய குழுக் கூட் டம் நடந்தது. அப்போது ரணில் இலங்கைத் தமிழர்கள் மீள்குடியேற்றத்திற்கு இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளில் திருப்தி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மீள்குடியேற்றம் குறித்து இலங்கை அரசு எதிர்க்கட்சிகளை ஆலோசிக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசின் செயற்பாடு சரியில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

## வாக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர். போர் நிறைவுபெற்று 16 மாதங்கள் கடந்த நிலையிலும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இலங்கை அரசு எதனையும் மேற்கொள்ளவில்லை.

இந்தப் பெண்கள் பாதிப்படைந்ததற்கு இலங்கை இராணுவமே பிரதான காரணம். அவர்களின் கணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர், காணாமல்போயுள்ளனர், இளம் பெண்கள் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கு உள்ளாகும் அதேசமயம், பலர் கைது செய்யப்பட்டு தடுத்தும் வைக்கப்பட்டுள்ளனர்.

தாய்மார்களுடன் சேர்த்து அவர்களின் குழந்தைகள் கூடத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைக்காத இலங்கை அரசு அவர்களை விடுவிக்கவும் மறுத்து வருகின்றது.

மாகாண அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக கூறி இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 23 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
- இப்படி அவர் தெரிவித்தார்.

## நாடளாவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்படும் என்று வாக்குறுதியளித்தே அரசு ஜனாதிபதித் தேர்தலில் மக்களிடம் வாக்குக் கேட்டது. இப்போது அந்த வாக்குறுதி அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது.

அரசின் இந்த ஜனநாயக விரோத செயற்பாடு தொடர்பில் இந்நாட்டு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர், இந்த நாட்டின் மீது அக்கறையுள்ள அனைவரையும் இந்த அரசு ஏமாற்றிவிட்டது. ஜனநாயக ஆட்சியை இல்லாதொழித்து குடும்ப ஆட்சியைப் பலப்படுத்தவே அரசு முயற்சி செய்கிறது.

அரசின் இந்த ஜனநாயக விரோதப் போக்கை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு எதிராக நாம் நாடாளுமன்றுக்குள்ளும் நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் போராட்டங்களை நடத்த உள்ளோம்.

நாடளாவிய ரீதியில் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தி புதிய அரசமைப்புத் திருத்த யோசனைகளால் நாட்டுக்கு ஏற்படப் போகும் ஆபத்துகளை மக்களுக்கு விளக்கிக் கூறுவோம் - என்றார். (ஒ-சி)


இன்று மாலை மெகா மெஜிக்
இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி
இருகாட்சிகள்
நேரம்: மாலை 3.30மணிக்கும் 6.30 மணிக்கும்
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

ரிக்கற் மண்டபவாயிலில்..
100/= 200/=
T.P: 077 8060 225


# ஐ.தே.கவின் எஸ்.எல். குணசேகரவும் அரசுக்கு ஆதரவளிக்கத் தீர்மானம்

கொழும்பு, செப். 03

18 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிக்க மற்றுமொரு ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முன்வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எல். குணசேகர நேற்றையதினம் இதற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த அரசமைப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தால், அது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பெரிய அளவில் நன்மை சேர்ப்பதாக அமையும்என்றும்அவர்கூறியுள்ளார்.

இந்த நிலையில் தமது தீர்மானத்தைக் கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் போது ஏனைய உறுப்பினர்களுக்கும் அறிவிக்கவிருக்கிறார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றையதினம் அவர் அலரிமாளிகைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார் என உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

## மாலைதீவுக்கு கடல் மணல்!

கொழும்பு, செப். 03

கடல் மணலை மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று நில அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சு கடல் மணல் ஏற்றுமதி தொடர்பான பத்திரத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தது.

கிரிந்த துறைமுக நிர்மாணத்துக்கென சுத்திகரிக்கப்பட்ட கடல் மணலில் எஞ்சியதே இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## அமெ. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ்லில் உள்ள இந்து ஆலயத்தில் வழிபாடு நடத்தினர்.

இவர்கள் சரத் பொன்சேகாவின் விடுதலையை வேண்டியும் இலங்கையில் ஜனநாயகத்தை நிலைபெற வேண்டியும் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ்லில் உள்ள இந்து ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை தேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதில் கலிபோர்னியாவில் உள்ள சிங்கள மக்களும் கலந்துக்கொண்டனர். (அ-சி)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பார்வையிடவும் அறிந்து கொள்ள வழிசெய்ய வேண்டும் என்று முதல்வர்கருணாநிதி பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து பிரதமர் மன்மோகன்சிங் தமிழர்களின் மீள்குடியேற்றப்பணி, நிவாரணப்பணி குறித்து நேரில் கண்டு அறிக்கை தயாரிக்க இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவை இலங்கை அனுப்பி வைத்தார்.

அவர் அங்கு வவுனியா இடைத்தங்கல் முகாம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உட்பட பல பல இடங்களைப் பார்வையிட்டார். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளையும் நிருபமா கேட்டறிந்தார்.

நேற்றுமுன்தினம் அவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இதேவேளை, நிருபமா ராவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இந்தியத் தூதுவர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் வன்னிப் பகுதியில் தமிழர்களின் நிலங்களை இராணுவத் தேவைகளுக்காக அபகரிக்கும் முயற்சியில் இலங்கை அரசு இறங்கியுள்ளது. இதைத் இந்தியா தடுத்துநிறுத்த வேண்டும். இதற்கான அழுத்தத்தை இந்திய அரசு இலங்கைக்கு ஏற்படுத்த வேண்டும் என்று கூட்டமைப்பினர் நிருபமாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கைத் தமிழர்களின் நிலைகளை நேரில் சென்று கண்டறிந்த அவர், அந்த விடயங்கள் பற்றி அறிக்கை தயாரித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று கொழும்பிலிருந்து சென்னை வந்து அங்கிருந்து டில்லி புறப்பட்டுச் சென்ற நிருபமா ராவ், அந்த அறிக்கையை இன்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப் படுகின்றது. (அ-சி)


B.A. PART I
Paper Classes
By: Britto
சனி, ஞாயிறு மாலை 3 மணி
இடம்: Jaffna College Undergraduate Dept.
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
ஆரம்பம்:05.09.2010


## அரசமைப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீல.சு.கட்சி வளர்ச்சியடைந்துள்ளது.

அரசமைப்பு நாட்டு மக்களுக்கு ஏற்ற வகையில் மாறுபட வேண்டும். இந்நாட்டின் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் மாறுபடவேண்டும். அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் மாற்றப்பட வேண்டும்.அரசமைப்பை மாற்றும் காலம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இரண்டாக பிளவுபட்டிருந்த இந்த நாட்டை ஒருங்கிணைத்தோம். நாட்டை அபிவிருத்தி நோக்கி இட்டுச் செல்லும் பொறுப்பு இப்போது எனக்குள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பங்களிப்புச் செய்யவேண்டும். கட்சியைப் பலப்படுத்திக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்வோம்.

சரித்திரத்தில் ஒருபோதும் சதிப்புரட்சி மூலம் ஆட்சியை எமது கட்சி கவிழ்த்ததில்லை. நாம் சதிப்புரட்சியில் ஈடுபடாவிட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கெதிராகப் பலதடவைகள் சதிப் புரட்சி நடந்துள்ளது.

1962ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி, 1964 இல் பத்திரிகைச்சட்டமூலம் போன்ற சதிகளுக்கு ஸ்ரீல.சு.கட்சிக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

அன்று பத்திரிகைச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டபோது சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசைக் கவிழ்க்க முயற்சித்தவர்களின் பிள்ளைகள் இன்றும் அரசைக் கவிழ்க்க சதி செய்கின்றனர். இது குறித்து நாம் கவனமாக இருக்கவேண்டும்.

1977இல் நாம் படுதோல்வி அடைந்தோம். அதிலிருந்து மீள நாம் மிகவும் சிரமப்பட்டோம். சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் குடியுரிமையும் பறிக்கப் பட்டது. ஆயிரக்கணக்கானோரை வீதியில் இறக்கி எதிர்ப்புத் தெரிவிக்கவும் அக்கால கட்டத்தில் எம்மால் முடியவில்லை. அக் காலகட்டத்தில் எமது அலுவலகத்துக்கு எவரும் வருவதில்லை. 60 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டபோதும் நாம் சிறிமாவோ அம்மையாரின் தலைமையில் பாதயாத்திரை, மனிதச் சங்கிலி போன்றவற்றை மேற்கொண்டு கட்சியைக் கட்டி எழுப்பினோம்.

2004 பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் போது ஸ்ரீல.சு.கட்சியொன்று இருக்கவில்லை என்றே கூறவேண்டும். இருந்தும் நாங்கள் பின்வாங்கவில்லை.

2005 ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுக்கும்போது துரதிஷ்டவசமான காலமாக இருந்தது. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்காக கட்சி ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கூட வெளியிடவில்லை. இருந்தும் நாம் வெற்றிபெற்றோம். இவ்வாறு பல தடைகளைத் தாண்டி இன்று ஸ்ரீல.சு. கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுமளவுக்கு கட்சியை வளர்த்துள்ளோம். இது குறித்து ஸ்ரீல.சு.கட்சி உறுப்பினர்கள் பெருமைப்பட வேண்டும். -என்றார். (அ-சி)


CHEMISTRY S.Vasu A/L 2011
பௌதீக இரசாயனம்
ஆரம்பம்: 04.09.2010 (Sat 5.30 pm)
Sat, Sun (5.30 - 6.30 pm)
பகுப்பு இரசாயனம் (புதிய பாடத்திட்டம்)
ஆரம்பம்: 06.09.2010 (Mon 06.15 am)
(Mon, Wed, Fri 6.15 - 7.15 am)
NEC ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.

CHEMISTRY - S.Vasu
A/L Day CLASS
ஆரம்பம்: 05.09.2010 (Sun 3 pm.)
Batch - I - Sat, Sun (3 - 4.30 pm)
Batch - II - Mon, Wed, Thur (6.30 - 8 pm)
NEC ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org